
கல்கி



ALKI நவம்பர் 25, 1956 4 அணா

லக்ஸ் டாய்லெட் சோப்பை நீங்களே உபயோகித்து பார்க்குமாறு சிபார்சு செய்கிருர் லலிதா. "தூய்மை, வெண்மை—இரண்டும் பொருந்திய சோப் இதோ!"

தமது மேனியை அப்பழுக்கின்றி வைத்திருக்க லலிதா எப்பொழுதும் உபயோகிப்பது லக்ஸ் டாய்லெட் சோப். அதன் செறிப்பான நறுமணமுள்ள நுரை எத்தனையோ மெருகேற்றுகிறது என்பதை அவர் அறிவார்.
சினிமா நட்சத்திரங்கள் செய்வதை நீங்களும் பின்பற்றுங்கள்—உங்கள் மேனிக்குப் பாதுகாப்புத் தரும் மென்மையான இப் பராமரிப்பை அளித்திடுங்கள். ஞாபகமிருக்கட்டும், லக்ஸ் டாய்லெட் சோப்பின் அற்புத வெண்மைத் தோற்றமே அதன் தூய்மைக்கு அத்தாட்சி.

லக்ஸ் டாய்லெட் சோப்



சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்

LTS. 494-50 TM

மலர் 16 இதழ் 17

நவம்பர் 25 1956

துன்முகி ஹூ கார்த்திகை 10


கல்கி

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.



பாக்யசாலிக் குழந்தை!
அனுபவமுள்ள அப்பா!
Johnson's
ஜான்ஸன்ஸ் பேபி பௌடர்
Johnson's
BABY
POWDER
இலவசம
பி.ஓ. பாக்ஸ் 1976, டிபார்ட்மெண்ட் 20 V
பம்பாய்
JB. 3022



மலர் 16
இதழ் 17

தமிழ்த்திரு நாடு தன்னைப் – பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

துன்முகி ௵
கார்த்திகை 10

சுபிட்சத் திட்டமும் சர்க்கார் கடமையும்

சுதந்திரம் பெற்றதுடன் பாரத மக்களின் போராட்டம் நின்று விடவில்லை. சுதந்திரம் அடைவதற்காக இந்நாட்டிலிருந்து அன்னியர்களை வெளியேற்ற வேண்டியிருந்தது. சுபிட்ச வாழ்வு பெறுவதற்காக வறுமையையும் பசிப்பிணியையும் நாட்டிலிருந்து விரட்ட வேண்டிய அவசியம் இப்போது ஏற்பட்டிருக்கிறது. இந்த அவசியத்தையே, கல்கத்தாவில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி வற்புறுத்திக் கூறி யிருக்கிறது.

உலகத்தில் உள்ள மற்றெந்த நாட்டையும் காட்டிலும் இந்தியாவில்தான் விளைச்சல் விகிதம் மிக மிகக் குறைவாக இருக்கிறது. இந்த விகிதம் ஒரு சில வருஷங்களில் இரட்டிப்பாக வேண்டும். அதாவது இப்போது ஒரு ஏக்கரில் எவ்வளவு தானியம் விளைகிறதோ, அதைப்போல் இன்னும் ஐந்து ஆண்டுகளில் இரண்டு மடங்கு அதிகமாக விளைய வேண்டும். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முக்கிய அம்சங்களில் இதுவும் ஒன்றாகும். பண வீக்கத்தைத் தடுக்கவும் விலைவாசிகள் குறையவும் உணவு உற்பத்தி பெருக வேண்டியது அத்தியாவசியம் என்பதைச் சொல்லவேண்டியதில்லை. விவசாயத்தை முக்கிய தொழிலாகக் கொண்ட பாரதநாடு உணவுப் பொருள்களுக்கு என்றென்றும் வெளிநாடுகளின் தயவை நாடும்படி நேருவது வெட்கக்கேடான விஷயம் அல்லவா?

இந்திய மக்களுக்குத் தேவையான உணவு இந்த நாட்டிலேயே உற்பத்தியாவது தான் சுபிட்ச வாழ்வுக்கு முதற்படியாகும். அடுத்தபடியாக, முக்கிய சாதனங்களின் உற்பத்திக்கான தொழில் துறைகளும் பெருக வேண்டும். சுரங்கச் செல்வங்களும் மற்ற மூலப்பொருள்களும் இந்தியாவில் அபரிமிதமாக இருந்தும், வருஷந்தோறும் பல கோடிக்கணக்கான தொகை பெறுமானமுள்ள சாதனங்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாக வேண்டியிருக்கிறது.

நவீன யந்திரங்களைத் தவிர, இரும்பு எஃகு சாதனங்கள், யந்திரக் கருவிகள் முதலிய பல்வேறு பொருள்களும் வெளி நாடுகளிலிருந்து இறக்குமதியாவதால், கோடிக்கணக்கான தொகை அந் நாடுகளுக்குப் போய் விடுகிறது. தற்போது வருஷந்தோறும் சர்க்கரைக்காக மாத்திரம் ஐம்பது கோடி ரூபாய் வெளிநாடுகளுக்குப் போகிறதெனில், நமது நாட்டின் மோசமான பொருளாதார நிலையை ஊகித்துக் கொள்ளலாம்.

பெரிய யந்திரத் தொழிற்சாலைகள் ஏற்படும் வரையில் மேலே குறிப்பிட்ட சாதனங்களுக்கு நாம் தாற்காலிகமாக வெளிநாடுகளை எதிர்பார்த்துத்தான் தீரவேண்டும். இந்த நிலைமைக்கு மாற்று மருந்து எதுவும் இல்லை.

ஆனால், சர்க்கரை போன்ற பல பொருள்களின் உற்பத்திக்கான வசதிகள் நம் நாட்டில் இருந்தும் கூட, அந்த வசதிகளை உருவான முறையில் பயன் படுத்திக் கொள்ளாதது பெரும் குற்றம் என்றுதான் சொல்ல வேண்டும்.

பாரத நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்கு, பாரத மக்களின் சுபிட்ச வாழ்வுக்கு வெளி நாடுகளிலிருந்து வரும் பண்டங்களின் இறக்குமதி குறைய வேண்டியது அவசியமாகும். அதுபோல் நம் நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி அதிகமாக வேண்டியதும் அவசியம்.

தற்போது முக்கியமாக ஜவுளிகள், தேயிலை, சணல், எண்ணெய் வகைகள், பிண்ணாக்குகள், தோல் முதலியவை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. இவற்றின் தரம் சிறந்ததாக இருந்தால்தான், ஏற்றுமதி பெருகும் என்று இந்திய சர்க்கார் வர்த்தக மந்திரி ஸ்ரீ மொரார்ஜி தேசாய் கூறியிருப்பதை வர்த்தக சமூகம் கவனிக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

உலக மார்க்கெட்டுகளில் சில நாடுகளின் பொருள்கள் புகழ் பெற்று விளங்குவதைப் பார்க்கிறோம். அதுபோல், இந்தியா ஏற்றுமதி செய்யும் பண்டங்களுக்கும் நல்ல பெயர் ஏற்படும் வகையில் அவற்றின் தரம் உயர்வாக இருக்கவேண்டும் என்று ஸ்ரீ மொரார்ஜி தேசாய் கூறியிருப்பதை எவரும் ஆட்சேபிக்க முடியாது.

இப்போது இந்தியாவிலிருந்து ஏராளமான தோல்கள் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. வெறும் தோல்களாக அனுப்பாமல், இந்தத் தோல்களிலிருந்து பல வகை சாதனங்களை உற்பத்தி செய்து ஏன் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடாது என்று ஸ்ரீ தேசாய் கேட்டுள்ளார்.

இந்தியாவின் ஏற்றுமதி வர்த்தகம் பெருகுவதற்கு ஸ்ரீ தேசாய் கூறியுள்ள சிறந்த யோசனைகளை இந்திய உற்பத்தியாளர்கள் கவனித்து, தகுந்த முறைகளைக் கைக்கொள்ள முற்படுவார்கள் என்று நம்புகிறோம்.

* * *

பாரதநாட்டின் பொருளாதாரத் துறையில், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கட்டிக் காட்டியுள்ள குறைகளை உடனடியாக நிவர்த்திப்பதென்பது முடியாத காரியம். அது, 1961—ல் முடிவுறும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் வெற்றியையே பொறுத்திருக்கிறது.

அதற்காக, "உற்பத்தியைப் பெருக்குங்கள்; தேவைகளைக் குறைத்துக் கொள்ளுங்கள்" என்ற மந்திரத்தை அ. இ. கா. கமிட்டி மக்களுக்கு உபதேசம் செய்திருக்கிறது. மக்களின் ஒத்துழைப்பினால்தான் முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் வெற்றி பெறுவது சாத்தியமாயிற்று. எனவே, நாட்டின் முன்னேற்றத்துக்காகச் சர்க்கார் கைக்கொள்ளும் முறைகளுக்கு மக்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் என்பதில் சந்தேகமில்லை.

உலகிலேயே இந்திய மக்களின் சராசரி வருமானம்தான் மிகவும் குறைவாகும். நாலில் ஒரு மடங்கு மக்கள் அரைப் பட்டினியால் அல்லல்படுவதையும் இந்தியாவில்தான் காண்கிறோம். எனவே, தேவைகளைக் குறைத்துக் கொள்ளுங்கள் என்று வற்புறுத்துவதைக் காட்டிலும், பண வீக்கத்தினாலும், விலைவாசிகளின் உயர்வாலும், ஊழல்களாலும் ஏராளமான தொகை பாழாகி, ஐந்தாண்டுத் திட்டத்துக்குக் குந்தகம் ஏற்படாமல் கண்காணித்து வரவேண்டியது சர்க்கார் கடமை என்பதையே வற்புறுத்த விரும்புகிறோம்.

தண்டனையா? உதவியா?

சமீபத்தில் சென்னைக்கு விஜயம் செய்த தலைவர் ஜெயப்பிரகாச நாராயணன் இந்தியா காமன்வெல்த்திலிருந்து விலகும் எண்ணத்தைப் பற்றித் தமது கருத்தைத் தெரிவித்தார்.

"பிரிட்டிஷ் அரசாங்கம் செய்த குற்றத்துக்குப் பிரிட்டிஷ் மக்களைத் தண்டிப்பானேன்?" என்று அவர் கேட்டார். அதாவது இந்தியா காமன்வெல்த் உறவைக் கத்திரித்துக் கொள்வது பிரிட்டிஷ் மக்களைத் தண்டிப்பதாகும் என்று அவர் கருதுகிறார்.

"காமன்வெல்த்திலிருந்து இந்தியா விலகி விட வேண்டும்" என்று ராஜாஜி, அக்கிரமப் போரை ஈடன் தொடங்கியதுமே சொன்னார். மீண்டும் அதே கருத்தைச் சென்னை சட்டக் கல்லூரியில் வற்புறுத்தினார். அப்படியானால் ராஜாஜிக்குப் பிரிட்டிஷ் மக்களின்மீது அப்படி என்ன கோபம்? ஏன் அவர் அப்படிச் சொல்லுகிறார் என்று யாருக்குமே கேட்கத் தோன்றும்.

பிரிட்டிஷ் மக்களிடமிருந்து ராஜாஜிக்குத் தினம் தினம் கடிதங்கள் வந்தபடி இருக்கின்றன. இந்தியாவுக்குச் சுதந்திரம் தந்த பிரிட்டிஷ் தூதுகோஷ்டியினரில் ஒருவரான லார்டு பெதிக் லாரன்ஸ் ராஜாஜிக்கு மிக உருக்கமான ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்.

"பிரிட்டிஷ் பிரதமர் ஈடன் செய்த காரியத்தைப் பிரிட்டிஷ் மக்களாகிய நாங்கள் அங்கீகரிக்கவில்லை. அதனால் தயவுசெய்து காமன்வெல்த் உறவை வெட்டிக் கொண்டு வெளியேறி விடாதீர்கள்" என்று மிகவும் இறைஞ்சிக் கேட்டிருக்கிறார்.

மிஸ் மூரியல் லெஸ்டர் என்ற மாதரசி பாரத நாட்டுக்குச் சுதந்திரம் வழங்கவேண்டும் என்று பிரிட்டனில் போராடிய புண்ணியவதிகளில் ஒருவர். காந்திமகான் வட்டமேஜை மகாநாட்டுக்குச் சென்றிருந்தபோது, அவரை அன்புடன் வரவேற்று உபசரித்த வாய்ப்பைப் பெரும் பாக்கியமாக இன்று வரை கருதி வருகிறவர். அவர் ராஜாஜிக்கு மிகவும் மனம் நொந்து இம்மாதம் 9—ம் தேதி எழுதியுள்ள கடிதத்தைப் பாருங்கள் :

என் அன்பார்ந்த நண்பர் அவர்களே !

எங்களுக்கு ஏற்பட்டுள்ள அவமானத்தினால் நாங்கள் மிகமிக வேதனைப் படுகிறோம்.

உலகத்தின் பெரு வெறுப்புக்கு நாங்கள் ஆளாகி விட்டோம். அவ்வளவும் எங்களுக்கு வேண்டியதுதான்!


என்றைக்காவது எங்கள் அக்கிரமத்தை ஒப்புக் கொள்ளும் அளவுக்கு யோக்கிய புருஷர்களாக விளங்குவோமா என்பது சந்தேகம்.


இந்தியர்களுடைய இனிய நட்பை நாங்கள் இழக்கவேண்டியது நியாயமே. ஏதோ இத்தனை நாட்கள் உங்களுடன் நல்ல உறவு வைத்துக் கொண்டிருந்தோமே என்று ரொம்பவும் மனத்திருப்தியடைந்து வந்தேன். இனி அந்த நல்ல உறவை இழக்க வேண்டியதுதான்! அந்த நட்பை இழப்பதால் நாங்கள் அடையப் போகும் மனத்துயரம் பொறுக்க முடியாத சங்கடமாகும். அந்தோ, பரிதாபம்!

எசெக்ஸ் பெரும் துயரத்தில் ஆழ்ந்துள்ள
9—11—56 மூரியல் லெஸ்டர்

இவை தவிர, பிரிட்டிஷ் எதிர்க்கட்சித் தலைவர்கள் ஈடனின் அக்கிரமச் செயலை ஓயாமல் ஒருமுகமாகக் கண்டிக்கின்றனர். பிரிட்டிஷ் பத்திரிகைகளும், கண்டித்து எழுதியுள்ளன. பிரிட்டிஷ் பொது மக்கள் கண்டித்து எழுதும் கடிதங்களைப் பத்திரிகைகள் பத்தி பத்தியாகப் பிரசுரிக்கின்றன. இவை யெல்

தேர்தல் வருகிறது!


"நான் சொல்கிறபடி கேட்டு ஒழுங்காக இருப்பீர்களா?"
காங்கிரஸ் டிக்கெட்
டி.டி.கே.


விசித்திர சவாரி
பாகிஸ்தான் சர்க்கார்
அயல்நாடுகளுடன் ராணுவ ஒப்பந்தம்
மக்கள் அபிப்பிராயம்

லாம் பிரிட்டிஷ் மக்கள் தங்கள் சர்க்காரின் போக்கைப் பரிபூரணமாகக் கண்டிக்கின்றனர் என்பதை உலகத்துக்கு மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.

இவ்வளவு தெளிவாகத் தெரிந்தும், ராஜாஜி காமன்வெல்த்தை விட்டு இந்தியா விலக வேண்டும் என்று கூறுவானேன்? பிரிட்டிஷ் மக்களைத் தண்டிப்பானேன்?

பிரிட்டிஷ் மக்களின் இன்றையப் பரிதாப நிலையைக் கண்டு ஏற்பட்ட அனுதாபத்தாலும் பிரிட்டிஷ் மக்களிடம் அவருக்குள்ள பேரன்பு காரணமாகவுமே ராஜாஜி விலக வேண்டும் என்று கூறுகிறார்.

இந்தியா காமன்வெல்த்தை விட்டு விலகினால், ஈடன் சர்க்காரை மாற்றியமைக்க விரும்பும் எதிர்க்கட்சிக்குப் பெரும் உதவி செய்தவர்களாவோம் என்கிறார் ராஜாஜி. 'ஈடனின் அக்கிரம ஆக்கிரமிப்பினால் இந்தியாவின் நட்பை இழந்து விட்டோம்' என்று தொழிற் கட்சியார் மக்களுக்கு எடுத்துச் சொல்லவும், ஈடனுடைய சகாக்களின் கண்களைத் திறந்து பார்க்கச்செய்யவும் உதவுமென்று கருதுகிறார்.

ஒரு அரசாங்கம் செய்த தவறைப் பேச்சளவில் கண்டித்து விட்டு, சும்மா இருந்து விடுவது, அந்தச் சர்க்காரின் அக்கிரமத்துக்கு நாமும் உடந்தையாக இருக்கிறோம் என்றுதான் பொருள் படும். காமன்வெல்த் உறவிலிருந்து விடுபடுவதால் ஏற்படும் கஷ்ட நஷ்டங்களை அனுபவிப்பதாலேயே, பிரிட்டனின் அக்கிரம ஆக்கிரமிப்பை எவ்வளவு தூரம் கண்டிக்கத் தயாராக இருக்கிறோம் என்பதை உலகமும் பிரிட்டிஷ் மக்களும் நன்கு உணர்ந்து கொள்ள முடியும்.

இப்படிப் பல விதங்களில் பிரிட்டிஷ் மக்களுக்கு உதவவே ராஜாஜி, காமன்வெல்த்தை விட்டு விலக வேண்டும் என்று கூறுகிறார். பிரிட்டனில் ஈடன் ஆட்சி ஒழிந்து தொழிற் கட்சி ஆட்சி ஏற்பட்டால் அது பிரிட்டிஷ் மக்களுக்குச் செய்யும் பேருபகாரமல்லவா? இதை ஜெயப்பிரகாசர் கூறுவது போல் தண்டனையாக எப்படிக் கருத முடியும்?

அமெரிக்கத் தேர்தல் முடிவு

உலகம் ஆர்வத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் முடிந்து விட்டது. ஜனாதிபதி ஜெனரல் ஐசனோவர் இரண்டாவது தடவையாக அப்பதவிக்கு வந்துள்ளார். அவருக்குப் போட்டியாகத் தேர்தலில் ஜனநாயகக் கட்சியின் சார்பில் நின்ற ஸ்ரீ அட்லாய் ஸ்டீவன்சன் இரண்டாவது தடவையாகத் தோல்வியடைந்து விட்டார்.

தாம் பதவிக்கு வந்தால் கொடிய ஹைட்ரஜன் வெடிகுண்டு சோதனையை நிறுத்திவிடுவதாக ஸ்ரீ ஸ்டீவன்சன் உறுதி கூறியிருந்தார். எனவே, அவர் தோல்வியுற்றதைக் குறித்து உலக மக்கள் வருந்துவார்கள்.

எனினும், ஜனாதிபதி தேர்தல் நடைபெறுவதற்கு இரண்டு மூன்று தினங்களுக்கு முன் ஜெனரல் ஐசனோவர் செய்த ஒரு நல்ல காரியத்தை யாரும் அலட்சியமாகக் கருத முடியாது. எகிப்து மீது பிரிட்டன், பிரான்ஸ் படையெடுத்தவுடன், அந் நாடுகள் அமெரிக்காவுக்கு நெருங்கிய நேச நாடுகளாக இருந்தும் கூட, மேற்படி படையெடுப்பைத் தாம் ஆதரிக்க முடியாது என்று ஐசனோவர் தைரியமாக உலகம் அறியப் பிரகடனம் செய்தார். முக்கியமாக இந்தியாவின் கண்டனத்தையும் ஆசியாவின் கண்டனத்தையும் மதித்து அவர் அவ்வாறு பிரகடனம் செய்தது மிகவும் போற்றத் தக்கதாகும். மேற்படி படையெடுப்பை அமெரிக்கா ஆதரித்திருந்தால், இன்று எத்தகைய பயங்கரமான நிலைமை ஏற்பட்டிருக்குமோ! அமெரிக்காவும் ருஷ்யாவும் ஆசிய நாடுகளும் ஒருமிக்கக் கண்டித்ததால் தான் பிரிட்டனும், பிரான்சும் தங்களுடைய அக்கிரமமான, அநீதியான படையெடுப்பை மேற்கொண்டு தொடர்ந்து நடத்தத் துணியவில்லை. அவ்வளவில் ஜெனரல் ஐசனோவரை உலக மக்கள் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறார்கள். ஐசனோவர் உலகத்தின் அபிப்பிராயத்துக்கு மதிப்புக் கொடுத்து ஹைட்ரஜன் குண்டு சோதனையைக் கை விடுவாராயின் அவரை உலக மக்கள் என்றென்றும் போற்றுவார்கள் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

எகிப்து மீது பிரிட்டனும் பிரான்சும் படையெடுத்ததால் ஆத்திரமடைந்த அரபு மக்கள் எண்ணெய்க் குழாய்களைத் தகர்த்து விட்டார்கள் அல்லவா? அதனால் பிரிட்டனிலும் மற்ற நாடுகளிலும் பெட்ரோல் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. அதைச் சமாளிப்பதற்காகத் தங்களுக்குத் தேவையான பெட்ரோல் அனுப்பி உதவி புரிய வேண்டுமென்று பிரிட்டன் கோரியதற்கு அமெரிக்கா இணங்க மறுத்து விட்டதாகத் தெரிகிறது. எகிப்திலிருந்து பிரிட்டனும் பிரான்சும் தங்கள் துருப்புகளை வாபஸ் செய்து கொண்டாலன்றி, எவ்வித உதவியும் புரிய முடியாதென்று அமெரிக்கா கூறிவிட்டதாம். இச்செய்தி உண்மையாயின் அமெரிக்காவின் நேர்மை சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படும்.

ஜெனரல் ஐசனோவரின் அழைப்புக்கிணங்க, அடுத்த மாதம் ஜவாஹர்லால்ஜி அமெரிக்காவுக்குச் செல்லத் தீர்மானித்திருக்கிறார். இவ்விரு தலைவர்களுடைய சந்திப்பை உலக மக்கள் ஆர்வத்துடன் எதிர்பார்த்து வருகிறார்கள். அதன் பலனாக, அணுகுண்டு, ஹைட்ரஜன் குண்டு பீதி ஒழிய வழி ஏற்படுமாயின், அதுவே உலக சமாதானத்துக்கு முதற்படியாக இருக்கும். உலகத்தையே அல்லோலகல்லோலப் படுத்தியுள்ள எகிப்துப் பிரச்னையில் அமெரிக்காவும் இந்தியாவும் ஒருமித்த கருத்துக் கொண்டிருப்பது நம்பிக்கையளிக்கக் கூடிய விஷயம் அல்லவா? அமெரிக்காவும் இந்தியாவும் முற்றிலும் ஜனநாயக முறைகளில் ஈடுபட்ட நாடுகளாகும். ஆயுத வலிமை வாய்ந்த அமெரிக்காவும், ஆத்ம பலம் பொருந்திய பாரத நாடும் ஒத்துழைக்குமாயின், நெருக்கடியான உலகப் பிரச்னைகள் பலவும் எளிதில் தீரக் கூடிய அற்புதமான சூழ்நிலை உண்டாகும் என்பது நிச்சயம்.


STAINLESS STEEL
VK
M.M. & Co.
V.K. BRAND
நீண்ட காலம் நன்றாக உழைக்கக்கூடிய
ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்களுக்கான
ஒரே டிரேட் மார்க் V. K. பிராண்ட்தான்
எங்கும் விற்கப்படும்
GRAM: "MANMUL" TEL: 71534
MANUBHAI MULCHAND & CO.
BEHIND MUMBADEVI P. O. BOMBAY. 2

அநீதியான நிபந்தனைகள்

இலங்கையில் இந் நாட்டின் பிரஜைகளாகப் பதிவு செய்துகொள்ளப்படாத இந்திய வம்சாவளியினர்கள் இலங்கையில் எவ்வளவு காலம் வரையில் வசிக்க அனுமதிக்கப்படுவார்கள்? அவர்கள் எப்பொழுது நாடு கடத்தப்படுவார்கள்? என்பதை 'இமிகிரேஷன்' அதிகாரிகள் இவ்வாரம் காங்கிரஸ் தூது கோஷ்டி ஒன்றுக்கு விளக்கி உரைத்தார்கள். இந்தியப் பிரஜைகளுக்கு இலங்கை அரசாங்கத்தின் நாடு கடத்தும் கொள்கையினால் ஏற்படும் கஷ்ட நஷ்டங்களைப் பற்றி ஐந்து பொது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் அடங்கிய ஒரு மகாநாடு ஸ்ரீ எஸ். தொண்டமான் தலைமையில் சில வாரங்களுக்கு முன் நடந்ததல்லவா? அதைப் பின்பற்றியே ஸ்ரீ தொண்டமான் தலைமையில் ஒரு தூதுகோஷ்டி இமிகிரேஷன் அதிகாரிகளைச் சந்தித்து நாடு கடத்தும் கொள்கையை விளக்குமாறு கேட்டது.

இலங்கையிலுள்ள இந்தியர்களில் நூறு ரூபாய்க்குக் குறைந்த மாதச் சம்பளம் உடையவர்கள் மூன்று மாத காலமும், ரூபாய் இருநூறு வரை சம்பளம் உடையவர்கள் ஏழு மாத காலமும், ரூபாய் நானூறு வரையில் சம்பளம் உடையவர்கள் ஒரு வருடமும், அதற்கு மேல் சம்பளம் உடையவர்கள் சுமார் இரண்டு வருட காலமும் இருக்க அனுமதிக்கப்படுவார்கள் என்றும் இந்தக்காலவரை முடிந்ததும் அவர்கள் இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பப்பட்டு விடுவார்கள் என்றும் அரசாங்கம் இப்பொழுது கடைப்பிடிக்கும் கொள்கை இதுதான் என்றும் இமிகிரேஷன் அதிகாரிகள் காங்கிரஸ் தூதுகோஷ்டியிடம் தெரிவித்தனர்.

இதோடு இரண்டு லட்சம் ரூபாய் வரையில் முதல் போட்டுத் தொழில் நடத்துகிறவர்கள் நூற்றுக்கு எண்பத்தைந்து வீதம் இலங்கையர்களை வேலைக்கு அமர்த்திக் கொண்டிருந்தால், பாக்கி பதினைந்து சத விகிதமானவர்களை இந்தியர்களாக அமர்த்திக் கொள்ள அனுமதிக்கப்படுவார்கள் என்றும் இமிகிரேஷன் அதிகாரிகள் அறிவித்தனர். ஆனால் இலங்கைப் பிரஜாவுரிமைக்குக் கொடுத்த மனு நிராகரிக்கப்பட்டு நாடற்றவர்களாக்கப்பட்டுள்ளவர்கள் வேலைகளில் அமர்த்திக் கொள்ளப்பட்டிருப்பதை அனுமதிக்க முடியாதென்ற முறையில் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இலங்கை அதிகாரிகளின் இந்தக் கொள்கை தில்லி ஒப்பந்தத்தை மீறுவதாகும். நாடற்றவர்களின் பிரச்னையை இரு தேச அரசாங்கங்களும் பரிசீலனை செய்து ஒரு முடிவுக்கு வரும் வரையில் அவர்களுடைய பிழைப்பைக் கெடுக்கக் கூடாதென்றும் அவரவர்கள் செய்து வரும் வேலைகளில் தொடர்ந்திருக்க அனுமதிக்க வேண்டுமென்றும் தில்லி ஒப்பந்தத்தில் இலங்கை அரசாங்கம் ஒப்புக் கொண்டிருந்தது. இதை மீறி நாடற்ற நிலைமையிலுள்ளவர்கள் வேலைகளிலிருந்து நீக்கப்படுவதற்கு இமிகிரேஷன் காரியாலயம் மறைமுகமான நிர்ப்பந்தங்களை ஏற்படுத்தி வருவது அநியாயமானதென்று ஸ்ரீ தொண்டமான் அழுத்தமாகக் கண்டித்தார். நாடற்றவர்களில் எவ்வளவு பேர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற புள்ளி விவரங்களைத் தயாரித்துக் கொண்டு பிரதம மந்திரி ஸ்ரீ பண்டாரநாயகவிடம் ஆட்சேபனை தெரிவிக்கக் காங்கிரஸ் உத்தேசித்திருக்கிறது.

* * *

சாவகச்சேரித் தொகுதியின் பார்லிமெண்ட் அங்கத்தினரான ஸ்ரீ வி. என். நவரத்தினம் இவ் வாரம் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசியபொழுது எகிப்தின்மீது ஆங்கிலோ-பிரஞ்சு-இஸ்ரேல் படைகளின் படையெடுப்பு உலக சரித்திரத்தில் மிக மிக முக்கியமான ஆக்ரமிப்பு என்றும் இலங்கையில் தமிழ் பேசும் மக்கள்மீது இலங்கை அரசாங்கம் நடத்தும் ஆக்ரமிப்பு இதைவிடக் குறைந்த தன்மையுடையதல்ல என்றும் கூறினார். பாரதப் பிரதமர் நேருவும் இதர தென்கிழக்கு ஆசியா நாடுகளின் பிரதமர்களும் இலங்கைத் தமிழர்கள் கொடுமைக் குள்ளாவதைத் தடுக்க முன்வர வேண்டுமென்றும், சிங்களவர்களின் ஆதிக்க வெறியை உலக மக்களின் கவனத்துக்குக் கொண்டுவர வேண்டுமென்றும் ஸ்ரீ நவரத்தினம் வற்புறுத்திச் சொன்னார். —ரஜனி

காங்கிரஸ் பிரசாரக் குழுத் தலைவர்

○●○

இப்பொழுது நாடெங்கும் தேர்தல் பிரசார வேலைகள் ஆரம்பமாகி விட்டன. பம்பாய் நகர காங்கிரஸ் பிரசாரக் கமிட்டியின் தலைவராக ஒரு தமிழர் முதன் முதலாகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார். பம்பாய் மாகாண காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் திரு எஸ்.கே. பாட்டில் எம்.பி. அவர்கள் தலைமையில் சமீபத்தில் ஒரு கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் பம்பாய் நகர காங்கிரஸ் பிரசாரக் குழுவின் தலைவராகப் பேராசிரியர் திரு டி. வி. ராமானுஜம் எம். ஏ. தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். தாம் ஏற்றுக்கொண்ட பணியில் திரு டி. வி. ராமானுஜம் நல்ல வெற்றி காண்பார் என்று எதிர்பார்க்கிறோம்.



அபலை அஞ்சுகம்

21. விநோதக் காதலர்கள்!

எதிர்பாராத செய்திகளைக் கேட்டு இடிந்துபோன விஜயரங்கனின் மனத்தில் ஆறுதலும் சந்தோஷமும் ஏற்படக் கூடிய வகையில் தான் நடந்து கொள்ள வேண்டுமென்று அஞ்சுகம் விரும்பினாள். அவளுக்குக் குறத்தி மீனாச்சியின் பேரிலும் அவளுடைய புத்திரர்கள் பேரிலும் மிகுந்த சந்தேகம் ஏற்பட்டது. அவர்கள் தன்னையும், விஜயரங்கனையும் வெளியே தலைகாட்டாத வண்ணம் அடைத்துச் சுயநலத்தோடு தங்களைப் பயன்படுத்திக் கொண்டு ஏதேதோ தகாத காரியங்களெல்லாம் செய்ய முற்படுகிறார்கள் என்று அவளுக்குத் தோன்றியது. அவளுக்கு மேலும்மேலும் சந்தேகம் ஏற்படுவதற்குக் காரணம் ஒருநாள் மீனாச்சி தன் துணிப் பையில் ஏராளமான விலையுயர்ந்த தங்க நகைகளை வைத்துக்கொண்டிருந்ததைப் பார்த்ததுதான். அவ்வளவு விலையுயர்ந்த நகைகள் மீனாச்சிக்கு ஏது? அந்த நகைகளைப் பார்த்ததும் அஞ்சுகத்துக்கு மேகராஜபுரத்தில் பார்வதி அம்மாள் வீட்டில் களவுபோன நகைகளின் ஞாபகம்தான் வந்தது. தன்னுடைய உண்மைக் கதைகளைக் கேட்டு அறிந்து கொண்ட மீனாச்சி தன் விஷயமாக ஏதோ சூழ்ச்சிகள் செய்கிறாள் என்று தான் அஞ்சுகத்துக்குத் தோன்றியது. ஏற்கனவேயே வாழ்க்கை நெறி தவறியிருந்த ஜனங்களிடையே வாழ்ந்த அஞ்சுகம் மறுபடியும் மீனாச்சி போன்ற திருட்டுக் கூட்டத்தினரிடையே வாழ நேர்ந்தது பற்றி மனம் நொந்தாள்.

அவள் போலீஸார் கண்களில் படாமல் தப்பிக்க அவர்களிடம் இருந்தாலும், ஒருநாள் திருட்டையே தொழிலாகக் கொண்டிருக்கும் மீனாச்சியையும் அவளுடைய புத்திரர்களையும் போலீஸ்காரர்கள் பிடித்துக் கொண்டு போகத் தான் போகிறார்கள் என்று அவளுக்குப் பட்டது. அந்தச் சமயத்தில் அவர்களோடு வசிக்கும் அவளும், விஜயரங்கனும் கூண்டோடு கைலாசமாகச் சிறைக்குப் போகத்தானே வேண்டியிருக்கும்? 'இத்தகைய ஆபத்துக்களெல்லாம் தனக்கும் விஜயரங்கனுக்கும் ஏற்படாத வண்ணம் விஜயரங்கனையும் அழைத்துக் கொண்டு எங்கேனும் போய்த் தலை மறைவாக வசித்தால் என்ன?' என்று அவளுக்குப் பட்டது.


அன்று மாலை வழக்கம்போல் அவள் விஜயரங்கனை அழைத்துக் கொண்டு ஆற்றங் கரைக்குப் புறப்பட்டாள். ஆனால் அன்று அவர்களுடைய அபிப்பிராயத்தில் சில மாறுதல்கள் ஏற்பட்டன. வீட்டை விட்டுப் புறப்பட்டதும் ஆற்றங்கரைக்குச் செல்வதில்லை என்று அவர்கள் தீர்மானித்தார்கள். அங்குள்ள பெரிய பெரிய கோட்டைகளையும், அரண்மனைக் கட்டடங்களையும் சுற்றிப் பார்க்க வேண்டுமென்று அவர்களுக்கு ஆசை ஏற்பட்டது. அவர்கள் தாங்கள் வசிக்கும் சிறு இடத்தைத் தவிர வேறு எதையும் அதுவரையில் சென்று பார்த்ததில்லை.

விஜயரங்கன் அந்தக் கட்டடங்களையெல்லாம் சுற்றிப் பார்க்க வேண்டுமென்று தன் மன விருப்பத்தைத் தெரிவித்தபோது அவளுக்கும் மனத்தில் ஆவல் எழுந்தது. ஆரம்பத்திலிருந்தே விஜயரங்கன் அரை குறையாக இடிந்து பாழாகிக் கிடக்கும் அந்தக் கட்டடங்களுக்கும் தனக்கும் ஏதோ நெருங்கிய தொடர்பு இருக்க வேண்டுமென்று தான் நினைத்தான். அங்குமிங்குமாக இடிந்து பாழாகிக் கிடக்கும் அந்தக் கோட்டைகளும், மாளிகை உப்பரிகைகளும் அவனுக்கு ஏதோ பழைய கதைகளை எல்லாம் சொல்லுவது போலத் தானிருந்தன. முதன் முதலாக அந்தக் கட்டடங்களுள் மிகப் பெரியதும் அழகான, உயர்ந்த உப்பரிகையோடு கூடியதுமான ஒரு கட்டடத்துக்குள் அவர்கள் நுழைந்து பார்க்க விரும்பினர். அந்த உயர்ந்த உப்பரிகையின் மீது எப்படியாவது ஏறி நின்று சுற்றிலும் பார்த்து மகிழ வேண்டுமென்று அவர்களுக்கு ஆவல். அந்தக் கட்டடம் வெளிப்பார்வைக்கு வெகு சுலபமாக உள்ளே நுழைந்து பார்க்கலாம் போலத் தானிருந்தது. ஆனால் அவர்கள் உள்ளே நுழைந்ததும் அந்தக் கட்டடத்தின் சில பாகங்கள் அங்கும் இங்குமாக இடிந்து விழுந்து கிடந்து மேலும் அவர்கள் சுலபமாக உள்ளே போகாத வண்ணம் தடங்கல் செய்வதாய் இருந்தன. மாலையின் முன் பொழுதாய் இருப்பினும் அந்தக் கட்டடத்துக்குள் சிறிது இருள் சூழ்ந்து தான் இருந்தது. இருப்பினும் அவர்கள் கண்களுக்கு ஒவ்வொன்றும் தெளிவாகத்தான் தெரிந்தது. வேலைப்

பாடமைந்த அழகான தூண்கள் சித்திரங்கள் எழுதப்பட்டிருந்த சுவர்கள், முற்றங்கள், கூடங்கள் எல்லாம் அவர்கள் மனத்தைக் கவரக் கூடியவைகளாய்த் தானிருந்தன. அங்கு மூலை முடுக்குகளில் அடைந்து கிடந்த வௌவால்களெல்லாம் மனித அரவம் கேட்டதும் குப்பென்று கிளம்பி அப்படியும் இப்படியும் அவர்கள்மீது உராய்ந்த வண்ணம் பறந்தன. வௌவால் புழுக்கையும் புழுதியும் அடைந்திருந்த அந்த இடத்தில் ஏதோ துர்க்கந்தம் வீசிக்கொண்டிருந்தது. இரண்டொரு பாம்புகள் அப்படியும் இப்படியுமாக ஓடின. அப்பொழுது கீழ்த் தாழ்வாரத்துச் சுவர்களில் எழுதப்பட்டிருந்த அழகான சித்திரங்களை அவர்கள் பார்க்க வேண்டுமென்று விரும்பினாலும், முதலில் மூன்று அடுக்குள்ள உப்பரிகையின் மீது ஏறிப் பார்க்க வேண்டுமென்ற ஆவலே அவர்களுக்குப் பெரிதாக இருந்ததால், உப்பரிகைக்குச் செல்லும் வழி எது என்று அவர்கள் தேடலாயினர்.

விஜயரங்கன் அஞ்சுகத்தின் கையைப் பிடித்துக் கொண்டு அங்கங்கே இடிந்து குவிந்திருக்கும் கற்குவியல்கள் மீதெல்லாம் ஏறித் தாண்டிச் சென்று, உப்பரிகைக்குச் செல்லும் வழி எது என்று கண்டு பிடித்தான். வளைந்து வளைந்து மேல் நோக்கிச் செல்லும் அழகான படிகள். எவ்வளவு அற்புதமான வேலை? மயனே வந்து சிருஷ்டித்தது போலத்தானிருந்தது. அந்தப் படிகளில் சில இடிந்து போயிருந்தன. அவர்கள் ஒவ்வொரு படியில் ஏறும்போதும் அந்தப் படி இடிந்து விழுந்து விடுமோ, அல்லது நடக்கும் அதிர்ச்சியில் மேல் தளம் இடிந்து விழுந்து விடுமோ என்ற பயந்தான் அவர்களுக்கு இருந்தது. விஜயரங்கன் தைரியத்தைக் கைவிடாமல் அஞ்சுகத்தின் கையைப் பிடித்துக் கொண்டு ஒவ்வொரு படியிலும் காலை ஜாக்கிரதையாக வைத்து மேலே ஏறினான். மேலே செல்லச் செல்லப் படிகள் ஒழுங்காக இருந்தன. அவர்கள் மனத்திலும் சிறிது தைரியமும் நிம்மதியும் ஏற்பட்டன. முதல் உப்பரிகை, இரண்டாவது உப்பரிகை இரண்டையும் தாண்டி மூன்றாவது உப்பரிகைக்கு அவர்கள் வந்து சேர்ந்தனர். சுமார் ஆறு அடி அகலமே இருக்கும் அந்த இடம் வட்ட வடிவமாக இருந்தது. மேல் ஸ்தூபியைத் தாங்கி நிற்கும் பளிங்குத் தூண்களும், வளைவுகளும், நடுவே இருந்த சிறு பளிங்கு மேடையும் மிக அழகாகத் தானிருந்தன.

அவர்கள் இருவரும் அந்த உப்பரிகையின் மேலிருந்து நான்கு புறமும் நோக்கினர். ஆகா! சுற்றிலும் எவ்வளவு அழகு? அவ்வளவு உயரத்திலிருந்து கீழே பார்த்தபோதுதான் மற்ற மாளிகைகளின் பூரண அழகும் அவர்களுக்கு விளங்கியது. சுற்றிலும் பல கட்டடங்கள் சூழ்ந்த அந்த இடம் ஒரு காலத்தில் அழகான சிறு நகரமாகத் தான் விளங்கி இருக்க வேண்டுமென்று அவர்களுக்குத் தோன்றியது. அஞ்சுகமும் விஜயரங்கனும் நடுவே அமைக்கப்பட்டிருந்த பளிங்கு மேடையில் அமர்ந்தனர். ''இந்த மேடையில் ஒரு காலத்தில் யாரோ ஒரு ராஜாவும் ராணியும் தான் உட்கார்ந்திருக்க வேண்டும்'' என்றாள் அஞ்சுகம்.



''ஆமாம்! ஆனால் இப்பொழுது நானும் நீயும் உட்கார்ந்திருக்கிறோம். நாம் ஒருகாலத்தில் வந்து உட்காரப் போகிறோம் என்பதற்காகவே தான் இந்த உப்பரிகை இடிந்து பாழாகாமல் அப்படியே இருந்திருக்க வேண்டும்'' என்றான் விஜயரங்கன்.

''நான் ஒரு ராணி இல்லை. அது எனக்கு நிச்சயம் தெரியும். ஒருவேளை நீங்கள் ஒரு ராஜாவாக இருக்கலாம். நீங்கள் யாரென்று தான் உங்களுக்கே தெரியவில்லையே?'' என்றாள் அஞ்சுகம்.


விஜயரங்கன் சிறிது நேரம் ஆழ்ந்த சிந்தனையில் இருந்தான். இவ்வளவு நேரம் சந்தோஷத்தோடும் அமைதியோடும் இருந்த அவன் முகத்தில் சோக இருள் படர்ந்தது. முதல் நாள் மீனாச்சி தன்னைப் பற்றிச் சொல்லிய வார்த்தைக ளெல்லாம் அவன் நினைவுக்கு வந்தன. 'தான் ஆயுள் தண்டனை பெற்ற ஒரு கைதி' என்பதை நினைத்ததும் அவனுடைய மனம் குலைந்தது. கொடிய செயல் எதையோ புரிந்து கைதியாக இருக்கும் தான் உலகத்தில் இருப்பதை விட உயிரை மாய்த்துக் கொள்வதே மேல் என்று அவனுக்குத் தோன்றியது. அஞ்சுகம் போன்ற அழகான குணமுள்ள பெண்ணிடம் இருக்கத் தனக்கு அருகதை இல்லை என்றே அவன் எண்ணினான். ''அஞ்சுகம்! நான் ராஜா அல்ல. ஆயுள் கைதி. என்னைப் போன்றவனுடன் கூடிக்குலாவ உனக்குத் தோன்றுகிறதா?'' என்றான்.

''ஏன்? அதனால் என்ன?'' என்று கேட்டாள் அஞ்சுகம்.

''உனக்கு நன்றாகத் தெரியும், நான் இங்கு வந்த பிறகுஎன்ன நடக்கிறதோ அதுதான் எனக்கும் தெரியுமென்று. அதற்கு முன்னால் என்ன நடந்ததோ அதெல்லாம் எனக்கு என்னவென்றே தெரியாது. நீ எனக்குப் பல விதத்திலும் பணிவிடை செய்து என் உயிரைக் காப்பாற்றினாய். உனது களங்கமற்ற அன்பு எனக்குக் கிடைத்தது. ஆனால் நான் சிறையிலிருந்து தப்பி வந்த ஒரு ஆயுள் கைதி; என்னைப் போலீஸ்காரர்கள் தேடிக் கொண்டிருக்கிறார்கள் என்றும் நான் யாரையோ குரோதமாகக் கொலை செய்தவனென்றும் சொல்லுகிறார்கள். அது எவ்வளவு தூரம் உண்மையோ? ஆனால் என் மனச்சாட்சி நான் குற்றமற்றவன், நிரபராதி என்று தான் சொல்லுகிறது. நான் என்னை எப்படிக் குற்றமற்றவன், நிரபராதி என்று நினைக்கிறேனோ அதேபோல என்னைக் குற்றமற்றவன் என்று நினைப்பதற்கும் நம்புவதற்கும் உலகத்தில் யாரேனும் இருக்க மாட்டார்களா என்றுதான் எண்ணுகிறேன். இப்படி நான் எண்ணுவது தகாததாய் இருக்கலாம்....'' என்று சொல்லி விட்டு, அஞ்சுகத்தின் முகத்தைப் பார்த்தான்.

''இதில் தகாதது ஒன்றுமில்லை. நான் உங்களை ஒரு குற்றவாளியாகவே நினைக்கவில்லை. நீங்கள் கொடிய செய்கை எதுவும் செய்திருப்பீர்கள் என்றும் நம்பவில்லை'' என்றாள் அஞ்சுகம். இவ் வார்த்தைகளைக் கேட்டுச் சோகமும் சோர்வும் அடைந்திருந்த விஜயனின் முகத்தில் தெளிவும் பிரகாசமும் ஏற்பட்டன. அவன் மெதுவாக அவளுடைய இரு கரங்களையும் சேர்த்துப் பற்றிக் கொண்டு, ''அஞ்சுகம்! என்மீது அவ்வளவு அன்பும் நம்பிக்கையும் வைத்திருக்கிறாயா?'' என்றான் பரவசத்தோடு.

அஞ்சுகம் சிறிது வெட்கத்தோடு தலை குனிந்த வண்ணம், ''உங்கள்மீது அன்பு ஏற்படுவதற்கு நீங்கள்தான் காரணம். நான் உங்களை முதன் முதலாகப் பார்த்த போதே என் மனம் உங்களுக்கு அடிமையாகிவிட்டது. இதற்கு முன்னால் நீங்கள் என்ன செய்தீர்கள், எப்படி இருந்தீர்கள் என்ற கவலையே எனக்கு இல்லை. நீங்கள் யாருக்கு எவ்விதக் குற்றம் இழைத்தவராக இருப்பினும் உங்கள் மீது நான் கொண்டுள்ள அன்பை என்னால் துறக்க முடியாது. என்னைப் பற்றிய உண்மையையும் உங்களிடம் சொல்லி விட்டால் உங்கள் மனத்துக்கு இன்னும் சிறிது ஆறுதல் ஏற்படும். நானும் உங்களைப் போல்தான் போலீஸ்காரர்களின் கண்களில் படாமல் தலைமறைவாக இருப்பவள். இல்லாவிட்டால் இப்படிக் குறத்தி போல் வேஷம்



போட்டு இவர்களிடையே நான் ஏன் இருக்க வேண்டும்? நான் முன்பு வேலை செய்து கொண்டிருந்த ஒரு வீட்டிலிருந்து ஏராளமான நகைகளைக் களவாடி விட்டதாக என்மீது பழி சுமத்தப்பட்டிருக்கிறது. மீனாட்சி என்னைக் காப்பாற்றா விட்டால் இத்தனை நாள் நான் சிறைக்குள் கிடக்க வேண்டியவள் தான்'' என்றாள்.

விஜயரங்கன் பச்சாத்தாபத்தோடு அவள் முகத்தை ஏறிட்டுப் பார்த்தான். அவள் துயரம் நிறைந்த முகம் அவளுடைய சோகம் நிறைந்த கதையை அவனுக்குச் சொல்வது போலிருந்தது. அவனுக்கு அவள்மீது எல்லையற்ற அன்பும் வாஞ்சையும் ஏற்பட்டன.

''பார்க்கப் போனால் நீங்களும் நானும் ஒன்றுதான், இப்பொழுது இருக்கும் நிலையில்...'' என்றாள் அஞ்சுகம். தன் வெட்கத்தை ஒருவிதமாகச் சுதாரித்துக் கொண்டு, அவன் முகத்தை ஆர்வத்தோடு பார்த்தாள் அவள்.

அவன் சிரித்துக் கொண்டே, ''இது ரொம்ப அதிசயம். உலகத்திலே ஒரே நிலையிலுள்ள வினோதமான காதலர்கள் நீயும் நானும்தான். கடவுள் பார்த்துத்தான் நம்மை இப்படிப் பிணைத்து வைத்திருக்கிறார். ஒரு பாவமும் அறியாத உன்னைக் குற்றவாளி என்று சட்டம் எப்படி நெருக்குகிறதோ, அப்படித்தான் என்னையும் நெருக்குகிறது. நம்மை இந்த இருள் பாதையிலிருந்து காப்பாற்ற என்றாவது ஒரு ஒளி தோன்றாமல் இருக்காது....'' என்றான்.


சில நிமிட நேரம் அங்கு மௌனம் சூழ்ந்திருந்தது. அந்த உப்பரிகையின் மேலிருந்து சுற்றிலும் அவர்கள் கண் பார்வையைச் செலுத்திய போது மிகவும் மனோரம்மியமாகத்தான் இருந்தது. உண்மையிலேயே அவர்கள் இருவரும் வஞ்சனை, பொய், சூது, களவு இவைகள் நிறைந்த இந்த உலகத்தை விட்டு வேறொரு இன்பமயமான உலகத்துக்கு வந்தது போல் தான் மெய்மறந்த நிலையில் இருந்தனர்.

''அஞ்சுகம்! இனிமேல் நாம் உலகில் எப்படிச் சுதந்திரமாகவும் சந்தோஷமாகவும் வாழலாம் என்பதைப் பற்றித் தான் யோசிக்க வேண்டும். இந்தக் குறக் கூட்டத்தினரிடையே நாம் வாழ்வதும் சிறைவாசத்தில் வாழ்வதும் ஒன்றுதான். சுதந்திரமில்லாத நாம் இவர்களிடையே இருந்து என்ன இன்பம் காணப் போகிறோம், நாம் இவர்களை விட்டு எப்படி விலகுவது என்பதைப் பற்றித்தான் இனிமேல் யோசிக்க வேண்டும்'' என்றான் விஜயரங்கன்.

''இவர்களை விட்டு விலகுவதா....? அது எப்படி நம்மால் முடியும்?'' என்றாள் அஞ்சுகம்.

இது அப்பொழுதுதான் அவர்கள் மனத்தில் புதிதாக எழுந்த எண்ணம். 'வேறு வழியில்லை' என்று குறக்கூட்டத்தினரிடம் அடிமைப்பட்டுக் கிடக்கும் அஞ்சுகத்துக்கு இது ஏதோ புரட்சிகரமான தீர்மானமாகத்தான் பட்டது. ஆனால் அவள் மனத்திலும் அந்தத் தளையிலிருந்து விடுபட்டு எங்கேனும் போய்ச் சுதந்திரமாக வாழ வேண்டுமென்ற ஆசை எழாமல் இல்லை.

மீனாட்சி எப்படியோ? ஆனால் அவளுடைய புத்திரர்கள் இருவரும் அஞ்சுகத்தையும் விஜயரங்கனையும் ஏதோ விலை கொடுத்துவாங்கி விட்ட அடிமைகளைப் போலத் தான் நினைத்தனர். அப்



பொழுது அஞ்சுகமும் விஜயரங்கனும் இருந்த நிலை என்றைக்கும் ஆபத்தைக் கொடுக்கக் கூடிய நிலைதான். அந்த நிலையிலிருந்து தப்பித்துக் கொள்ள வேண்டுமென்றுதான் அவர்களின் துடிப்பு. ஆனால் அது முடியுமா? அவர்கள் நினைக்கும் புது வாழ்க்கையை எப்படி எங்கே போய்த் துவக்குவது?

''இவர்களை விட்டுப் பிரிந்து போய் விட்டால் நம்முடைய மனத்துக்கு நிம்மதியும் சந்தோஷமும்தான் ஏற்படும். எப்படியாவது இங்கிருந்து தப்பித்துச் செல்வதற்கு ஏதேனும் வழி இருந்தால் பார்ப்போம். நிச்சயம், இவர்களை விட்டுப் பிரிந்தால் நாம் பெரிய ஆபத்திலிருந்து மீண்டு நம் இச்சையாகச் சுகமாகவும் சந்தோஷமாகவும் வாழலாம்'' என்றாள் அஞ்சுகம் மிக ஆர்வத்தோடு தீர்மானமாக.

விஜயரங்கன் சிறிது நேரம் யோசித்து விட்டு, ''நாம் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். நமக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படாதவண்ணம் இதற்கு வழி வகுக்க வேண்டும். நாம் எங்கே போவது, எப்படி ஜீவிப்பது என்பதையெல்லாம் பற்றித் தீர்மானிக்க வேண்டும். இதற்கெல்லாம் நான் கூடிய சீக்கிரம் ஒரு நல்ல வழி கண்டு பிடித்துச் சொல்கிறேன்!'' என்றான்.

மறுபடியும் அங்கு சிறிது மௌனம் சூழ்ந்திருந்தது. மாலை நேரமாயினும் இருள்சூழும் வேளை நெருங்கிவிடவில்லை. மேற்கே வானம் முழுவதும் யாரோ பொன்மணிகளைக் கொட்டித் துழாவி வைத்திருந்தது போல்தான் இருந்தது. அடிவானத்திலிருந்து எழுந்த அக்னி போன்ற செந்நிறம் கொஞ்சம் கொஞ்சமாக மேலே எழுந்து பரவிப் பொன் முத்துக் குவியல்களை உருக்கித் தன் நிறமாக்குவது போல் இருந்தது. மிகவும் உயரமான உப்பரிகையிலிருந்து வானையும் பூமியையும் பார்த்துக்கொண்டிருந்த அவர்களுக்கு வானத்தின் பேரெழில்தான் வையத்தைத் தழுவிக் கொள்ள முயற்சிக்கிறதா? அல்லது வையத்தின் பேரெழில்தான் வானத்தைத் தாவிப் பிடித்துத் தழுவிக் கொள்ள முயற்சிக்கிறதா என்று தெரியவில்லை. வானத்துக்கும் பூமிக்கும் எட்டாத தூரம் என்று சொல்வதைப் பொய்யாக்கும் வண்ணம்தான் அப்பொழுது இருந்த மனோரம்மியமான சூழ்நிலை எடுத்துக் காட்டியது.

''சரி! நாழிகையாகி விட்டது. இப்படியே இங்கேயே எவ்வளவு நேரம் உட்கார்ந்திருந்தாலும் இன்பமாய்த்தான் இருக்கும். பொழுது போவதே தெரியாது. நாம் கீழே இறங்கி எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு போவதற்குள் இருட்டி விடும். இருட்டுவதற்கு முன் கீழே இறங்கினால்தான் கீழ் தாழ்வாரத்தில் உள்ள சித்திரங்களைக் கொஞ்சமாவது பார்க்கலாம்'' என்றான் விஜயரங்கன்.

''ஆமாம்! அவைகளைப் பார்க்க வேண்டுமென்று எனக்கும் ஆசை...'' என்று சொல்லிக் கொண்டே அஞ்சுகம் எழுந்தாள். அவர்கள் இருவரும் அந்த உப்பரிகையின் இரண்டாவது மாடத்துக்கு வந்தனர்.

அங்கு சிறிது இருள் கவிந்திருந்தாலும் நான்குபுறச் சுவர்களிலும் வரையப்பட்டிருந்த சித்திரங்கள் நன்றாகத் தெரிந்தன. சுவர்களில் வரிசையாக வரையப்பட்டிருந்த வர்ணச் சித்திரங்கள் மிகவும் அழகாகத்தான் இருந்தன. **(தொடரும்)**

பம்பாயில் நாடக விழா

பம்பாய்த் தமிழர்களுக்குக் கலை, இலக்கியம் முதலிய துறைகளில் கடந்த பதினைந்து ஆண்டுகளாகவே தமிழ்ச் சங்கம் சிறந்த சேவை செய்து வருகிறது. இதன் கட்டட நிதிக்காகச் சிறந்த நாடகக் குழுவினர்களைக் கொண்டு ஆண்டுதோறும் நாடக விழாக்களை நடத்தி, அதன் மூலம் பெற்ற பொருளுடன் ஒரு கணிசமான தொகையைக் கடனாகப் பெற்றுத் தமிழ் சங்கத்துக்குச் சொந்த மண்டபம் கட்டி முடிவடைந்தது. மேற்படி கடன் தொகையை ஈடு செய்ய இவ்வாண்டு திரு எஸ். வி. சகஸ்ரநாமம் குழுவினர் நாடக விழா நடத்தித் தர இசைந்துள்ளனர். திரு சகஸ்ரநாமத்தின் 'சேவா ஸ்டேஜ்' நாடக ரசிகர்களுக்குப் புதிதல்ல. நாடக உலகிலேயே 'சேவா ஸ்டேஜ்' ஒரு தனி ஸ்தானத்தை வகித்து வருகிறது. எனவே பம்பாய்த் தமிழர்களுக்கு இந் நாடக விழா கண்ணுக்கும், கருத்துக்கும் அரிய விருந்தாகவும், உயரிய பொழுதுபோக்காகவும் அமையும் என்பதில் ஐயமே இல்லை.

எனவே, நவம்பர் 30-ம் தேதியிலிருந்து டிசம்பர் 4-ம் தேதி முடிய நடைபெறப் போகும் இந் நாடக விழாவுக்குப் பம்பாய் நகரிலும், அதைச் சுற்றியுள்ள நகரங்களிலும் வாழும் தமிழ்ப் பெரு மக்களும், கலை அபிமானிகளும் திரளாக வந்து பேராதரவு அளிக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம்.


கடைத்தெரு செல்வோர்
முதலில் ஆடைகளே
வாங்குகின்றனர்...
FABRICS...
பிரகாசமான, வசீ
கரமான புதிய
பிரின்டுகளுடன்
கூடிய புகழ்பெற்ற
உயர்ந்த ரக
ஆடைகள், எங்கு
பார்த்தாலும் நாரீ
மணிகளின்மனத்தை
ஆகர்ஷிக்கின்றன.
அடுத்த தடவை
நீங்கள் ஆடைகள்
வாங்கச் செல்லும்
போது, மொரார்ஜி
ஆடைகளையே
கேளுங்கள்.
கடைசியாக
மொரார்ஜி
ஆடைகளை
வாங்குகின்றனர்...
Morarjee
FABRICS
வாயில்கள் • புடவைகள் . பிரின்டுகள் • பிளானல்கள் , பாப்ளின்கள்
ஷர்டிங்குகள் • ஸூட்டிங்குகள் • டிரில்கள் . லாங்க்ளாத் • வேஷ்டிகள்
ஸ்ரீ மொரார்ஜி கோகுல்தாஸ் ஸ்பின்னிங் & வீவிங் கோ., லிட்.
பரேல், பம்பாய் - 12
மானேஜிங் ஏஜன்டுகள்: பிரமால் & சன்ஸ்
MG-2

சென்னை அரசாங்க செய்தி இலாகா

நாடகப் போட்டி - பரிசு ரூ. 1,000

○●○

ஐந்தாண்டுத் திட்டத்தின் அடிப்படைக் கொள்கைகளையும் சாதனைகளையும் மக்களுக்கு விளக்கும் வகையில் எழுதப்படும் சிறந்த முழுநேர நாடகத்திற்கு ரூ. 1,000 பரிசு கொடுக்கப்படும்

சிறந்த ஓற்றை அங்க நாடகத்திற்கு	... ...	ரூ.	500
சிறந்த வில்லுப் பாட்டுக்கு	... ...	ரூ.	250

போட்டி முடிவு தேதி 31-12-1956

○●○

முழு விவரங்களுக்கு :

நேர்முக உதவியாளர், சென்னைச் செய்தி விளம்பர இலாகா, கோட்டை, சென்னை-9

என்ற முகவரிக்கு எழுதவும்

மானிட சேவையே மாதவன் பூஜை



அண்ணா

சென்னை ஸ்ரீ ராமகிருஷ்ண மாணவர் இல்லத்தின் காரியதரிசியாக நெடுநாள் அரும் பணியாற்றி அழியாப் புகழ் பெற்றவரும், 'மானிட சேவையே மாதவன் பூஜை' என்ற லட்சியத்துக்கு இலக்காய் விளங்கியவருமாகிய மகாபுருஷர் கொளத்தூர் ஸ்ரீ ராமானுஜாச்சாரியார் 3-11-56 அமரத்துவம் எய்தினார்.

ஸ்ரீமத் பாகவதத்தில் ரந்தி தேவன் சரிதையில், ''நான் இன்ப வாழ்வையோ, சுவர்க்கத்தையோ, பிறவாமையையோ வேண்டவில்லை. துன்புற்ற மக்களின் கண்ணீரைத் துடைக்கும் ஆற்றலையே எந்நாளும் வேண்டுகின்றேன்'' என்று ஒரு பிரார்த்தனை சுலோகம் காணப்படுகிறது. இப்பிரார்த்தனை அவர் வாழ்க்கையில் நிறைவேறி விட்டது.

அவர் 1875-வது ஆண்டு, சென்னையிலிருந்து இருபத்தைந்து மைல் தூரத்திலுள்ள கொளத்தூரில் பிறந்தார். தந்தையின்பெயர் தாதாச்சாரியார், தாய் பங்கஜம்மாள். இவருடைய இளமையிலேயே தாய் தந்தையர் சென்னைக்குக் குடியேறி வாழ்ந்து வந்தனர். தந்தை சென்னையில்முனிசிபல் வரிவசூலிக்கும் எளிய பணியாற்றி, அதில் கிடைத்த சிறு ஊதியத்தைக் கொண்டு உள்ளத்தின் உயர்வால் நல்வாழ்வு நடத்தித் தம் ஒரே குமாரனை ராமானுஜனையும், தம் தமையன் குமாரர்களாகிய 'ராமு', 'சீமாச்சு' என்னும் சிறுவர்களையும், மற்றும் சிலரையும் கல்வி பயில உதவினார்.




ஸ்ரீ வி. ராமானுஜாச்சாரியார்

ராமானுஜர் மயிலை தெற்கு மாடவீதியிலிருந்த நரசிம்மய்யர் நடுத்தரப் பாடசாலையிலும் நேடிவ் ஹைஸ்கூலாயிருந்து பின் பி. எஸ். ஹைஸ்கூலுடன் ஒன்றுபட்ட உயர்தரப் பள்ளியிலும், பிரஸிடென்ஸி கல்லூரியிலும் படித்து பி. ஏ. பரீட்சை தேறினார். ஸர் வி. பாஷ்யம் ஐயங்கார் சிபார்சில் சென்னை செக்ரடேரியட்டில் ரூபாய் இருபத்தைந்து சம்பளத்தில் குமாஸ்தாவாக நுழைந்தார். மாதம் ஆயிரம் ரூபாய் வரை சம்பள உயர்வு பெற்று, அரசாங்கத்தின் நன்மதிப்பையும் ராவ்பகதூர் பட்டத்தையும் பெற்றார்.

இவருடைய ஆன்மீக வாழ்க்கைக்கு விதை ஊன்றப்பட்டது, 1893—வது ஆண்டில். அப்போதுதான் முதல் தடவையாகச் சுவாமி விவேகானந்தர் சென்னைக்கு வந்திருந்தார். ஆஜானுபாகுவாகக் கையில் உயரிய தண்டத்துடன் அன்று சுவாமிகளைக் கண்ட காட்சி இவருடைய உள்ளத்தில் ஊன்றி நின்று விட்டதாக அடிக்கடி கூறுவார். சுவாமிகளின் பேச்சைக் கேட்டு அதில் மனத்தைப் பறிகொடுத்து அவருக்குத் தொண்டு பூண்டு, அவரை அமெரிக்கா அனுப்ப ஏற்பாடு செய்த குழுவுடன் ஒத்துழைத்த பெருமையும் இவருக்கு உண்டு.

1897—ல் விவேகானந்தர் மீண்டும் அமெரிக்காவிலிருந்து வெற்றியோடு திரும்பி வந்த போது அவரை ராஜோபசாரத்துடன் வரவேற்ற இளைஞர்கள் கோஷ்டியில் முதன்மையாக நின்று, சுவாமிகள் ஏறியிருந்த கோச்சு வண்டியைக் குதிரை இழுக்க வேண்டாமென்று தாங்களே இழுக்க விரும்பியவர்களுடன் சேர்ந்து கொண்ட பாக்கியமும் இவருடையது. ஸ்ரீ ராமகிருஷ்ண ஜயந்தியின் போது ஆயிரக்கணக்கான ஏழைகளுக்கு அன்னதானம் செய்



மயிலாப்பூர் ராமகிருஷ்ண மாணவர் இல்லத்தை 1921-ம் ஆண்டு சுவாமி பிரம்மானந்தர் திறந்து வைத்தார். நடுவில் உட்கார்ந்திருப்பவர் ஸ்ரீ பிரம்மானந்தர். X இக் குறியிடப்பட்டவர்களில் இடது கோடியிலிருப்பவர் ஸ்ரீ ராமானுஜாச்சாரியார். வலது பக்கம் இருப்பவர் ஸ்ரீ 'ராமு'. மேலே கையைக் கட்டிக்கொண்டு நிற்பவர் இக்கட்டுரையின் ஆசிரியர் ஸ்ரீ அண்ணா.

யும் பணியில் பங்கெடுத்துக் கொண்டும், மயிலையில் ராமகிருஷ்ண மடத்துக்கென ஒரு கட்டடம் கட்டப் பொருள் சேர்த்தும், அன்னை சாரதா தேவியார் சென்னைக்கு விஜயம் செய்தபோது அவருக்குப் பணியாற்றியும், பிரம்மானந்த சுவாமிகளைத் திருப்பதி, மதுரை, ராமேசுவரம் முதலிய க்ஷேத்திரங்களுக்கு அழைத்துச் செல்ல ஏற்பாடுகள் செய்தும் எத்தனையோ வழிகளில் தன்னலமின்றித் தமையன் ராமுவுடன் சேர்ந்து உழைக்கக் கற்றுக் கொண்டார்.

உலகைத் துறந்து ஓடுதல் எளிது. உலகிலிருந்து தன்னை மறந்து பிறர் துன்பத்தைத் துடைப்பதே லட்சியமாய்க் கொண்டு வாழ்வது அரிது. ஒரு உதாரணம். இராமானுஜர் ஒரு சமயம் நீலகிரியில் இருக்கையில் பெருவாரி நோயில் பலர் இறந்தனர். நோயில் மடிந்தவர்களை மயானம் கொண்டு செல்லப் பிறர் தயங்கிய போது இவர் அநாதைப் பிணத்தை மயானம் கொண்டு செல்லத் தோள் கொடுத்தார். ஒரே நாளில் அம்மாதிரி மூன்று பிணங்களை எடுக்க நேர்ந்தது. இந்த மாதிரி சேவையில் ஆர்வம் ஏற்படாதவரை, மத வாழ்க்கை அறிவும் ஆசாரமும் நிறைந்ததாயினும் காயாத மரம் போன்றதேயாம். இதுதான் விவேகானந்தர், ராமகிருஷ்ணானந்தர், பிரம்மானந்தர் ஆகியவரிடமிருந்து ராமுவும்ராமானுஜரும் பெற்ற உபதேசத்தின் ரகசியம்.

ராமுவை இவர் வழிகாட்டியெனக் கருதினார். லக்ஷ்மணன் ராமனிடம் கொண்டிருந்த அன்பு போன்றது இவர் ராமுவிடம் கொண்டிருந்த அன்பு. ராமானுஜரே கூறியுள்ளார்: ''ராமுவின் தம்பி நான் என்று சொல்லிக் கொள்ளுவதில் எனக்கு எப்போதும் ஒரு பெருமிதம் உண்டு. நாங்கள் ஒன்று விட்ட சகோதரர்களாயினும் உடன் பிறந்தவர்களை விட அதிக அன்பும் அன்னியோன்னியமும் எங்களிடம் நிலைபெற்றிருந்தன. எங்களை எல்லோரும் 'ராமு—ராமானுஜ' என்று இணைத்துக் கூட்டுச் சொல்லால் குறிப்பிட்டது நாங்கள் இரண்டு உடல்களில் வளர்ந்த ஒருயிர் போன்ற உறவை எங்களிடம் வளரச் செய்தது. இதனால் ராமு செய்ததெல்லாம் நான் செய்ததாகவும், நான் செய்தது ராமு செய்ததாகவும் பிரிக்க முடியாதபடி எங்கள் வாழ்க்கை அமைந்து விட்டது.''

ராமகிருஷ்ண மாணவர் இல்லத்தைத் தொடங்குமுன் 1897 முதல் ஏழு வருஷங்கள் மயிலை மாடவீதியில் தமது வீட்டுக்கு அருகிலேயே இவர் ராமுவுடனும் மற்றும் சில இளைஞர்களுடனும் ஒரு ஹரிஜனப் பாடசாலையை ஆரம்பித்து நடத்தினார். அதற்காகப் பொருள் ஈட்ட முயன்றபோது இவருடைய உள்ளத்தில் ஒரு உண்மை ஆழப் பதிந்து விட்டது. 'ஏற்பது இகழ்ச்சி' எனினும் பிறர் நலனை வளர்ப்பதற்காகப் பிச்சை எடுப்பது தவறன்று. அது ஒரு அருந்தவம். தக்க முறையில் அது கைக் கொள்ளப்பட்டால் ஞான வாழ்க்கைக்குச் சிறந்த சாதனமாகும் என்பதே அவ்வுண்மை. இத் தவத்தால் நாளடைவில் அவர் நற்காரியங்களுக்குப் பிச்சையெடுப்போரின் முடிசூடா மன்னராக விளங்கலானார்.

ராமகிருஷ்ண மாணவர் இல்லம் 1905—வது ஆண்டில் ஏழு ஏழைச் சிறுவர்களுடன் தொடங்கப் பெற்றது. அதற்கு அடிகோலும் போது ராமகிருஷ்ணானந்தர் கூறியதாவது: 'அன்னதானம் சிறந்தது. வித்தியா தானம் அதினும் உயர்ந்தது. ஆன்மஞானம் அனைத்தினும் மேம்பட்டது. இம்மூன்றையும் வளர்ப்பது இந்த ஸ்தாபனத்தின் லட்சியமாக இருக்கட்டும்.' இது ஒரு மந்திரம் போல் ராமுவாலும் ராமானுஜராலும் ஏற்கப்பட்ட அந் நாள் முதல் அவர்கள் வாழ்க்கை முழுதும் ராமகிருஷ்ண மாணவர் இல்லத்துக்காக அர்ப்பணம் செய்யப்பட்டதாயிற்று. நாடு முழுதும் அவர்கள் குடும்பமாயிற்று.

1905 முதல் 1932 வரை ராமு இவ்வில்லத்தின் ஒப்புயர்வற்ற காரியதரிசியாக இருந்தார். ராமானுஜர் அவருக்கு எல்லா வகைகளிலும் உறுதுணையாக நின்றார். ராமு 1932-ல் அமரத்துவம் எய்தியபின் ராமானுஜர் தாமே காரியதரிசியாயிருந்து இல்லத்தின் பொருள் வசதியையும், மாணவர் தொகையையும் பன்மடங்கு வளரச் செய்து, அது தொடர்ந்து பணியாற்றி வருவதற்கு வேண்டிய சாதனங்கள் பலவற்றையும் இடை



சொந்த
உடைமையின் பெருமை
பொதுவாக சொந்த உடைமை என்றால் மனம் பெருமை அடைகிறது. அதிலும் ஆர்ம்ஸ்ட்ராங் சைக்கிள் சொந்தமாக இருந்துவிட்டால் அந்தப் பெருமை பன்மடங்கு அதிகமாகிறது. ஒரு தோழனைப்போல் மகிழ்ச்சி அளிக்கிறது. அதில் வேகமாகச் செல்லும்போது ஆனந்தம் ஏற்படுகிறது. குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட இடத்துக்குச் செல்லுவதே ஆனந்தம்தானே !
ARMSTRONG
THE BETTER BICYCLE.
ARMSTRONG
ARMSTRONG CYCLES
BIRMINGHAM
DISTRIBUTORS:-
ROYAL CYCLE & MOTOR CO.,
13/14. BROADWAY, MADRAS-1.
BRANCH.
THE PIONEER CYCLE HOUSE,
47/49. WEST TOWER STREET, MADURAI.
MZ-22



நவம்பர் 17-ம் தேதி மயிலை ரஸிகரஞ்சனி சபை மண்டபத்தில் டாக்டர் ஏ. லட்சுமணசுவாமி முதலியார் அவர்கள் தலைமையில் ஸ்ரீ ராமானுஜாச்சாரியாரின் மறைவைக் குறித்து ஓர் அனுதாபக் கூட்டம் நடைபெற்றது. ராஜாஜி அனுதாபத் தீர்மானத்தைப் பிரேரேபித்துப் பேசினார். சென்னை நகரத்துப் பிரமுகர்கள் தங்கள் அனுதாபங்களைத் தெரிவித்துக் கொண்டார்கள். மேலே: ராஜாஜி பேசுவதையும், சபையில் ஒரு பகுதியையும் காணலாம்.

விடா உழைப்பால் நிலை நாட்டி யிருக்கிறார். சிலர் ஐம்பத்தைந்தாவது வயதில் ரிடையராகி ஓய்வெடுத்துக் கொள்வது போல் இவர் ஓய்வெடுத்துக் கொண்டு இடைக்காலப் பணியாக இல்லத்துக்குச் சேவை செய்யவில்லை. ரிடையராகும் வரை பெற்ற முழு அனுபவத்தையும் அடிப்படையாகக் கொண்டு அதற்குப் பின் இருபத்தைந்து ஆண்டுகள் செய்த பணி அதற்கு முன் செய்ததை விட அதிகம். இல்லத்தின் பணி மூச்சுக் காற்றுப் போல் அவருக்கு ஜீவாதாரமா யிருந்தது. உத்தியோகத்திலிருந்த போதும் எப்போதாவது சில வாரங்கள் லீவு எடுத்துக் கொண்டால் இலங்கை, மலேயா, பர்மா போன்ற நாடுகளுக்குச் சென்று இல்லத்துக்குப் பொருள் திரட்டவே அதைப் பயன்படுத்துவார்.

இல்லத்தின் சாசுவத நிதியை வளர்ப்பதற்கு அவர் கையாண்ட முறைகள்பலவற்றுள்ளும் முக்கியமானது நாடகக் கலையை அதற்குப் பயன் படுத்தியதேயாகும். முதலில் தமது உத்தியோக நண்பர்களுடன் ஆரம்பித்த 'செகரடேரியட் பார்ட்டி'யின் மூலம் நூற்றுக்கணக்கான நாடகங்கள் நடத்தி ஐந்து லட்சம் ரூபாயும், பின் 'ராமகிருஷ்ண கிருபா அமெச்சூர்ஸ்' கோஷ்டியின் மூலம் இரண்டு லக்ஷம் ரூபாயும் திரட்டியது இவருடைய விடா முயற்சிக்குத் தக்க சான்றாகும். இவருடைய நடிப்புத் திறமை அபாரமானது. அதனால் பொருள் திரட்டுவது ஒரு பக்கமிருக்க, பக்தியை நாடெங்கும் பரப்ப வேண்டுமென்பது அவரது பேரவா. இக்காரணத்தாலேயே அவர் நடித்த நாடகங்கள் தசரத ராமன், கபீர் தாஸ், லீலாசுகர், ஹனுமத் ஸஞ்சீவி போன்றவையாக இருந்தன. ராமாயணத்தில் ராமனாக நடிக்க விரும்பாமல் இவர் தசரதனாகவே நடிக்க விரும்பியதற்கு ஒரு காரணம் கூறினார். 'நான் ராமனாக இருந்தால் ஒரு தடவைகூட ராமன் பெயரை உச்சரிக்க அவகாசம் இருக்காது. தசரதனாயிருந்தால் ராமனுக்காகக் கதறலாமல்லவா?' என்றார். இது அவர் மனப்பாங்கை எவ்வளவு அழகாய் வெளிப்படுத்துகிறது.

ராமகிருஷ்ண மாணவர் இல்லத்துக்காகவே அவர் முக்கியமாய் வாழ்ந்தாரெனினும், ராமகிருஷ்ணரின் பெயரும், விவேகானந்தரின் பெயரும் கொண்ட எல்லா நிலையங்களுடனும் அவருக்கு மிக நெருங்கிய தொடர்புண்டு. இந்தியாவிலும், அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் உள்ள ராமகிருஷ்ண நிலையங்களில் பணியாற்றும் பெரு மக்களுடன் அவர் வாழ்நாள் முழுதும் கடிதங்கள் மூலம் விடாத் தொடர்பு கொண்டிருந்தார்.

ராமானுஜரின் இஷ்ட தெய்வம் ஸ்ரீராமன். கீர்த்தனைகளால் ராமனைப் பாடுவதிலும், போற்றுவதிலும் 'தவதாஸோஹம், தவதாஸோஹம்' என்று சொல்லிக் கண்ணீர் உகுப்பதிலும் அவருக்குண்டான ஆனந்தத்துக்கு எல்லை இல்லை. தியாகராஜ கீர்த்தனைகளின் உட்கருத்து எல்லோருக்கும் எளிதில் விளங்க மொழிபெயர்த்து விரிவுரையுடன் வெளியிடுவதற்காகச் சென்ற சில ஆண்டுகளாக உழைத்து வந்தார். இது அவருக்குப் பெரிய ஆறுதலாகவும் ஆத்ம சாதனமாகவும் இருந்தது. இந்நூல் அவருடைய ஞாபகார்த்தப் பதிப்பாகச் சில மாதங்களில் வெளிவரும்.

ஸ்ரீ ராமகிருஷ்ண மாணவர் இல்லத்தைத் தொடர்ந்து நடத்துபவர்களுக்கு உதவியாயிருக்கும் பொருட்டு இல்லத்தின் சட்ட திட்டங்களையும், மூலதனங்களையும், வருவாய் செலவு முறைகளையும், ஆண்டறிக்கை ஜனவரி 1-ந் தேதி பிரதி வருஷமும் வெளியிட வேண்டும் என்பது போன்ற பல சிறந்த கட்டுப்பாடுகளையும் ஏற்படுத்தினார்.

ஸ்ரீ ராமகிருஷ்ண மாணவர் இல்லம் இன்று போல் என்றும் சிறந்த கல்விக் கோயிலாகவும், ஸ்ரீராமானுஜாச்சாரியாருக்கு ஒப்புயர்வற்ற ஞாபகச் சின்னமாகவும் விளங்கும் என்பது திண்ணம்.

ரகுபதி ராகவ

[அகமதாபாத் நவஜீவன் காரியாலயத்தினர் பிரசுரம் செய்திருக்கும் 'சத்தியமே தெய்வம்' என்னும் காந்தி வசன மஞ்சரியிலிருந்து ராஜாஜி எடுத்து எழுதியது]

54

முதன் முதலில் 1888-ம் ஆண்டில் பகவத்கீதையை நான் கண்டேன். அப்பொழுதே நான் நிர்மானித்தேன், இது யுத்தத்தைப் பற்றி அரசகுமாரனுக்கும் கண்ணனுக்கும் நடந்த ஒரு உண்மை சம்பாஷணை என்று வைத்துக் கொள்ளக்கூடாது என்று எனக்குள் முடிவு கட்டிக் கொண்டேன். போரை ஒரு உருவகமாக வைத்துக் கொண்டு மனித உள்ளத்தில் எப்போதும் நடைபெறும் யுத்தமாகிய மனக் குழப்பத்தைப் பற்றிய உபதேசம் கீதை என்றே நான் எப்போதும் கருதி வருகிறேன். மனிதன் உள்ளத்தை ஒரு புறம் நன்மை இழுக்கின்றது. மற்றொரு புறம் காமக்குரோதாதிகள் இழுக்கின்றன. இதுவே யுத்தம். இந்த யுத்தத்தைத்தான் குருக்ஷேத்திர யுத்தமாக வைத்துக் கொண்டு கண்ணன் உபதேசிக்கிறான். உள்ளத்தில் எப்போதும் நடைபெறும் மல்யுத்தத்தைப் பற்றி உபதேசிப்பதற்காகப் பாரத யுத்தத்தை எடுத்துக் காட்டாக வைத்து கீதை அமைந்திருக்கிறது. எனக்குப் பல ஆண்டுகளுக்கு முன் உண்டான இந்தக் கருத்து, பிறகு சமய ஆராய்ச்சி நன்றாகச் செய்து கீதையை ஆழ்ந்து படித்த பிறகும் ஊர்ஜிதமாயிற்று. மகா பாரதத்தை ஆராய்ந்த பிறகு இன்னும் உறுதிப்பட்டது.

நாம் படிக்கும் சரித்திர புஸ்தகங்களைப் போன்றது அல்ல மகாபாரதம். அதில் காணும் வீர புருஷர்களுக்கு வியாச பகவான் அதிமானுஷ்ய லட்சணங்கள் தந்து, இது சரித்திரமல்ல நீதிக் கதை என்று தெளிவாகச் செய்து விட்டிருக்கிறார். கதா பாத்திரங்கள் உண்மையில் அரசு புரிந்தும் வாழ்ந்தும் வந்தவர்களாகவே இருக்கலாம். ஆனால் அவர்களை வைத்துக் கொண்டு, தர்மத்தைப்போதிக்கவே மகாபாரதம்எழுதப் பட்டிருக்கிறது. வெறும் சரித்திரமல்ல.

ஆயுதங்கள் எடுத்து யுத்தம் செய்வதே தர்மம் என்று மகாபாரதத்தில் உபதேசித்து நிரூபிக்கப்படவில்லை. விரோதத்திலும் போர் செய்வதிலும் உண்மையில் நன்மையில்லை என்றே மகா பாரதம் நிரூபிக்கிறது. யுத்தத்தில் வெற்றி பெற்றவர்கள் பிறகு கண்ணீர் வடித்து, துயரம் மேலிட்டுச் சங்கடப்படுவதாகவே பாரதத்தில் வர்ணிக்கப் படுகிறது. ஆயுத பலங் கொண்டு செய்யப்படும் யுத்தத்தில் வெற்றி யடைவதனால் துக்கமே யன்றி சந்தோஷமில்லையென்பதே மகாபாரதத்தின் முடிவு. பாரதத்தின் சூடாமணி கீதையாகும். இரண்டாவதுஅத்தியாயத்தில்கீதாசாரியன் என்ன உபதேசிக்கிறான்? ஆயுதங்களைப் பற்றி உபதேசிக்கவில்லை. வியூகங்களைப் பற்றி உபதேசிக்கவில்லை. பூரண ஞானியினுடைய லக்ஷணங்களைப் பற்றி உபதேசிக்கிறான். ஒருவன் ஸ்திர புத்தியும் சம நிலையும் அடைந்ததாக எப்பொழுது சொல்லலாம் என்பதைப் பற்றித் தான் உபதேசிக்கப்படுகிறது. ஆயுதங்கள் எடுத்துப் போர் செய்யும் வீரனுடைய இலக்கணம் சொல்லப்படவில்லை. அந்த அத்தியாயத்தில் யுத்தத்தில் ஆயுதங்கள் எடுத்து எதிர் நின்று போர் செய்யும் இரு கட்சிகளுக்கு உதவக்கூடிய விஷயம் ஏதுமில்லை.

கீதையில் உபதேசம் தரும் கண்ணன் பூரண புருஷன். முற்றுணர்வு பெற்றவன். நம்மைப் போன்ற மனிதனல்ல. நாம் தெய்வமாகக் கருதும் கிருஷ்ணன் இருந்ததே இல்லை என்று நான் சொல்லவில்லை. இருந்தான். ஒரு சரித்திர புருஷனுக்கு அதிமானுஷ்ய இலக்கணங்களைக் கற்பித்து, ஒரு பூரண அவதாரமாகச் செய்திருக்கிறோம். தர்மப் பிரசாரத்துக்குஇதுஅவசியம். தவறுஒன்றுமில்லை.

மக்களுக்கு மிகப் பெரிய சேவை யாரேனும் செய்தால் அவனை ஹிந்து சம்பிரதாயத்தில் அவதாரமாகக் கருதுவது வழக்கம். ஜீவன்களனைத்தும் ஈசனுடைய அவதாரமே யாகும். ஆயினும் எல்லாச் சாதாரண மனிதர்களையும் நாம் கடவுள் அவதாரமாக வழிபடுவதில்லை. தன்னுடைய வாழ்க்கையில் தர்மத்தை நிலைநாட்டி மக்களுடைய பாராட்டுதலைப் பெற்றவன் காலம் சென்ற பின், பின் சந்ததியாரால் அவதார புருஷனாகக் கருதப்படுகிறான். இதில் நான் ஏதும் தவறு காணவில்லை. ஆண்டவனுடைய பெருமைக்கு இது குறையாகாது. அற வழியில் நின்று பெருமை யடைந்தவர்களை அவதார புருஷர்களாகப் பாவிப்பது உண்மையைப் புறக்கணித்ததாக நினைக்கலாகாது. ''பரம்பொருள் ஆகிய தீயினின்று பறந்த ஒரு பொறியாவான் ஆதம்'' என்பது உருதுபழமொழி. தர்மம் பிழையாமல் வாழ்பவன் கடவுளுடைய அம்சம் என்பதில் சந்தேகமில்லை. இதை ஒப்புக் கொண்டால் கீதாசாரியனைப் பாரத மக்கள் அவதாரபுருஷனாக வழிபடுவது சரியே என்பதைக் காணலாம்.


ஒவ்வொருவருக்கும்
ஒவ்வொரு
சந்தர்ப்பத்திற்கும்
ஏற்ற விசேஷ
கைத்தறித்
துணி
கிடைக்கிறது.
கைத்தறித்
● துணிகள்
நேர்த்தியான
நெசவு ● கலர் ● டிசைன்
அகில இந்திய கைத்தறி போர்டு
சென்னை - பம்பாய் - கான்பூர்

வட்ட மேஜை

"என்னுடைய கருத்து"

"என்னுடைய கருத்து" என்ற தலைப்பில் ராஜாஜி அவர்கள் எழுதியுள்ளதைப் படித்தேன். படிக்கும்பொழுதே பக்தியைப் பரப்ப ஓர் ஊக்கம் கொடுக்கிறது.

பக்தி, கோவில்கள், இராமாயணம், பாரதம், பாகவதம் ஒவ்வொன்றும் தோன்றிய காரணங்களை மிகவும் அழகான முறையில் சுருக்கமாகத் தெளிவுபடுத்தியுள்ளார்.

இதுபோன்ற விவரங்களை அடிக்கடி தெரிவித்தால் பகுத்தறிவுள்ளவர்கள், பகுத்தறிவு இல்லாமல் விதண்டாவாதம் பேசுபவர்களுக்குப் போதிக்கப் பயன்படும்.

பையங்காடு
12—11—56 பி. ஆர். கிருஷ்ணமூர்த்தி

*

ராஜாஜி எழுதிய "என் கருத்து" என் சிந்தையைக் கவர்ந்தது. சமயப் பிரசாரம் செய்யக் கடல் கடந்து சென்ற வீரத் துறவி விவேகானந்தர் கூறியபடி உலகமே அழிந்து, நான்கே மனிதர்கள் உயிர் தப்பினாலும்கூட அவர்கள், ஸ்ரீ ராமனின் தூய்மையையும் சீதாபிராட்டியின் சிறப்பையும் பற்றிப் பேசுவார்கள். ராமாயணமும், பாரதமும் பாரத மக்களுடைய உள்ளங்களைப் பண்பட்ட உயிர்களாக்கி யிருக்கின்றன. இது நம்மையும் அறியாமல் ஏற்பட்ட மாறுபாடாகும். இதை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெள்ளென எடுத்துக் காட்டும் ராஜாஜியின் சிறிய கட்டுரை அக்ஷர லக்ஷம் பெறும்.

பகவத்கீதையை மீண்டும் மீண்டும் படித்து விதம்விதமான ஆனந்தமும் அறிவும் எப்படிப் பெறுகிறோமோ, அந்த வகையைச் சேர்ந்தது ராஜாஜியின் 'என் கருத்து.'

தக்கோலம்
10—11—56 கே. ஆர். கிருஷ்ணமூர்த்தி

அற்புத மலர்

சாகித்ய அகாடமியார் நடத்தும் புத்தகக் காட்சியில் பங்கு கொள்வதற்காகப் புது தில்லிக்கு வந்திருக்கிறேன்.

'கல்கி' மலர் மிகவும் சிறப்பாக அமைந்துள்ளது. பல அரிய விஷயங்களும், அற்புத ஓவியங்களும் அடங்கிய மலர் மூன்று ரூபாய்க்குக் கிடைக்கிறதென்றால், மிகவும் மலிவு என்று மனமாரக் கூறலாம். இத்தகைய மலர்களை மேன்மேலும் தாங்கள் வெளியிட்டுக் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்து அளித்து வரவேண்டுமென்பதே என் அவா; இங்குள்ள பல நண்பர்களின் அவாவுமாகும்.

புது தில்லி
9—11—56 அழ. வள்ளியப்பா

"இலக்கியச் செல்வம்"

உலக மொழிகளிலுள்ள இலக்கியச் செல்வங்கள் ஆங்கிலத்தில் கிடைக்கின்றன. ஆனால் தமிழில் அவை பெரும்பாலும் வரவில்லை. மொழிபெயர்க்கப்படும் நூல்களும் சாதாரணமாக இரண்டாந்தர நாவல்களே என்று சொல்லலாம். இந்த நிலையில் 'கல்கி'யில் வெளிவரும் "இலக்கியச் செல்வம்" நாம் இதர மேல்நாட்டு மொழிகளின் இலக்கியங்களைத் தெரிந்து கொள்வதற்கும், அதன் மூலம் தமிழ் இலக்கியத்தின் சிறப்பை உணர்வதற்கும் துணை செய்யும் என்பதில் ஐயமில்லை. பேராசிரியர் அ. சீநிவாசராகவன் இப்பணியை ஏற்றுக்கொண்டிருப்பது தமிழ்மக்கள் செய்த பாக்கியம்தான். எவ்வளவோ சிரமப்பட்டுப் பலவருஷங்கள் முயற்சி செய்து, பெற வேண்டிய இலக்கிய ஞானத்தையும் கருத்துக் குவியல்களையும் ஓரிரு கட்டுரைகளில் மிக எளிதாக நாம் உணர்ந்துவிட முடிகிறது.

"கல்கி" தீபாவளி மலரில் பேராசிரியர் எழுதியுள்ள நாடகம் உள்ளத்தை உருக்குவதாக இருக்கிறது. நுட்பமான இதயங்களின் உள்ளோட்டங்களை மிக நுணுக்கமாகச் சித்திரிக்கும் அழகு பிரமிக்கும்படியாய் இருக்கிறது. அடிக்கடி இம்மாதிரி நாடகங்கள் "கல்கி"யில் வெளிவருமானால், தமிழ் நாடகம் விரைவில் உன்னத நிலை அடைந்துவிடும் என்பது உறுதி. புதிய எழுத்தாளர்களுக்கு, இந்நாடகங்கள் வழிகாட்டிகளாக இருக்கும்.

திருச்சி எஸ். கந்தசாமி
8—11—56 "துறைவன்"

முருகனுக்கு வில் உண்டா?

திரு கனுதேசாயின் ஓவியங்களை எங்களுக்கு அளித்து வருவது பற்றி மிக்க மகிழ்ச்சி. சென்ற 'கல்கி' இதழ் அட்டையில் அக் கலைஞரின் ஓவியம் – குன்றுதோறாடும் குமரனின் திரு உருவம் அளிக்கப்பட்டிருக்கிறது. திரு முருகன் கையில் வேல் தாங்காது வில்லும் அம்பும் கொண்டிருக்கிறார். இந்தக் கோலம் புதுமைக் கோலமா யிருக்கிறது! வேலும், மயிலும் இணை பிரியாதவை. மேற் கண்ட கோலத்துக்கு இலக்கிய ஆதாரமும் இருப்பதாகத் தெரியவில்லை.

தமிழன் கலையை என்றும் ரசிப்பவன். தமிழகம் கலையை என்றும் வரவேற்கும். ஆனால் தமிழகக் கலை கருத்துக்கு முரண்படாது. கருத்துடன் ஒவ்வாத எந்தச் சிறிய கலையையும் தமிழகம் ஏற்காது.

சென்னை
11—11—56 எஸ். டி. லக்ஷ்மி நரசிம்மன்

*

'கல்கி' தோன்றிய இத்தனை ஆண்டுகளில் நவம்பர் 11வ. இதழ் அட்டையை அலங்கரித்த சித்திரம் போல் எந்தச் சித்திரமும் அலங்கரித்ததில்லை.

வேலன் வில்லேந்தியிருப்பதைப் பார்த்துச் சிலர் என்னிடம் கேட்டதற்குத் திருச்செந்தூர் தல புராணத்தைப் படிக்கும்படியும், ஐயாறப்பன் கோவிலையும் சாயக் காட்டுக் கோவிலையும் பார்க்கும்படியும் சொன்னேன்.

திருச்செந்தூர் தலபுராணத்தில் இப்படி ஒரு கதை கூறப்படுகிறது.

குறித்த காலத்தில் இராமன் காட்டிலிருந்து நாடு திரும்பாதது கண்ட குகன் கங்கையின் கரையில் தனது ஊராகிய சிருங்கிபேர புரத்

தில் அன்ன ஆகாரமின்றிப் படுத்த படுக்கை யாகி, உடல் மெலிந்து, சக்கரவர்த்தித் திருமகனைப் பற்றி நினைந்து நினைந்து புலம்பு கிறான். அப்போது அவன் குலதெய்வமாகிய முருகன், வள்ளியைச் சீதையாகவும் தேவயானையை லக்ஷ்மணனாகவும் தான் ராமனாக வும் உருவமெடுத்துக் குகனது கனவில் தோன்றி, "குறித்த காலம் இன்னும் வர வில்லை, இன்னும் கொஞ்சம் அவகாசம் இருக்கிறது. அப்போது வந்து சேருவோம். நீ கவலையை விடு" என்று கூறி மறைகிறான்.

இப்படி நம் முன்னோர்கள் வேலனுக்கு ராமன் வேஷம் போட்டுப் பார்த்து மகிழ்ந் தார்கள்; புராணமும் பாடி வைத்தார்கள்.

இதைத் தவிர, திருவையாற்றிலே ஐயாறப் பன் கோவிலில் வில்லேந்திய முருகனைக் காண கிறோம். அங்கு அவன் தனுஷ் சுப்பிரமணியன் என்ற நாமம் தாங்கி உலகை உய்விக்கிறான். காவிரிப்பூம் பட்டினத்தின் அருகே சாயவனம் என்னும் சாயக்காட்டிலேயும் வில்லேந்திய முருகன் சிலா உருவத்திலே யிருக்கிறான்.

முருகனின் இந்தக் கோலங்கள் எல்லாம், வடநாட்டுக் கலைஞராகிய தனு தேசாய்க்கு எப்படித் தெரிந்தன என்பதை நினைக்க நினைக்க ஆச்சரியமாக இருக்கிறது!

திருச்செந்தூர்
12—11—56

எம். ஆர். மேகநாதன்

கலைப் பொக்கிஷம்

"அபலை அஞ்சுகம்" என்ற தொடர் கதை படிக்கப் படிக்கத் தெவிட்டாத விருந் தாக வருகிறது. 'ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமை எப்போது வரும்? 'கல்கி' யில் "அபலை அஞ்சுகம்" படிக்க வேண்டுமே?' என்ற நிலை ஏற்பட்டு விட்டது.

'கடல்கண்டகனை'யிலே வந்த சாருகேசிக்கு, தன் தாய்நாட்டுப்பற்றுக்காகத் தன் உயிரைக் குதிரைகளின் காலடியிலே—மனித மிருகங் களின் காலடியிலே — விட்ட அந்த வீரப் பெண்மணிக்கு "ஒரு நினைவுச் சின்னம்" ஏற்படுத்த வேணும்.

"ஜைமராஜா" என்ற தொடர்கதையின் போக்கு அற்புதம். ஒவ்வொரு வாரமும் எந்த முறையிலே வரும் என்ற ஆவலுடன் பரபரப்பைத் தூண்டி வருகிறது.

ஆங்கிலக் கவிதைகளை மிகவும் அழகான முறையிலும், எளிய நடையிலும், இனிய தமிழிலும் கலை விருந்தாக அளித்துவரும் பேராசிரியர் அ. சீநிவாசராகவன் அவர் களுக்கு மனமார்ந்த நன்றி.

கீழவெடயல்
9—11—56

ஆர். சீனிவாசன்

ராணுவமும் சுதந்திரமும்

"ராணுவத்தினர் 1942-ம் ஆண்டில் தேசத் துரோகம் செய்தவர்கள். அவர் களுக்காக அரசாங்கம் கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவு செய்கிறது. ராணு வத்தினர்களுக்குச் சலுகையும் வசதியும் செய்து தருகின்றது. மாஜி ராணுவத்தினர் களுக்காகத் தனி இலாக்கா ஏற்படுத்தி அவர் களது நலனைக் கவனித்து வருகிறது. இவை களை நிறுத்த வேண்டும்" என்று சிலர் கூறி வருகின்றனர்.

பொது மக்களுக்கு நான் தெரியப்படுத்து வது என்னவென்றால், 1945-ம் ஆண்டு கப்பல், தரை, ஆகாயப்படைகளில் ஏற்பட்ட புரட்சியினால்தான் நம் தேசம் விடுதலை அடைந்து சுதந்திர நாடாக ஆயிற்று. சிலர் சொல்வதுபோல் காங்கிரஸ் தியாகிகளால் மட்டும் அல்ல. ராணுவம் இல்லாவிட்டால் பெற்ற சுதந்திரத்தைக் காப்பாற்ற முடியாது.

சேடபாளையம்
7—11—56

பி. பாலசுந்தரம்

அறிவுக்கு விருந்து

'கல்கி' மலர் கண்ணுக்கும், அறிவுக்கும் ஒருங்கே விருந்தாய் அமைந்திருக்கிறது. ஸ்ரீ எஸ். மகராஜன் தம் சொல்வன்மையினால் ரஸிகமணியை, அவர் அணுஅணுவாகச் சுவைத்த ரஸிக நினைப்புகளால், நம் முன் உயிரோடு நிறுத்தி விடுகிறார். 'மாண்டவி' ஒரு உயர்ந்த வளம் செறிந்த கற்பனை. உயர் திரு குன்றக்குடி அடிகளாரின் 'வீட்டின் விளக்கம்' மெய் சிலிர்க்கச் செய்கிறது. தர்மம் செய்வதின் அவசியத்தையும், அதை ஆண்டவன் பேரால் செய்வதன் பயனையும் அவர்போல் விளக்க யாரால் முடியும்? அவரது கட்டுரையைப் படித்து முடித்த பின், நம் தென்னாட்டுக் கோயில் ஒன்றின் முன் நின்ற புத்துணர்ச்சி எனக்கு உண்டாயிற்று.

வீத்தர்
6—11—56

சரோஜினி ஜகந்நாதன்

ஐந்து ரூபாய் உயர்ந்தது!

பிரபல மேனாட்டு ஹாஸ்ய நடிகரான 'சார்லி சாப்ளி'னின் ஒவ்வொரு 'சேஷ்டை யி'லும் ஓர் நவீன சீர்திருத்தக் கருத்து மறைந்திருந்து, சம்பந்தப் பட்டவர்களின் குற்றம் குறைகளைச் சிரிக்கச் சிரிக்கச் சொல்லா மற் சொல்லும். அதைப்போன்று நமது சர்க்கார் என்.ஜி.ஓ.க்களுக்கு அளித்திருக்கும் ஐந்து ரூபாய் சம்பளச் சலுகையினால் அவர் களுக்கு ஏற்பட்டிருக்கும் புதிய தர்ம சங்கட மான சூழ்நிலையைச் சிரிக்கச் சிரிக்க மனத்தில் பதிய வைக்கிறது ஸ்ரீ உமாபதியின் "ஐந்து ரூபாய் உயர்ந்தது" என்னும் சித்திரம்!

கும்பகோணம்
11—11—56

நடராஜன்

அருமையான வர்ணனை!

ஜவாஹர் ஜெயந்தி மலரில் ஆரம்பமான ராஜம் கிருஷ்ணன் எழுதும் 'பானுவின் காதலன்' என்ற தொடர் கதையைப் படித் தேன். கதாநாயகன் சின்னத்துரையைப் பற்றியும், அவரது கடை மசால் வடையைப் பற்றியும் எழுதிய வர்ணனை பிரமாதமாக அமைந்து விட்டது. சின்னத்துரை சொல்லும் கதைக்காக அந்தோனி கடையைச் சீக்கிரம் மூடி விட்டு, கேட்கத் தயாராகிறான். நமக்கும் படிக்க வேண்டும் என்ற ஆவல் எழும்போது 'கல்கி' வரும் வாரமெல்லாம் தானாக இருக் கக் கூடாதா என்று எண்ணத் தோன்றுகிறது.


விழுப்புரம்
14—11—56

எஸ். கே. மூர்த்தி



பார்லேயின்
க்ளுகோ
பிஸ்கட்டுகள்
Gluco BISCUITS
வைடமின்கள்
செறிந்தவை
சுவையோடுகூடிய போஷாக்குக்கு
PG. 53-T4

அழகப்பரின் அதிசய சாதனைகள்



2. ஆராய்ச்சி விந்தைகள்

காரைக்குடியில் இருக்கும் மிகப் பெரிய மின்சார ரஸாயன ஆராய்ச்சிக் கூடத்தின் ஒவ்வொரு பகுதியையும் பார்ப்பதற்காக அந்தக் கட்டடத்தின் நீளமான வராந்தா வழியாகச் செல்லும் போதே "இனிமேல் நாம் எல்லா ரஸாயனப் பொருள்களையும் இந்தியாவிலேயே தயாரித்து விடலாம்" என்றார் மின்சார ரஸாயன நிபுணர் திரு ஆராவமுதன். நான் வியப்படைந்து போனேன். "அப்படியானால் நம் நாட்டில் இதுவரையில் ரஸாயனப் பொருள்களே உற்பத்தியாகவில்லையோ?" என்று கேட்டேன்.

"எத்தனையோ ரஸாயனப் பொருள்கள், பல கோடி ரூபாய் மதிப்புள்ளவைகள் வருஷா வருஷமும் வெளிநாடுகளில் இருந்து இந்தியாவுக்கு வருகின்றன" என்று பதில் கிடைத்தது.

ராமநாதபுரம் ஜில்லாவைச் சேர்ந்த ஒருத்தர் எங்களுடன் இருந்தார். "எல்லா ரஸாயனப் பொருள்களும் இந்தியாவிலேயே தயாராகப் போகின்றன" என்று பெருமையாகச் சொல்லிக் கொண்டார். பொதுவாகத் தமிழ் நாட்டில் உள்ள இதர ஜில்லாக்காரர்கள் ராமநாதபுரம் ஜில்லாக்காரர்களைப் பார்த்து, "உங்கள் ஜில்லாவில் என்ன இருக்கிறது?" என்று சற்று ஏளனமாகக் கேட்டு விட்டுத் தங்கள் ஜில்லாக்களை நினைத்துப் பெருமைப்படுவது வழக்கம்.

இனிமேல் யாரும் அப்படி ராமநாதபுரம் ஜில்லாக்காரர்களைப் பார்த்துக் கேட்டுவிட முடியாது. அவர்கள் ஜில்லாவில் அற்புதமான அழகப்பா கல்லூரிகள் இருக்கின்றன. மின்சார ரசாயன ஆராய்ச்சிக் கூடம் இருக்கிறது. இதனால் ராமநாதபுரம் ஜில்லாவின் புகழ் உலகமெங்கும் பரவப் போகிறது.

"வாருங்கள், முதலில் இந்த ஆராய்ச்சிப் பகுதிக்குள் செல்வோம்" என்றார் ரஸாயன நிபுணர் ஆராவமுதன்.

இந்தப் பகுதிக்குள் சென்றவுடன் எனக்கு ஒன்றுமே புரியவில்லை. ஏதோ ஒருவிதமான மணம் தலையைக் கிறுகிறு என்று சுற்றும்படி செய்தது. அந்தத் தலைச்சுற்றலை ஒருமாதிரி சமாளித்துக் கொண்டு "என்னென்ன ஆராய்ச்சிகள் இங்கு நடைபெறுகின்றன? அதனால் என்ன நன்மைகள் ஏற்பட்டு விடும்?" என்று ஒருமாதிரி கேட்டு வைத்தேன்.

"எத்தனையோ நன்மைகள் ஏற்படப் போகின்றன. எவ்வளவோ அதிசயமான ஆராய்ச்சிகள் நடைபெற்று அதில் நல்ல வெற்றியும் பெற்றிருக்கிறோம்!" என்று கடகடப் பதில் கூறினார் ஆராவமுதன். அவருடைய பதில் என்னை ஆச்சரியத்தில் கொண்டு போட்டு ஆராய்ச்சிசெய்யத் தூண்டிவிட்டது.

"இதோ பாருங்கள், 'ஹைட்ரஸீன்' (Hydrazine) என்னும் பொருளை இங்கு தயாரிக்க முயற்சி செய்து வருகிறோம். இது நம் நாட்டில் குறைவு. அமோனியா வாயுவிலிருந்து ஹைட்ரஸீனை உண்டாக்க ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன. இதுபோலவே "பார்மால்டிஹைட்" என்னும் பொருளைக் கரிவாயு, ஹைட்ரஜன் வாயு இவைகளின் சேர்க்கையால் மின்சாரத்தின் மின்னல் தாக்குதல் மூலம் தயாரிக்க முயற்சி செய்து வருகிறோம்" என்று கூறி அது தயாரிக்கும் ஆராய்ச்சிப் பகுதிக் கூடத்துக்கு அழைத்துச் சென்றார்.

இந்தக் கூடத்துக்குள் பலமாதிரியான ஆராய்ச்சிக் கருவிகள் இருக்கின்றன. மின்சாரக் கம்பிகள், கண்ணாடிக் குழாய்கள், அந்தக் குழாய்களுக்குள் என்னென்னவோ ரசாயனப் பொருள்கள் இருக்கின்றன. பார்க்கும் இடமெல்லாம் இப்படிப் பலவிதமான விசித்திரக் கருவிகள் தான் இருந்தன.

அடாடா! இந்தக் கருவிகளைக் கொண்டு தான் ரஸாயன நிபுணர்கள் என்னென்ன அதிசயங்களைச் செய்து விடுகிறார்கள்! ஒரு பொருளிலிருந்து இன்னொரு பொருளையே உண்டாக்கி விடுகிறார்கள். 'ஹைட்ரஸீ'னும் 'பார்மால்டிஹைடு'ம் குறைந்த செலவில் தயாரித்து அதில் வெற்றியும் பெற்றுவிட்டால் அதைக் கொண்டு எவ்வளவோ காரியங்களைச் சாதிக்கலாம் என்றார் ஆராவமுதன். அந்தப் பொருளைக் கொண்டு என்னென்ன செய்யலாம் என்பதைவிட அதைக் குறைந்த செலவில் தயாரிக்கும் முயற்சியைப் பாராட்டி விட்டு அடுத்த கூடத்துக்குச் சென்றேன்.

"இவ்வளவு சாதாரணமாக இதைப்பற்றிக் கூறி விட்டீர்களே!" என்றார்.

"நான் என்ன ஆராய்ச்சி நிபுணரா? சாதாரண மனிதன்தானே!" என்றேன்.

"அப்படியில்லை. இதற்காக எத்தனை பேர்கள், எவ்வளவு பாடுபடுகிறோம் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டாமா?"

"தெரிந்து கொள்ள வேண்டியதுதான்."

டாக்டர் ஏ. ஜோகராவ் என்பவர் இந்த ஆராய்ச்சிக் கழக ஆரம்ப காலத்திலிருந்து திட்ட ஆபீஸராகவும், திட்ட உதவி டைரக்டராகவும் இருந்து மிகச் சிறந்த முறையில் பணியாற்றி வருகிறார். இப்பொழுது ஆராய்ச்சியில் ஒரு பகுதிக்கு உதவி டைரக்டராக இருந்து வருகிறார். அவருடன் ஒரு நிர்வாக அதிகாரியும், நான்கு உயர்தர விஞ்ஞான அதிகாரிகளும், மூன்று துணை விஞ்ஞான அதிகாரிகளும், இன்னும் பல தரப்பட்ட உதவி ஆராய்ச்சியாளர்கள்,

இஞ்சினீயர்கள், மெக்கானிக்குகள் எல்லாரும் வேலை பார்த்து வருகிறார்கள்.

ஒரே ரஸாயனப் பொருளைப் பல மருந்துகளின் சேர்க்கையாலும், பிரிவாலும், உஷ்ணத்தைத் தக்கபடி கொடுத்தும், எடுத்தும் தயார் செய்யலாம். மின்சார சக்தியை உபயோகப்படுத்தியும் தயார் செய்யலாம். ஆனால் மின்சார சக்தியின் மூலம் தயாரிக்கும் ரஸாயனப் பொருள்கள் சுத்தமாகவும், தரம் குறையாமலும் இருக்கின்றன. இந்த முறையில் ஆராய்ச்சி செய்து வெற்றி கண்டு விட்டால் இதுதான் எளிய முறை; சிக்கனமானதும் கூட. இந்த ஆராய்ச்சிக் கூடத்தில் பல ரஸாயனப் பொருள்களைக் கண்டு பிடித்து அதில் வெற்றியும் பெற்று விட்டார்கள்.


சாதாரணமாகக் கடலில் கப்பல் செல்வதை நாம் எல்லாரும் பார்க்கிறோம். ஆனால் அதைப் பற்றி யெல்லாம் நாம் அதிகமாகச் சிந்திப்பதில்லை. 'கடல் உப்புநீராயிற்றே. அந்த நீரில் கப்பல் செல்லுகிறதே. கப்பலின் அடிப்பாகம் உப்பு நீரில்தானே இருக்கும். அதனால் கப்பலின் அடிப்பாகம் கெட்டுவிடுமே' என்று யாருமே யோசித்திருக்க முடியாது. உப்பு நீரில் எந்த உலோகமும் அதிகநாள் இருக்க முடியாது. ஆகையால் கப்பலில் கடல் நீருடன் தொடர்பு கொண்டுள்ள உலோகப் பகுதிகள் துருப் பிடிக்காமல் இருப்பதற்காக அதில் சிவப்பு வர்ணம் பூசியிருப்பார்கள். இந்தச் சிவப்பு வர்ணத்துக்கு வேண்டிய ரஸாயனப் பொடியைத் தயாரிப்பதற்கு பொடாஷியம் குளோரேட், பர்குளோரேட், பாரா அமினோ பினல், தாமிர ஆக்ஸைட் முதலியவைகள் வேண்டும். இந்தப் பொருள்களை இந்த ஆராய்ச்சிக் கூடத்தில் மின்சாரத்தைப் பயன்படுத்தித் தயார் செய்கிறார்கள்.

"இந்த ஆராய்ச்சிக் கூடத்தில் தயாரான பொருளை மேல் நாட்டிலிருந்து வரும் பொருளுடன் ஒப்பிட்டுப் பார்த்தீர்களா? இரண்டின் தரமும் எப்படி இருக்கிறது?" என்றேன்.

"இந்தப் பொருள்கள் வெளி நாடுகளில் இருந்து இறக்குமதியாகும் பொருள்களுக்கு எந்த விதத்திலும் குறைந்ததில்லை. இதன் தன்மைக்கும், தரத்துக்கும் மாசு மறு கூற முடியாது. இதைப் பல ஆராய்ச்சிகள் மூலம் நிரூபித்து விட்டோம். பல தொழில் ஸ்தாபனங்களும், சர்க்கார் இலாக்காக்களும் இந்தப் பொருளை உபயோகப்படுத்தி ரொம்பவும் திருப்திப் பட்டிருக்கின்றன. இந்த ஆராய்ச்சிக் கூடத்தில் மின்சார ரஸாயன முறையில் தயாரான பொருள் தரத்தில் உயர்ந்தது என்று அத்தாட்சியும் கொடுத்திருக்கின்றன" என்றார் ரஸாயன நிபுணர்.

இந்த ஆராய்ச்சிக்கூடத்தில் சில ரஸாயனப் பொருள்களை மின்சார ரஸாயன முறையில் சிறிய அளவில் தயாரித்துக் காட்டியிருக்கிறார்கள். இவைகளைப் பெரிய அளவில் தயாரிப்பதால் ஏற்படும் நன்மைகளையும் ஆராய்ந்து பார்க்கச் சில தொழில் ஸ்தாபனங்கள் கேட்டுக் கொண்டிருக்கின்றன. அதாவது இந்த ஆராய்ச்சிக்கூடத்தால் நாட்டுக்கு நன்மை ஏற்படுகிறது என்பதற்கு நல்ல ஆரம்பம்.

ஆராய்ச்சிக் கூட நூல்நிலையத்துக்கு உலகில் உள்ள அத்தனை விஞ்ஞானப் பத்திரிகைகளும் வருகின்றன. அவைகளை அழகாக அடுக்கி வைத்திருக்கும் அமைப்பையும், மின்சார ரஸாயன ஆராய்ச்சிக்கூடத்தின் சில பகுதிகளையும் படத்தில் காணலாம்.



'கால்ஸியம்குளுகனேட்' என்னும் பொருளை மின்சார ரஸாயன முறையில் பெரிய அளவில் தயாரிப்பதற்குத் திட்டமிட்டு வருகிறார்கள்.

மேலே கூறிய பல ரஸாயனப் பொருள்கள் மின்சார முறையில் நம் நாட்டில் தயாரித்தால் எத்தனை எத்தனையோ தொழில்களுக்குப் பேருதவியாக இருக்கும் என்பதை அறிந்தேன்.

காரைக்குடி பாட்டரி

இந்தக்கூடத்தில் பாட்டரி சம்பந்தமான சில முக்கிய ஆராய்ச்சிகள் நடத்தி அதில் வெற்றியும் பெற்றிருக்கிறார்கள்.

''பாட்டரியா? அப்படியென்றால் என்ன?''

மோட்டார் ஓடுகிறது; ரயில் ஓடுகிறது; டெலிபோனில் பேசுகிறார்கள்; ரேடியோவில் பாட்டைக் கேட்கிறார்கள்; 'டார்ச்' லைட்டைக் கொண்டு வெளிச்சம் பெறுகிறார்கள். இதற்கெல்லாம் மிகவும் உபயோகமான முக்கிய பொருள் பாட்டரி. பாட்டரிக்கு மிகவும் அவசியமான பொருள் 'மாங்கனீஸ் டை ஆக்ஸைடு'. இது அதிக விலையுள்ள பொருள். இதை வாங்குவதற்காக இந்தியாவிலிருந்து எத்தனையோ லட்சம் ரூபாய்கள் மேல்நாடுகளுக்குச் செல்கின்றன. இந்தப் பொருளுக்காக இந்தியாவின் செல்வம் மேல்நாடுகளுக்குச் செல்லாமலும், இந்தியாவில் கிடைக்கும் சில தாதுப் பொருள்களிலிருந்தே காரைக்குடி ஆராய்ச்சிக்கூடத்தில் ஒருபாட்டரி கண்டு பிடித்து விட்டார்கள். மிகக் குறைந்த செலவில் இந்தப் பாட்டரியைத் தயாரித்து விடலாம். இதை இப்பொழுதே சர்க்கார் உபயோகப்படுத்துவதற்குத் துணை செய்தால் ஆண்டுதோறும் பல லட்சம் ரூபாய்கள் இந்தியாவிலிருந்து மேல்நாடுகளுக்குச் செல்வதை நிறுத்தலாம். இந்தத் தொழிலைப் பெரிய அளவில் ஆரம்பிப்பதன் மூலம் எத்தனையோ பேர்களுக்கு வேலை கிடைக்க வழி செய்யலாம்.

இந்தியாவில் இரும்பு மணல் தாதுக்கள் ஏராளமாகக் கிடைக்கின்றன. இது மிக மட்டரகமானதால் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதில்லை. இந்த மணலைச் சாலைகள் போடுவதற்கு உபயோகப்படுத்தி வருகிறார்கள். இந்த இரும்பு மணல் கலந்த மாங்கனீஸ் தாதுவை, இரும்பு எஃகு தொழிற்சாலையிலிருந்து கழிக்கப்படும் கந்தகத் திராவகத்துடன் சேர்த்துத் தயாரிக்கப்படும் உப்பிலிருந்து மின்சார ரஸாயன முறையில் 'மாங்கனீஸ் டை ஆக்ஸைடு' என்னும் பொருளைத் தயாரித்து விடலாம் என்பதை இந்த ஆராய்ச்சிக் கூடத்தில் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

அதிக விலையுள்ள மாங்கனீஸ் டை ஆக்ஸைட் என்னும் பொருள் இல்லாமலேயே இரும்பு அல்லது இரும்பு தாதுக்களையும், மேட்டூரில் ஏராளமாகக் குறைந்த செலவில் உற்பத்தியாகும் குளோரின், ஹைட்ரோ குளோரிக் அமிலம் முதலியவைகளை உபயோகித்தும், நவசாரத்துக்குப் பதிலாகச் சாதாரண உப்பைச் சேர்த்தும் ஒரு பாட்டரி இங்கு கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

இந்தப் பாட்டரிகளைப் பல இடங்களில் பத்து பன்னிரண்டு மாதங்கள் வைத்துச் சோதனை செய்து பார்த்து அதில் திருப்தி அடைந்திருக்கிறார்கள். ரயில் வண்டிகளிலும், தந்தி காரியாலயங்களிலும், பஸ்களிலும், மோட்டார்களிலும் உபயோகப்படுத்திப் பார்த்து அதில் நல்ல வெற்றி கண்டு விட்டார்கள்.

பஸ்களிலும் கார்களிலும் உபயோகப் படுத்தப்படும் பாட்டரிகள் காலப்போக்கில் தகுதியற்றவைகளாகி விடுகின்றன. அவ்வாறு கெட்டுப்போன பாட்டரிகளைக் குப்பையில் எறிந்து விடுவார்கள். ஆனால் அந்தப் பாட்டரியில் உள்ள காரீயமும், அண்டிமனி (Antimony) என்னும் உலோகமும் குப்பையோடு குப்பையாய் இதுவரை போய்க் கொண்டு வந்தது. அந்தக் குப்பைப் பொருளான உபயோகமற்ற மோட்டார் பாட்டரியில் இருக்கும் காரீயத்தையும், அண்டிமனி உலோகத்தையும் மின்சார ரஸாயன முறையில் அதிக செலவில்லாமல் பிரித்தெடுக்கும் அதிசய முறையைக் கண்டுபிடித் திருக்கின்றனர். இவ்வாறு பிரித்தெடுக்கப் பட்ட காரீயத்தையும் அண்டிமனியையும் கொண்டு தயாரித்த பாட்டரிகள் நன்றாக உழைப்பதுடன், புதிய பாட்டரிகளைப் போலவே அதன் தரத்திலும் உயர்வாகவும் இருக்கின்றன.

இந்தியாவில் காரீயத் தாதுப் பொருளும், அண்டிமனி தாதுப்பொருளும் அதிகம் இல்லை. ஆகையால் பழைய பாட்டரியிலிருந்து இந்தப் பொருள்களைப் பிரித்தெடுப்பது மிகவும் லாபம் அளிக்கக் கூடும் என்பதைப் பல தொழில் நிபுணர்கள் உணரத் தொடங்கியிருக்கின்றனர். அதனால் பெரிய அளவில் சோதனை நடத்தும்படி கேட்டிருக்கின்றனர்.

இந்த அதிசயமான பாட்டரியைக் கண்டு பிடித்தவர் மின்சார—ரஸாயன நிபுணர் திரு ஆராவமுதன் அவர்கள். இவர் ஒரு தமிழர் என்பதை எண்ணி நாமெல்லாம் பெருமைப் படலாம். இந்தியாவில் உள்ள பதினாறு ஆராய்ச்சி நிலையங்களில் காரைக்குடி நிலையம் மிகத் திறமையாக வேலை செய்து வருவதுடன், பல ஆராய்ச்சிகளிலும் வெற்றி கண்டிருக்கிறது. தமிழ் நாட்டின் துர்ப்பாக்கியமோ என்னமோ இங்கு எவ்வளவு பெரிய சாதனைகள் செய்தாலும் அதற்கு நல்ல ஆதரவு ஏற்படுவதில்லை. இதே போல் வேறு ஏதாவது நிலையத்தில் கண்டுபிடிக்கப்பட்டிருந்தால் அமர்க்களப் பட்டிருக்கும். அந்த ஆராய்ச்சி நிபுணரை ஆகாயத்தில் தூக்கி வைத்திருப்பார்கள்.

இன்னும் சில ஆராய்ச்சிகள்

இந்தியாவில் நிக்கல் தாது கிடையாது. அதனால் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் என்று அழைக்கப்படும் 'எவர்ஸில்வர்' உலோகக் கலவை செய்ய நிக்கலுக்குப் பதிலாக, அல்லது நிக்கலின் அளவைக் கூடியவரையில் குறைக்கும் வகையில் மாற்றுப் பொருளாகப் பயன்படுவதற்கு உயர்தர மாங்கனீஸ் உலோக உற்பத்தியைப் பற்றிய ஆராய்ச்சியும், மின்சார ரஸாயன முறையில் இங்கு நடைபெறுகின்றது. இந்த மின்சாரத்தால் தயாரிக்கப்படும் மாங்கனீஸ் இந்தியாவில் ஏராளமாகக் கிடைக்கும் மட்டரக மாங்கனீஸ் தாதுவில் இருந்தே தயாரித்து விடலாம் என்பதையும் கண்டுபிடித்திருக்கின்றனர்.

செயற்கைப் பட்டு, 'செலபோன்' காகிதம் முதலியவைகள் தயாரிக்கும் தொழில் ஸ்தாபனங்களில் இருந்தும், ராஜஸ்தான் முதலிய இடங்களில் சுரங்கங்களிலும் 'சோடியம் சல்பேட்' என்னும் உப்பு ஏராளமாகக் கிடைக்கிறது. இந்த உப்பை மின்சார ரஸாயன முறையில் காஸ்டிக் சோடாவாகவும், கந்தக அமிலமாகவும் மாற்றும் வழிகளுக்கு இங்கு



அவ்வளவு சிக்கனம்! ஒரு முறை தேய்த்தால்
கால்கேட் டெண்டல் கிரீம்
85% கிருமிகளை ஒழிக்கிறது சொத்தையும்
மற்றும் துர்நாற்றமும் ஏற்படுத்தும் கிருமிகள்
அவை
COLGATE
COLGATE
RIBBON DENTAL CREAM


புத்தம் புதியது-சுத்தமானது — ஏனெனில்
இந்த பார்லி
டின்னில்
அடைக்கப்பட்டது!
ROBINSON'S
PEARL
BARLEY
ராபின்ஸன்ஸ் பேர்ல பார்லி எப்பொழுதும் உங்கள் நம்பிக்கைக்கு கந்தது. அது புஷ்டி மிக்க, உயர்ந்த ரக தானியங்களிலிருந்துத் தயாரிக்கப்பட்டு அவைகளின் புதுமையும் சுத்தமும் சிறிதளவும் கெடா வண்ணம் சுகாதார முறைப்படி காற்றுப்புகாமல் டின்களில் அடைக்கப்படுகின்றன. நோயாளிகள், குழந்தைகள், பாலூட்டும் தாய்மார்கள் முதலியவர்களுக்கு இது
முழு பாதுகாப்புள்ள
ராபின்ஸன்ஸ் பேர்ல்
பார்லியையே
கேட்டு வாங்குங்கள்
முற்றிலும் சுத்தமானது

ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன. இந்தியாவில் சாதாரண உப்பிலிருந்து மின்சார முறையில் காஸ்டிக் சோடா தயாரிக்கும் போது உண்டாகும் குளோரின் வாயு தேவைக்கு மேல் உற்பத்தியாவதாலும், இந்தியாவில் உள்ள கந்தகத் தாதுப் பொருளில் இருந்து இன்னும் கந்தகத் திராவகம் எடுக்கவில்லை என்ற காரணத்தினாலும் மேலே சொன்ன மின்சார ரஸாயன ஆராய்ச்சி மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

''அடேயப்பா! என்ன ஆராய்ச்சிகள். தலையைச் சுற்றுகிறதே!''

''இது மட்டும்தானா? இன்னும் பாருங்கள்'' என்று இன்னும் பல ஆராய்ச்சிப் பகுதிகளுக்குள் அழைத்துச் சென்றார் ஆராய்ச்சி நிபுணர்.



1953-ம் ஆண்டு காரைக்குடி மின்சார-ரஸாயன ஆராய்ச்சிக் கூடத்தைப் பாரதத்தின் உதவி ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் திறந்து வைத்தார். திறப்பு விழா முடிந்த பிறகு டாக்டர் அழகப்பரிடம் வந்து அவர் செய்த அதிசயசாதனைகளை வியந்து பாராட்டினார்.

இன்றுவரை நாம் நிக்கல், தாமிரம், வெள்ளீயம், குரோமியம், வெள்ளி, தங்கம் முதலிய முலாம் பூசும் மருந்துகளை வெளிநாடுகளில் இருந்து வாங்கி உபயோகித்து வருகிறோம். இந்த மருந்துகளை இந்தியாவிலேயே தயாரிப்பதற்குக்காரைக்குடியில் ஆராய்ச்சிநடைபெறுகிறது. குறைந்த செலவில் சயனைட் கலப்பில்லாமல் தயார் செய்வதற்கு வேண்டிய முறைகளை ஆராய்ந்து வருகிறார்கள்.

இதோ இன்னும் சில அதிசயமான ரஸாயன ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன.

ரயில், மோட்டார் இன்ஜின்களில் உள்ள பிஸ்டன் வளையங்கள் அடிக்கடி தேய்ந்து போகின்றன. இதனால் நமது சர்க்காருக்கு எத்தனையோ லட்சம் ரூபாய்கள் செலவாகிறது. இந்தச் செலவைக் குறைத்து மேற்படி இன்ஜின் பிஸ்டன் வளையங்களை நீடித்து உழைப்பதற்கு அந்த வளையங்களில் பளபளப்பாகவும், நீண்டகாலம் நிலைத்து நிற்கும்படியும் குரோமியம் முலாம் பூசினால் நல்லது என்று கண்டு பிடித்திருக்கிறார்கள்.

இந்தியாவில் ஜாவர், ராஜஸ்தான் சுரங்கங்களில் கிடைக்கும் துத்தநாகத் தாதுப் பொருளிலிருந்து துத்தநாகம் எடுக்கும் முறையையும், காரீயத் தாதுவிலிருந்து காரீயம் எடுக்கும் முறையையும், திருவிதாங்கூர் கடற்கரை மணலில் கிடைக்கும் அணுசக்தி உற்பத்திக்குத் தேவையான பொருளைக் குறைந்த செலவில் தயாரிக்கும் முறைகளைப் பற்றியும் ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

இதைத் தவிர அநேக ரஸாயனப் பொருள்கள் தயாரிக்கும் தொழில் ஸ்தாபனங்களில் அவ்வப்பொழுது ஏற்படும் சந்தேகங்களையும் சில்லறைக் குறைகளையும் தவிர்ப்பதற்கும் யோசனை கூறி வருகிறார்கள்; அதற்கு வேண்டிய ஆராய்ச்சிகளையும் செய்து வருகிறார்கள்.

இந்தியாவில் கிடைக்கும் தாதுப் பொருள்களைக் கொண்டே பல ரஸாயனப் பொருள்களை இந்தியாவில் தயாரிக்க முடியும் என்பதைக் காரைக்குடியில் இருக்கும் ஆராய்ச்சிக் கூடம் நிரூபிப்பதற்குத் தொண்டாற்றி வருகிறது. இந்த ஆராய்ச்சியில் வெற்றி ஏற்பட்டவுடன் அதைப்பலதொழில் ஸ்தாபனங்களுக்கு எடுத்துக் கூறிக் குறைந்த செலவில் வெளிநாடுகளின் தயவில்லாமலேயே உற்பத்தியைப் பெருக்கி உதவி செய்வதற்காகத் 'தேசிய ஆராய்ச்சி அபிவிருத்திக் கமிஷன்' என்ற ஸ்தாபனத்தை நிறுவியிருக்கிறார்கள். இதன் காரியதரிசி டாக்டர் மஹாந்த். இவர் பல ஆராய்ச்சிகள் செய்து இத்துறையில் விசேஷ அனுபவம் பெற்றவர்.

இந்த விவரங்களைக் காரைக்குடி ஆராய்ச்சிக் கூடத்தில் தெரிந்து கொள்ள முடிந்தது. இதற்குத் துணைபுரிந்த டாக்டர் அழகப்பருக்கு நன்றி கூறுவதா வேண்டாமா என்ற பிரச்னையை நான் இன்னும் முடிவு செய்ய வில்லை.

டாக்டர் அழகப்பர் இந்த மின்சார ஆராய்ச்சிக்கூடமே ஏற்படுவதற்கு உதவி புரிந்திருக்கிறார். இந்தியாவில் உள்ள பதினொன்று ஆராய்ச்சிக்கூடங்களில் எந்த ஆராய்ச்சிக் கூடத்துக்கும், எந்தத் தொழில் ஸ்தாபனமும் எந்தத் தனி மனிதரும் இவ்வளவு பெரும் தொகை நன்கொடை கொடுத்ததில்லை. அப்படிப்பட்டவருக்கு நான் மட்டும் தனியே நன்றி கூறினால் போதுமா? தமிழ்நாடே நன்றி செலுத்த வேண்டியதுதான்.

காரைக்குடியில் இந்த நிலையத்தைச் சுற்றிப் பார்த்து வரும்போதெல்லாம் என் நினைவு அங்கு தொண்டாற்றும் ஆராய்ச்சியாளர்களைப் பற்றியே இருந்தது. உயிரற்ற, ரஸமற்ற வெறும் உலோகங்களைக் கொண்டு இந்த ஆராய்ச்சி நிபுணர்கள் செய்யும் சாதனைகளை நினைக்கும் போது, எனக்கு மயிர்க் கூச்செடுத்தது. பாரதத்தின், ஏன், உலகத்தின் நன்மைக்காகப் பாடுபட்டு வரும் அந்த ஆராய்ச்சி நிபுணர்களுக்கு ஒரு வணக்கம் செலுத்தி விட்டு அந்த ஆராய்ச்சி நிலையத்திலிருந்து கிளம்பினேன்.

* * *

இந்த மின்சார ரஸாயன ஆராய்ச்சி நிலையத்தை விட வேறு என்ன அதிசயம் காரைக்குடியில் இருந்து விடப் போகிறது என்றுதான் முதலில் நினைத்தேன். அது எவ்வளவு தவறான எண்ணம் என்பதை டாக்டர் அழகப்பரின் பொறி இயற் கல்லூரிக்குள் சென்றபோது தெரிந்து கொள்ள முடிந்தது.

டாக்டர் அழகப்பரின் பொறி இயற் கல்லூரிக்குள் சென்று அது பிற கல்லூரிகளுக்கு முன் மாதிரியாக நடைபெற்றுவரும் அற்புதத்தை அடுத்த இதழில் பார்ப்போம். (தொடரும்)



கிடையின் கனவு

காட்டின் நடுவில், எருது ஒன்று நிற்கிறது. கிழ எருது; துயரத்தில் அழுந்தி, உயிரும் உடலும் சோர்ந்து நிற்கிறது. காடு அழகிய காடுதான்; ஆனால் காட்டின் அழகு எருதின் கண்ணிலே படவில்லை. புதர்களில் முடங்கிக் கிடக்கிறது அது. ஆயிரம் மாடுகள் கொண்ட பெருமந்தைக்குத் தலைவனாய் இருந்த அந்த எருது, இப்போது மந்தையிலிருந்து விரட்டப் பெற்று, ஒண்டியாய், தளர்வும் தானுமாய்த் தள்ளாடுகிறது.


நெருப்பாய் எரிகின்ற வானத்தில், கொக்குகளும் வண்ணப் பகட்டுடைய கிளிகளும், மேலும் கீழுமாய், அங்கும் இங்கும் பறந்து செல்கின்றன. காட்டுப் பசுமைக்குள்ளே, பகல் வேளையின் மங்கல் ஒளியில், பூனைகள் தூங்கிவழிந்து கொண்டு, குரல் கொடுக்கின்றன. குரங்குகள் கூட்டம் கூட்டமாய், சளசளவென்று சண்டையிட்டுக் கொண்டு போகின்றன, வருகின்றன. பயங்கரமான தூர்க்குறிப் பறவைகள் மானோ, பன்றியோ, ஏதோ ஒன்றின் அழுகிய உடலைக் கொத்திக் கொண்டு உட்கார்ந்து இருக்கின்றன. மாமிசக் குப்பைகளின் மேலே, ஈக்களும், பிள்ளைப் பூச்சிகளும் பளிச்சிடுகின்றன. துருத்தியைப் போல் பருத்த சிலந்திப் பூச்சிகள், ஓங்கி வளர்ந்த நச்சு மரத்தின் நிழலில் கிடக்கின்றன.

உடம்பெல்லாம் புள்ளி புள்ளியாய் தெளியும் பாம்பு, மரம் ஒன்றைச் சுற்றிச் சுற்றிச் சுற்றி வருகிறது; பச்சைத் தழைக்கு, தன் உடம்பால், மஞ்சள் பூசுகிறது; மரத்தைச் சுற்றி ஓயாமல் சுழலுகிறது. உலகம் முழுவதையும், ஆம், இந்த உலகம் முழுவதையும், அழகிய காட்டு நடுவிலே நிற்கும் இந்தக் கிழ எருதையும், கண்காணிக்கின்ற காவற்காரனைப் போல. எருது அசையாமல் நின்று கொண்டிருக்கிறது. வீரத்தோடுதான் அது வீழ்ந்தது. அதுவே தலைமை வகித்து நடத்திச் சென்ற காளைகளில் ஒன்று, புதிதாகப் பருவம் எய்திய காளை ஒன்றுதான், இப்போது இந்த எருது அரசனை எதிர்த்துப் போரிட்டுத் தோல்விப் படுகுழியில் தள்ளி விட்டது: கீழே விழுந்த, தன் அரசனை மோந்து பார்த்தது; இரத்தம் வடிக்கின்ற அந்நிலையிலும், படியாமல் நிமிர்ந்த வீரத் தலையைத் தன் குளம்பால் ஒருமுறை மிதித்துக் குமைத்தது.

மந்தை மாடுகள் போய் விட்டன. இந்தக் கிழ எருதைக் காட்டின் நடுவிலே விட்டு விட்டுப் போய் விட்டன. ஒரு மாடாவது, விழுந்த இந்த எருதை நாவால் நக்கிக் கொடுக்க வேண்டுமே, இல்லை. பறவைகள் கொத்திக் கொத்தித் தின்பதற்கான மாமிசப் பிண்டமாய் இதை விட்டு விட்டுச் சென்றன.

அறிவு, தகுதி, அன்பு எல்லாவற்றையும் நெஞ்சில் இருந்து உதறி எறிந்து விட்டு, ஈரமெதுவும் இல்லாமல் எல்லா மாடுகளும் சென்று விட்டன. எருது கீழே தனித்துக் கிடந்தது.

குகையிலிருந்து புறப்பட்டு, குன்றுகள் அடர்ந்த காட்டு வழியில், கர்ஜனையால் தன் அழகுக்குக் கட்டியம் கூறிக் கொண்டு, சிங்கம் வெளியிலே வரும் அந்த வேளையில், பருந்துகள் தமது



பேராசிரியர்
அ. சீநிவாசராகவன்



சிறகைக் கோதி, காட்டுக்கு மேலே வட்டமிடத் தொடங்கும் அதே வேளையில், குற்றுயிராய் மயங்கிக் கிடந்த இந்த எருது அரசன் — இனி அதற்கு அரசு ஏது ?—தன் உணர்வு பெற்றுக் கண் விழித்தது.

மந்தை நெடுந் தொலைவில் இருப்பதை மோப்பத்தால் அறிந்தது. கீழே ஆறாகப் பெருகிய இரத்தத்தைப் பார்த்தது. வெப்பக் காற்றில் மிதந்த மாட்டு மந்தையின் மணத்தை—என்ன இனிமை, என்ன இனிமை !— அது நுகர்ந்தது. அதன் தலையிலிருந்து இரத்தம் வழிந்தது. வாயெல்லாம் இரத்தக் களரி. இப்போது, ஏரிக்கரைக் கோரைப் புல்லின் அடர்த்திக்குள்ளே நிற்கிறது. அதற்கு அரைத் தூக்கம். அதன் அறிவெல்லாம் ஒடுங்கி விட்டது. உள்ளத்திலே உறுத்துகின்றகசப்பு நிற்கிறது, சாவை எதிர் நோக்கி; தன் இதயம் உடைவதை எதிர்பார்த்து நிற்கிறது. இரத்தம் வடியும் அதன் கண்களில் மொய்க்கிறது ஈக்கூட்டம். இக் கூட்டத்தோடு பறவைகளும் சேருவதற்காகத் தானோ அந்த எருது நிற்கிறது? தலையைக் கீழே தொங்க விட்டுக் கொண்டு, நெருங்குகின்ற சாவின் கிறுகிறுப்பில், ஏதோ குருட்டுக் கனவு காண்கிறது. பச்சைப் புல் வெளிகள், பழுப்பு நிறக் காடுகள், பழைய போர்க் களங்கள், முன்னர் என்றோ எழுப்பிய உங்காரங்கள், உலைந்த காளைகள், செத்து மடிந்த சிங்கங்கள், மேலே ஓயாமல் சிறகடிக்கும் பருந்துகள் — இப்படி எத்தனையோ பொருள்கள், இடங்கள், செய்திகள், இவற்றைப்பற்றிய பழைமைக் கனவு.



கனவு விரிகின்றது. மிகப் பழைமையான காலத்தைத் தொடுகிறது. புல் வெளிப் பசுமை; அந்தப் பரப்பில் தாய்ப் பசுவோடு — மெலிந்த தன் தாயோடு—அலைந்த காட்சியும், வியப்போடு ஆயிரம் ஆயிரம் மருமங்களை எங்கும் கண்டு, தன் விழிகளை, ஒன்றும் அறியாத தன் பேதை விழிகளை, கொட்டிக் கொட்டி விழித்து மயங்கியதும், அந்த எருதின் கனவிலே நீண்ட காட்சியாகத் தோன்றின. கனவில், ஆயிரம் காளைகளும் பசுக்களும் கொண்ட பெரு மந்தையோடு சின்னஞ் சிறு கன்றாய் அந்தக் காலத்தில் இந்தக் கிழ எருது அலைந்தது ; புல் வெளியில் இருந்து புல் வெளிக்கு, குன்றில் ஏறி, பள்ளத்தில் இறங்கி, தட்டுத் தடுமாறித் தாயின் மடியைத் தொடர்ந்து சென்றது. ஒரு நாள், நடக்க முடியாமல் தடுமாறி, அங்கம் எல்லாம் தளர்ந்து மந்தையோடு போவதற்கு வலிமையின்றி, பின் தங்கியது. அப்போது அதன் தாய் திரும்பிப் பார்த்து ஓடி வந்தது. இதற்குள் செத்து மடியும் ஊனுக்காக, ஆகாயத்தில் எப்போதும் காத்திருக்கும் பழிகாரப் பருந்து ஒன்று மூக்கைத் தீட்டிக் கொண்டு நெருங்கியது. 'ஆ' என்று கத்தி, பருந்தை விரட்டியது தாய்ப் பசு.

நாட்கள் கழிந்தன. தாயின் மடி சுவறியது, அதன் காம்புகள் உலர்ந்தன. இதற்கு மேல் தாயிடம் என்ன சுவை ? பால் வடிகின்ற புற் பூண்டின் இனிமையை நோக்கித் திரும்பியதுகன்று. தாய்ப் பசு தான் ஈன்ற கன்றை விட்டுப் பிரிந்தது.

கன்று வளர்ந்தது. அதன் சிறு உடல் பூரித்தது அதன் சின்னஞ்சிறு கால்கள் விம்மி, உரம் பெற்றன. காட்டு வழி முன் போல் தொலையா நெடுவழியாகத் தோன்றவில்லை. சிறு கொம்புகள் தலையைப்பீறிக்கொண்டு முளைத்தன. மரங்களையும், குத்துக் கற்களையும் ஆமைகளையும் முட்டி முட்டிக் கன்று விளையாடியது. தலையோடு தலை மோதும் விளையாட்டில் தன்னை ஒத்து வளர்ந்த கன்றுகளோடு இறங்கியது. கொம்பினால் குத்திக் காயப் படுத்தவும், பெற்ற காயத்தைத் தாங்கவும் பழகியது.

இன்னொரு நாள். நேற்று நடந்தது போல் அந்தக் கிழ எருதுக்குத் தோன்றுகிறது. அன்று, அதன் கிரகம் உச்சம். இனம் தெரியாத கலக்கம் ஒன்று, அதன் மனத்திலே சுரந்து, அமைதியைக் கலைத்தது. கன்றுப் பருவத்துத் தசையும் நரம்

இந்திய செஞ்சிலுவைச் சங்கம் (சென்னை ராஜ்யக் கிளை)

நிதியும் அங்கத்தினர்களும் சேர்க்கும் இயக்கம்



ஆபத்துக்குள்ளாகும் ஒவ்வொருவருக்கும், தகுதியுள்ள ஒவ்வொருவருக்கும் எக்காலத்திலும் கைகொடுத்து உதவுகிறது


"உதவி அதிகம் தேவைப்படும் யுத்த காலத்தில் யார் யாருக்கு உதவி அவசியப்பட்டதோ அவ்வளவு பேருக்கும் உதவி அளித்தது. இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் சமாதான கால சேவையும் பொன்னெழுத்தில் பொறிக்கப்பட வேண்டியதாகும். இச்சங்கம் நம் மக்களிடமிருந்து போதிய அளவு பொருளுதவிபெறும் என்று நம்புகிறேன்."


தாராளமாக நன்கொடை அளியுங்கள் - அங்கத்தினராகச் சேருங்கள்

உங்கள் நன்கொடை மற்றும் சந்தாத் தொகையை 'இந்திய செஞ்சிலுவைச் சங்கம் 12, மாண்டித் ரோடு, எழும்பூர், சென்னை' என்ற விலாசத்துக்கு அனுப்பவும்


Space kindly donated by Messrs F. RACEK & CO. PRIVATE LIMITED, Bombay

---





பேர்ல் பிராண்ட்
ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்கள்



உத்தரவாதத்துடன் கூடிய பேர்ல் பிராண்ட் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்கள் மிக உயர்ந்த ரகத்தைச் சார்ந்தவை. சிறந்த வேலைப்பாடுடன் நேர்த்தியான அமைப்பும் கண்ணாடி போன்று பளபளப்பும் கொண்டவை. அதிக உறுதியும், அந்தமும் கொண்ட இப் பாத்திரங்கள் ஆயுட்காலம் வரை நீடித்து உழைக்கக் கூடியவை. விலையும் குறைவு.



உங்களது உள்ளூர் வியாபாரியிடம் கேளுங்கள் அல்லது எங்களுக்கு நேரிட எழுதுங்கள்.

எல்லாக் கடிதங்களையும் ஆங்கிலத்தில் எழுதவும்




WRITE FOR PARTICULARS

Pearl Metal Works

20 WADI BUNDER ROAD, MAZGAON, BOMBAY 10.

பேர்ல் மெட்டல் ஒர்க்ஸ், 20, வாடி பந்தர் ரோடு, மஸகான், பம்பாய் - 10



இந்தியாவில் பெரும் அளவில்
சீட்டுக் கட்டுகள்
தயாரிப்பவர்கள்

*

எல்லோரும் வாங்கும் சக்திக்கு ஏற்றவாறு பற்பல ரகங்களில் அநேகவித கவர்ச்சிகரமான அழகிய டிஸைன்களில் கிடைக்கும்

மாதிரி வேண்டுவோர் எழுதவும் ....

Popular Fine Litho Works, Suryoday Mills Compound, Tardeo, Bombay-7

பும் முறுக்கேறி இறுகின. உறுப்புக்கள் அழகாய்த் திரண்டன. போரிடும் காளைப் பருவ வளர்ச்சியை அந்த எருது அடைந்தது. அன்று, தன்னை எதிர்த்த காளையை வீழ்த்தியது. தான் விரும்பிய பசுவைத் தன் வெற்றியின் வெகுமதியாய்ப் பெற்றது. உடனே, வாலை உயர்த்தி மந்தைக்குள்ளேயே நன்றாக வளர்ந்த காளைகளைத் தாண்டி, அவற்றின் கண் எதிரே, வட்டமிட்டு வட்டமிட்டு நிமிர்ந்து நடந்தது. 'துணிவு இருந்தால் வந்து என்னை எதிர்த்துப் பாருங்கள்' என்று அறை கூவுவது போல், நெடுமூச்செறிந்தது. காளை, காளை ஒன்றை, மந்தை மாடுகள் அன்று கண்டன; எந்தக் காளைக்கும் அஞ்சாத காளை இது என்பதைஉணர்ந்தன. அன்று மந்தைக்குத் தலைவனாய் இருந்த காளை, இந்தப் புதிய காளையை உற்று நோக்கியது. தரை அதிர மிதித்து, காடு நடுங்கக் குரல் எழுப்பியது. மேலே ஆகாயத்தில், சாகும் உயிரின் தசைக்கு எப்போதும் காத்திருக்கும் பிணங் கொத்திப் பறவையைப் பார்த்துக் கத்தியது.

அதெல்லாம் பழங்காலம்; ஆனால், தனித்து ஒண்டியாய் விடப்பட்டு, சாவை நோக்கித் தள்ளாடும் இந்தக் கிழ எருதின் கனவிலே, நேற்று நடந்தது போல், இன்று நடப்பது போல், தோன்றிய செய்தி. தான் அரச பதவி அடைந்த அந்த நாளை, மந்தை முழுவதும்—ஆயிரம் பசுக்களும் காளைகளும் தன்னைத் தலைக் கொம்பாய் ஏற்ற அந்த நாளை, இன்றுபோல் எண்ணியது கிழ எருது. அழகாய் அதிர்ந்து நடந்த அந்த மந்தையிலே, எந்தக் காளையாவது அப்போது இந்த எருதை வழி மறைக்க முடியுமா? எந்தப் பசுவாவது அதன் இச்சையை மறுத்து 'இல்லை' என்று பேச முடியுமா? உலைத் தீயைப் போன்ற அதன் பார்வையில், பசுவோ காளையோ தவறு இழைக்கத் துணியுமா? பரந்த காட்டில், ஒரு தடவை இந்தக் காளையை எதிர்த்து, பிறகு மறுமுறை எதிர்க்கத் துணிந்த மாடு உண்டா? காட்டுப் பன்றியோ, கலைமானோ, ஒரு தடவை இதை எதிர்த்து இரண்டாம் முறை எதிர்க்க வந்ததுதான் உண்டா? இந்த எருதின் காலடிப் பயங்கரத்திலிருந்து ஒரு தடவை மீண்ட பாம்பு, மறுபடியும் அதை நெருங்கியதுண்டா? எஃகு நகம் படைத்த சிறுத்தை, தீயைப் போல் விழிக்கும் அதுகூட, இந்த எருதின் சினத்தை ஒரு தடவைக்குமேல் தாங்குவதற்கு முற்பட்டது உண்டா? இல்லை. ஆயிரம் உயிரைப் பறித்த வீர சிங்கந்தான் ஆகட்டுமே, மலையின் நடுவில் வாழ்கின்ற அந்தச் சிங்க அரசு கூட, இவ்வெருதின் மோதுதலை எதிர்த்து நிற்கத் துணிந்ததா?—இப்படி ஓடியது அந்தக் கிழ எருதின் எண்ணம். இந்தக் கனவிலேதான், அதன் கிழட்டுச் சிந்தையில் தான், பழைய காளையாக, வாலிபக் காளையாக, தன்னிகரில்லாப் பேராற்றலாக அது நின்றது.

ஆனால் இக் கனவு மறைகின்றது. நனவு நெருங்குகிறது. ஐயோ, நெருங்குகிறது. இரத்தம் கசியும் கிழ எருதின் கண்களிலே ஈக்கள் மொய்த்துப்பிடுங்கி, விழிகளைத் தோண்டி விட்டன.

நனவு வந்து விட்டது. இனி அதிலிருந்து தப்ப முடியாது. கற்பனையில் தோன்றிய மந்தை, ஒளி வீசும் பழைய நாட்கள், இவற்றிலிருந்து எருது திரும்புகிறது. எருதைச் சுற்றி, வானத்தின் நாற்றிசையிலிருந்தும் கூட்டம் கூட்டமாய் வருகின்றன, வந்து மொய்க்கின்றன. சாகும் உயிரின் நிணத்திற்காகத் தவங் கிடக்கும் கோரப் பறவைகள்—அவற்றை நோக்கி மெல்லத் திரும்புகிறது எருது, அந்தக் கிழ எருது.

இப்படியாக, இந்த நூற்றாண்டு ஆங்கிலக் கவிஞன் ரால்ப் ஹாஜ்ஸன் * என்பவன் கிழ எருது ஒன்றின் கடைசிக் கனவைத் தருகிறான். மாட்டின் வாழ்க்கைக்குள்ளே, மனித இதயத்தைக் கொண்டு போய்ப் பொருத்தி, அந்த உலகத்தைப் பார்க்கிறான். அவன் பாடலில், கொம்புக்கும் குளம்புக்கும் இடையிலே மனித உள்ளம் நின்று துடிக்கிறது. அழகு, பயங்கரம், பழைய நினைவு, இரக்கம்—இவையெல்லாம் மனிதனுக்கு உரியவை. இவற்றின் ஒளியில், சாகும் கிழ மாடு ஒன்றின் சொல்லற்ற உருவற்ற மிருக வேதனை, சொல்லும், உருவும், தெளிவும் பெறுகிறது.

'இனி நினைந்திரக்கம் ஆகின்று
'கழிந்துபோன என் 'கல்லா இளமை'யை
இன்று - கோலூன்றித்
தள்ளாடும் இந்த முதுமைப் பருவத்தில் —
எண்ணி

இரக்கப்படுகிறேன்' என்று சங்க காலத்துத் தமிழ்க் கவிஞன் பாடினான்.

இத்தகைய இரக்கந்தான் ஆங்கிலக் கவிஞன் ஹாஜ்ஸன் என்பவனுடைய கையில், எருதின் கடைசிக் கனவாக வடிவெடுத்தது; எருதின் காட்டு வாழ்க்கையைக் காட்சியாக அமைத்தது: காலத்தின் ஆட்சிக்கு உட்பட்டுச் சுழலும் மனித வாழ்வில், என்றும் உள்ள நனவு ஒன்றையும் தொட்டுக் காட்டியது.

---

* Ralph Hodgson: 'The Bull'

தேவியின் கடிதம்

வித்தியாசம் வேண்டாம்

வசுமதி ராமசாமி

அன்புக்குரிய சுஜாதா,

நேற்று எனக்கு ஒரு பெண்மணியிடமிருந்து கடிதம் வந்தது. அதில் அவள் கண்ணீருக்கிடையே எழுதியிருந்த விஷயம் மிகவும் துக்ககரமானது. அவளைப் பெற்றெடுத்த தாயார் அவளிடம் அன்பாயில்லையாம். அந்தப் பெண்ணின் தங்கையிடம் மட்டும் அளவு கடந்த அன்பு காட்டும் அம்மாள் தன் மூத்த பெண்ணிடம் மட்டும் அலட்சியமாயிருப்பானேன்! காரணம், மூத்த பெண் கறுப்பு; இளையவள் சிவப்பு. பாவம், மூத்தவளுக்கு அவள் நிறம் காரணமாக மிகவும் ஏழைக் கணவனுக்கு வாழ்க்கைப்பட நேர்ந்ததாம். இதையெல்லாம் விவரமாக எழுதியிருக்கிறாள். அவளுக்குப் பதில் எழுதும் விஷயத்தையே உனக்கும் சேர்த்து எழுதுகிறேன்.

தாய்க்குத் தன் மக்களிடமே பாரபட்சம் இருக்கிறது என்றால் அது இயற்கைக்கு விரோதமானதுதான். ஒரு அன்னைக்கு ஒரு குழந்தை பிறந்தால் அந்தக் குழந்தையிடம் நிறைய அன்பு பாராட்ட முடியும்; நான்கு குழந்தைகள் பிறந்தால் அந்த அன்பு பங்கீடு ஆகிவிடும் என்பதில்லை. செலவு செய்வதிலும் வளர்ப்பதிலும் பாகமாகி விடலாம். அன்பு குறையாது. எடுத்தால் குறைந்து விடுகிற பொருள் அல்ல அன்பு. ஒரு அன்னையின் இதயம் அக்ஷய பாத்திரம் போன்றது.

எனவே, குழந்தைகளுக்கிடையே வேற்றுமை பாராட்டி, இளம் மனத்தைப் புண்ணாகச் செய்வது மிகத் தவறு. அந்தச் சகோதரி தன் தாயின் அன்புக் குறைவால் மனம் வாடாமல் பெற்றோர்களிடம் அன்பாக நடந்தால் காலக்கிரமத்தில் தாயின் மனம் மாறுதல் அடைந்து நிலைமை சீர்ப்பட்டு விடலாம்.



சில தாய்மார்களுக்குப் பிள்ளையை விடப் பெண் குழந்தைகளிடம் அன்பு அதிகம். பெண் புருஷன் வீட்டுக்குப் போய் விடுகிறபடியால் அவளிடம் தனி அன்பு: 'பெண்ணைப் போற்றி வளர்க்க வேண்டும்' என்று ஒரு பழமொழிகூட உண்டு.

தீபாவளி சமயத்தில் ஜவுளிக்கடையில் ஒரு அம்மாள் துணிகள் வாங்கிக் கொண்டிருந்தாள். ஒரு பெண் 'இந்தக் கறுப்புப் புடவையை நான் எடுத்துக் கொள்ளட்டுமா?' என்று கண்களை அகல விரித்துத் தொட்டுப் பார்த்தாள். அந்த அம்மாள், ''உன் கறுப்பு நிறத்துக்கு இதை உடுத்திக் கொண்டால் பார்க்கச் சகிக்காது. பத்மா இதை எடுத்துக் கொள்ளட்டும்'' என்றாள். இன்னொரு பெண் லக்ஷணமாக இருந்தாள். முதலில் சொன்ன பெண் நீர் நிறைந்த கண்களுடன் வண்டியில் போய் உட்கார்ந்து கொண்டாள். இதைப் பார்க்கும்போது இது என்ன அவிவேகம் என்று நினைத்தேன்.

கல்யாணம் செய்து கொடுத்தபிறகு ஒரு பெண் விதிவசத்தால் பணக்காரியாகவும், இன்னொரு பெண் ஏழையாகவும் ஆகி விடுகிறார்கள். பெற்றவள், தன் பெண்ணானாலும் அவள் ஏழையென்றால் அவளை மதிப்பதில்லை. அதனால் மனம் நொந்து போகும் பெண்கள் எவ்வளவோ பேர்கள் இருக்கிறார்கள்.

சிவப்பு, கறுப்பு, அழகு, அழகில்லை என்று சின்னக் குழந்தைகளுக்கு எதிரே பேசுவது மிகத் தவறு. அழகான பெண்ணுக்கு அகம்பாவம் வந்து விடுகிறது. உடன்பிறந்தவளையே அவமதிக்கிறது. ஒரு தாய்க்குத் தன் மக்கள் ஒற்றுமையின்றி யாதவப் படைகள் மாதிரி இருந்தால் ஏற்படும் மன வருத்தம் தேற்ற முடியாததாகும்.

உடம்பு பலஹீனமோ, அழகுக் குறைவோ முதலிய குறைபாடுகள் நம் குழந்தைகளில் ஒன்றுக்கு இருந்தால் அதற்குப் பிரத்தியேகச் சலுகை காட்டி மற்றக் குழந்தைகளையும் அதனிடம் அன்பாக இருக்கும்படி செய்வது தான் நமது கடமை. அதைவிட்டு அந்தக் குழந்தையின் ஊனத்தை அடிக்கடி எடுத்துச் சொல்லி மற்றக் குழந்தைகளுக்கு எதிரில் புண்படுத்துவது மிக மிகத் தவறு. அதனால் அந்தக் குழந்தை தாழ்வு மனப்பான்மைக்கு அடிமையாகி, வயது வந்த பிறகுங்கூட எந்தக் காரியத்துக்கும் தகுதியற்றதாகி விடும்.

மிகச் சிறிய வயதில் மனம் எதையும் எளிதாக நம்பும். அந்தக் காலத்தை அறிஞர்கள் மனப் பதிவு செய்யும் வயதென்றும், அப்பொழுது மிகக் கவனமாக இருக்க வேண்டும் என்றும் வற்புறுத்துகிறார்கள். நம் குழந்தைகள்தானே என்று அசிரத்தையாக இருக்கக் கூடாதல்லவா?

ஒவ்வொரு குழந்தைக்கும் பிறவியிலேயே சில குணங்கள் இருக்கின்றன. அவற்றில் நல்ல அம்சமும் கெட்ட அம்சமும் கலந்திருக்கும். அதை உணர்ந்து தகுந்தபடி வளர்க்கத்தான் நம்முடைய முயற்சி தேவை.

மனிதனை மனிதன், நிறத்தை அடிப்படையாகக் கொண்டு வேற்றுமை பாராட்டுவதை எல்லா நாடுகளும் எதிர்த்து வருகின்றன. அப்படியிருக்க, தாயாரே அந்தக் கொடுமையைத் தன் மக்களிடமே காட்டினால்....ஒரு தாய்க்கு நிற வேற்றுமை இருப்பது மிகக் கொடுமையானது இல்லையா?

இப்படிக்கு,
பூமாதேவி



எல்லோருக்கும் தெரியும் —
ப்ரூக் பாண்ட் தேயிலை காற்றுப்புகாமல் பாக் செய்யப்படுவதால் அதுகலப்பற்று, களங்கமற்று சுத்தமாகக் கிடைக்கிறது
ஒவ்வொரு ப்ரூக் பாண்ட் தேயிலை பாக்கெட்டிலிருந்தும் உங்களுக்கு அதிகப்படியான, ருசியான தேநீர் கிடைக்கிறது
மற்றெந்த தேயிலையை விட ப்ரூக் பாண்ட் தேயிலையே அதிகமாக விற்பனையாகிறது
ஆகையால்தான் மற்றெந்தத் தேயிலையையும் விட அதிகப்படியான ஜனங்கள்
ப்ரூக் பாண்ட் தேயிலையையே
அருந்துகிறார்கள் !



சகவாச தோஷம்

ராஜாஜி

"அன்று பாற் கடலில் கடைந்து எடுத்த அமிருதத்துக்குச் சமானம் நான்" என்று, அடுப்பின்மேல் சட்டியில் காய்ந்து கொண்டிருந்த பால் சொல்லிற்று.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த பார்வதி பரமேசுவரன் பேசிக் கொண்டார்கள்.

"கண்ணே! இந்தப் பாலுக்கு எவ்வளவு கர்வம் பார்த்தாயா?" என்றான் மகாதேவன்.

"பாலைப் பற்றிக் குற்றம் சொன்னால் நம்முடைய நந்தி கோபித்துக் கொள்வான். மெள்ளச் சொல்லுவீர்" என்றாள் தேவி.

பால் சூடேறிப் பொங்கிற்று. மிகச் சந்தோஷமாகப் பொங்கிற்று. நப்பின்னை சட்டியை எடுத்து ஒரு பக்கமாக வைத்தாள்.

* * *

"என்ன சொல்லுகிறாய்? நீயும் நானும் சேர்ந்து இந்தப் பாலை ஏமாற்றி விளையாடலாமா?" என்று கண்ணன் கேட்டான்.

"ஓ! அப்படியே!" என்றது மோர்.

"நீ பாலை மோராக வரவேண்டாம். ஒரு துளி போதும்" என்றான் கண்ணன்.

* * *

ஒரே ஒரு துளி மோர் நல்ல புடவை உடுத்திக் கொண்டு சிறு இடையர் குலப் பெண்ணாகப் புறப்பட்டது.

முன்னால் வாமனன் மகாபலியினிடம் சென்று மோசம் செய்ததுபோல் பாலினுடைய கர்வத்தை மோசம் செய்து அடக்குவதற்காக மோர்த் துளி சென்றது.

"பாலே, சகோதரியே! நீயும் நானும் ஒரு ஜாதியல்லவா? நாம் கூடி வாழ்வோம்!" என்றது மோர்.

மோர் வெளுப்பாக, லட்சணமாக இருந்ததைப் பால் பார்த்தது! "சரி!" என்று ஒப்புக் கொண்டு மோர்த்

துளியை வரவேற்று ஆலிங்கனம் செய்து கொண்டது.

"ரொம்ப வெப்பமாக இருக்கிருய்!" என்றது மோர்த்துளி பாலுக்கு.

"அதற்கென்ன! கொஞ்ச நேரம் பொறுத்திரு. நான் தணிந்து போவேன்! இப்போதுதான் அடுப்பிலிருந்து இறங்கினேன்" என்று பால் சீக்கிரமாகவே தன் சூட்டைக் குறைத்துக்கொண்டது

* * *

பாவம், மறுநாள் மோரைத் தீண்டின பாலின் கதியை என்னவென்று சொல்வது? ஒரே தயிர்க் கட்டியாய் விட்டது! வாய் திறந்து பேசக்கூட முடியவில்லை.



"ஐயோ, பாவம்!" என்றாள் பரமேசுவரி.

"பாலின் கர்வம் அடங்கியது. இப்படித்தான் கெட்ட சகவாசத்தின் விளைவுகள். ஒரு துளி மோர் போதும், சட்டி பாலையும் கெடுத்துவிட" என்றான் மகாதேவன்.

"பாலை ஏன் மோர் கெடுக்க வேண்டும்? பால்தான் மோரை நல்ல வழியில் கொண்டு போய்விடக் கூடாதோ? சட்டி நிறையஇருந்தமுடப்பால், ஒருதுளிமோரை ஜெயிக்க விட்டதே!" என்றாள் தேவி.

"அது அந்தக் கண்ணனுடைய வேலை. அவனுடைய வேடிக்கைக்கு ஒரு வரம்பே இல்லை!" என்றான் பரமேசுவரன்.

"கண்ணன் வேறு, நீர் வேறு?" என்றாள் பார்வதி, தன்னுடைய அண்ணன் கண்ணனுக்குப் பரிந்து.

"நானும் கண்ணனும் ஒன்று வேறு என்ற அந்த ரகசியத்தைப் பற்றி நந்தியைப் பிறகு கேள், சொல்லுவான்" என்று வேறு பேச்சுக்கு மெள்ள இழுத்துக் கொண்டு போனான் பரமேசுவரன்.

"இந்தப் பாலுக்கு ஏதேனும் விமோசனம் உண்டா?" என்றாள் பார்வதி.

"ஒன்றும் கெட்டுப் போகவில்லை. பாலைப்போலே தயிரும் அமிருதமே! கர்வம் தான் அடங்கிற்று" என்றான் மகாதேவன்.

* * *

"விளையாட்டுக்குக் கூடக் கெட்டவர்களுடன் சேரக்கூடாது!" என்றான் கண்ணன் காமதேனுவினிடம்.

"எல்லாம் பார்த்தேன். பாலை ஜாக்கிரதையாகக் காப்பாற்ற வேண்டும்" என்றாள் காமதேனு.



கனவில் வந்த



[யுக யுகமாக, முன் தலைமுறைகள் தமது வருங்காலச் சந்ததிகளுக்கு விட்டுச் செல்லும் செல்வம் என்ன, என்ன? அவரது அனுபவங்களோ — சொல்லும் செயலும் எண்ணங்களுமே — அன்றோ?]

* o *

துள்ளி ஓடும் அருவிசூழ்ந்த மலைச்சரிவிலே,
சுகந்தமுள்ள பூமலரும் மாலைவேளையில்,
கள்ளமற்ற சிறுவர்பலர் ஒன்றுகூடியே
களித்துநிற்கும் காட்சியினைக் கண்டு மகிழ்ந்தேன்

சீனப்பையன், ஜப்பான்பெண்டிர் யூகோஸ்லேவியாச்
சிறுமியோடே அமெரிக்கனும் பிரெஞ்சுப்பையனும்
ஈனம்என்றே ஒன்றும்இன்றி நீக்ரோவரும்
இந்தியரும் எஸ்கிமோவும் ஒன்றாய்வந்தனர்

வானவில்லில் ஏறிஇங்கே வந்துசேர்ந்தாரோ?
வாயுமீது நீந்தியிங்கே வந்துசேர்ந்தாரோ?
கானகத்துச் சோலையெலாம் எங்கெங்கிருந்தோ
கண்ணிமைக்கும் முன்னர்நூறு நூறாய்வந்தன

அரிய இந்தக் காட்சிகாண எழுந்ததேநிலா
அதன்ஒளியில் சூழ்நிலைஓர் புதுமைபெற்றதே
உரிமையோடு சிறுவர்எலாம் அச்சம் இன்றியே
ஓடிவிளையாடினர்அம் மலைச்சரிவிலே

ஆடிப்பாடிக் களித்தபின்னர் களைத்துநின்றனர்
ஆனைமீதோர் சிறுவன்வந்தான் குழலையூதியே
வாடிநின்றோர் சிறுவர்எலாம் ஆனையைச் சூழ்ந்தே.
குழலின் குரலால் உள்ளம்உடலில் சோர்வுநீங்கவே



குழந்தைகள்



குழலின்இனிமை கூறவெறும் சொல்லால் ஆகுமோ?
குற்றமற்ற கீதம்அது: குழந்தைகள் பேசும்
மழலைபோல மனதில்இன்பம் ஊட்டிடும்கீதம்
மனதைஎன்றும் விட்டகலா மந்திரகீதம்.

ஆனைமீது நின்றசிறுவன் குழலை ஊதிட
ஆடிப்பாடிக் களித்துநின்றார் சிறுவர் சிறுமியர்.
தேனைஉண்ணும் வண்டெனவே யானையைச் சுற்றிச்
சிரித்தார்அந்தச் சிரிப்பைச்சோலை எதிரொலித்ததே.

புத்தன்ஏசு காந்திசொன்ன சொல்லின்சக்தியும்
புகழ்மிகுந்த முன்னோர்செய்த செய்கைச் சக்தியும்
எத்தனையோ நல்லோர் எண்ணும் எண்ணச்சக்தியும்
இனியகீதம் சிறுவருள்ளே புகுத்திவிட்டதே.

கூடிநின்ற சிறுவர் முகமும் காந்திபெற்றதே
கூத்தும் களியும் விடியுமட்டும் நடத்தியபின்னர்
ஓடிவிட்டார் எங்கேயோ நான்இன்னும் அறிந்திலேன்
உள்ளம்ஊக்கும் கீதம்மட்டும் இன்றும் கேட்கிறேன்.





பாலர் தொடர் கதை

ஊமை ராஜா

துரோணன்

13. இந்திர பதவி!

ராணி மல்லிகாவின் அந்தப்புரத்துக்குள் அன்று அரசர் திடீரென்று நான்கு பேர்களை இழுத்துக்கொண்டு நுழைந்தார் அல்லவா? அப்பொழுது அவளது மனம் எண்ணாததெல்லாம் எண்ணிற்று. ஏற்படாத பயங்களெல்லாம் ஏற்பட்டன. இருந்தாலும் பரபரப்புடன் எழுந்து அவரை வரவேற்றாள். உடனே அவளுக்குச் சிறிது நேரத்துக்கு முன் விக்கிராந்தன் மட்டும் தனியே வந்து கேட்டதெல்லாம் அவளுடைய நினைவில் எழுந்தது.

விக்கிராந்தர் அந்தப்புரத்துக்குள் நுழைந்ததும் அவர் சுற்றுமுற்றும் பார்த்த பார்வையினால் ராணியின் உள்ளம் நடுங்கிற்று. அவள் அதை வெளிக்குக் காண்பிக்காமல், "குழந்தை விஜயனை இன்னுமா கண்டு பிடிக்க முடியவில்லை?" என்றாள்.

அரசர் ஒருதரம் பெருமூச்செறிந்து, "எப்படிக் கண்டு பிடிக்க முடியும்?" என்றார்.

ராணி பரபரப்புடன், "ஏன்? ஏன் அப்படிக் கூறுகிறீர்கள்? நான்கு திக்குகளிலும், எல்லா இடங்களிலும் ஆட்கள் தேடி விட்டார்களா?" என்று கேட்டாள்.

"எல்லா இடங்களையும் தேடியாகி விட்டது. இன்னும் ஒரு இடம்தான் பாக்கி இருக்கிறது" என்றார்.

"இன்னும் எந்த இடத்தில் அவனைத் தேட வேண்டும்?" என்று கேட்டாள்.

"சொர்க்கலோகம் ஒன்றுதான் பாக்கி! அந்த இடத்துக்குப் போய்த் தேடும் வழியை, உன்னைக் கேட்டுத் தெரிந்து போகலாமென்றுதான் வந்தேன்!" இவ்வாறு கூறியபடியே, விக்கிராந்தன் தம் பற்களைக் கடித்துக் கொண்டார்.

"மகாராஜா, தாங்கள் என்ன கூறுகிறீர்கள்? எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே?"

"ஒன்றும் விளங்கவில்லையா? விஜயனை எந்த உலகத்துக்குப் போகச் செய்திருக்கிறாயோ, அந்த உலகம் உனக்குத் தெரியாதா?" என்றார் கடுமையான குரலில்.

"ஐயோ! தாங்கள் ஏன் இப்படியெல்லாம் கூறுகிறீர்கள்?"

"ஆமாம், நான் ஆதாரத்துடன், ஆய்ந்தோய்ந்துதான் கூறுகிறேன்." அரசர் இவ்வாறு கூறி விட்டு, தம் உடைகளுக்குள் மறைத்திருந்த ஏதோ ஒரு பொருளை வெளியே எடுத்தார். பின்னர், சாவதானமாக அவளை நோக்கி, "ராணி! இந்தப் பண மூட்டையைப் பற்றி உனக்கு ஏதாவது தெரியுமா?" என்று கேட்டார்.

ராணி திடுக்கிட்டபடியே வியப்புடன் அதைப் பார்த்தாள். "ஐயோ! இது ஏது?" என்று கேட்டாள்.

"இது ஏதா? பேஷ்! நன்றாக நடிக்கிறாய்! இது ஏது என்பதெல்லாம் இதற்குள்ளாகவே உனக்கு மறந்து விட்டதல்லவா? இதை எப்பொழுது, எவரிடம் கொடுத்தாயோ, அதை யெல்லாம் அவர்களைக் கொண்டே கூறச் சொல்லுகிறேன் இரு!" என்று கூறிவிட்டு அரசர் பரபரப்புடன் கதவின் அருகில் சென்று கண்ணைக் கட்டி யிருந்த நான்கு பேர்களை அழைத்து வந்தார்.



விக்கிராந்த மன்னர் ராணியின் புறமாகத் திரும்பி, ''என்ன! அப்படியே திகைத்து நின்று விட்டாய்? ராணி! இவர்கள் நால்வரையும் உனக்குத், தெரியுமா?'' என்று கேட்டார்.

ராணிக்கு, உடலெல்லாம் வியர்த்தது. அரசர், ''ஏய் சங்கிலி! நீங்கள் நால்வரும் இப்போது எங்கே வந்திருக்கிறீர்களென்று தெரியுமா?'' என்றார்.

''மகாராஜா! இது அந்தப்புரம் போல் தோன்றுகிறது!'' என்று அவர்கள் நால்வரும் ஒரே குரலாகக் கூறினார்கள்.

''ஏய்! உங்கள் மகாராணிக்கு ஞாபக மறதி அதிகமாகவே ஆகிவிட்டது. ஆகையினால், ஆதி முதல் நீங்கள் என்ன என்ன செய்தீர்களோ, அவ்வளவையும் இப்பொழுது கூறி மகாராணிக்கு ஞாபகமூட்ட வேண்டும்'' என்று அரசர் கடுமையான குரலில் உத்தரவிட்டார்.

அந்நால்வரில், முதன்மையாக நின்ற சங்கிலி, நடந்தவற்றையெல்லாம் கூறத் தொடங்கினான். ஒரு நாளிரவு ராஜகுமாரன் படுத்திருந்த மஞ்சத்தைத் தூக்கிக் கொண்டு ஓடினதையும், அதை நடுக்



காட்டிலேயே போட்டு விட்டு, புலிக்காகப் பயந்து ஓடி வந்ததையும் கூறினான். பின்னர், அது நடந்த நான்கு தினங்களுக்குப் பின், மகாராணி கொடுத்த சன்மானத் தொகையைப் பங்கு போட்டுக் கொள்ளுவதற்காக அந்நால்வரும் மாந்தோப்புக்குச் சென்றதையும், அங்கே மகேந்திர புரத்திலிருந்து புதியதாக வேலைக்கு வந்த சேவகன் தங்களுடைய கண்களில் மிளகாய்ப் பொடியைப் போட்டு விட்டு

மூட்டையை அபகரித்துச் சென்றதையும் விவரமாகக் கூறி நிறுத்தினான்.

விக்கிராந்தன் ஏளனத்துடன் நகைத்தவாறு, "என்ன மகாராணி! இப்பொழுதாவது உங்களுக்கு எல்லாம் ஞாபகம் வருகிறதா?" என்றார். பின்னர், "ஏய் சங்கிலி! அப்புறம் அந்த மகேந்திரபுரத்துத் திருட்டுச் சேவகனை நீங்கள் சந்திக்கவேயில்லையா?" என்று கேட்டார்.

அந் நால்வரும் "இல்லை, மகாராஜா! அவன்தான், எங்கள் கண்களை நாசம் செய்து விட்டானே!" என்றனர்.

"மல்லிகாதேவியாரே! அந்த மகேந்திர புரத்துச் சேவகன் வேறு யாருமில்லை; அடியேன் விக்கிராந்தனேதான்!" என்றார் அரசர்.

கண்களைக் கட்டப் பெற்றிருந்த அந்த நால்வரும், ராணி மல்லிகாவும் ஏககாலத்தில் "ஆ!" என்று திடுக்கிட்டனர்.

* * *

அந்த ஊமை ராஜகுமாரன் 'திருதிரு' வென்று விழித்தபடியே நின்று கொண்டிருந்த காட்சி மேகலாவுக்கு மிகுந்த வேடிக்கையாகவே இருந்தது. அவள் அவனை அழைத்துக் கொண்டு கொஞ்ச தூரம் சென்றாள். அங்கே ஒரு பெரும் ஆலமரம் இருந்தது. அவைகளில் நான்கு குதிரைகள் கட்டப்பட்டிருந்தன. மரத்தின் ஓரத்தில் இரண்டு சட்டிகளும், ஒரு மரப் பெட்டியும் இருந்தன.


அப் பெண் அவனை உட்காரும்படி கூறிவிட்டு, அந்த மரப்பெட்டியைத் திறந்து அவற்றிலிருந்த சில தின்பண்டங்களை ஒரு தட்டில் வைத்து அவனிடம் கொடுத்தாள். ராஜகுமாரன் நன்றி நிறைந்த பார்வையுடன் சாப்பிடத் தொடங்கினான்.

பின்னர், 'ஊ ஊ" என்று கூறிவிட்டு ஜாடையின் மூலம் எதையோ தெரிவித்தான். ராஜகுமாரி அவனது பாஷையைப் புரிந்து கொள்ள முடியாமல், வியப்புடன் பார்த்தபடியே நின்றாள். அவன் சட்டெனக் கீழே உட்கார்ந்து கீழேயிருந்த குச்சியினால் தரையில் ஏதோ எழுதினான். "ராணி! இவ் வாழ்க்கையே எனக்கு இந்திர பதவியாக இருக்கிறது. கடவுள் எனக்கு இவ்வதிர்ஷ்டத்தை நீடித்து அளிப்பாரா?" என்று எழுதி யிருந்தான்.

அதைக் கண்ணுற்ற ராஜகுமாரியின் முகம் சிவந்து விட்டது! அவளும் தரையில் எதையோ எழுதிவிட்டு எழுந்திருந்தாள்.


ஏற்கனவே அவன் எழுதியிருந்த வாக்கியங்களில் முழுமையும் அப்படியே தானிருந்தன. 'எனக்கு' என்ற ஒரே ஒருவார்த்தை மட்டிலும் இரண்டு இடங்களில் மாற்றப் பட்டிருந்தன! "இவ்வாழ்க்கையே நமக்குப் பெரும் இந்திர பதவியாக இருக்கிறது. கடவுள் நமக்கு இவ்வதிர்ஷ்டத்தை நீடித்து அளிப்பாரா?" என மாற்றி யிருந்தாள்!


அவன் தலையை நிமிர்த்திப் பார்ப்பதற்கு முன்னமேயே அவள் ஓடத் தொடங்கி விட்டாள்! அவனும் அவளைத் துரத்தியவாறு தொடர்ந்தான். ஆனால், அவள் திடீரென்று நின்று, அவனது பார்வையை வேறொரு புறத்துக்குத் திருப்பினாள். அவள் காட்டிய திசையில் ஒரு அழகான மான் குட்டி புல்லை மேய்ந்து கொண்டிருந்தது. அவள் ஜாடையின் மூலம் அதைப் பிடிக்க வேண்டுமென்று கூறினாள். (தொடரும்)



பெரியவர்:— அங்கே மழைத் தண்ணியிலே என்னடா கலாட்டா பண்ணுகிறீர்கள்?
சிறுவர்கள்:— நாங்க குயேஸ் விளையாட்டு விளையாடுகிறோம்!


ஸாரிடான் இந்த
வலிகளை எல்லாம் போக்குகிறது
தலைவலி
"கஷ்ட நாட்கள்"
முதுகுவலி
பல்வலி
ஸாரிடான் உபயோகித்து பலனை அனுபவத்தில் காணுங்கள்!


முத்தை மிஞ்சும் பல்வரிசை
பெற்றிட வாங்கவும்
டெக் பிரஷை!
அழகிய பிளாஸ்டிக் பிடி
சுத்தமான நைலான் முடிகள்
ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன்



உண்மை நட்பு

எம். கமலா

கலாவும், மாலாவும் மகாராணிக் கல்லூரியில் இண்டர் இரண்டாம் வருஷம் படித்துக் கொண்டிருந்தார்கள். கலாவின் தகப்பனார் அரசாங்க வேலையில் இருந்தார். ஊர் மாறி மாறிச் செல்வதால் குழந்தையின் படிப்பு கெடாமல் இருப்பதற்காக, கலாவுக்கு ஏழு வயதாகும் பொழுதே அவளைத் தம் தாயாரிடம் பங்களூருக்கு அனுப்பி விட்டார். அதனால் கலா பாட்டியிடமே அவளுடைய குழந்தைப் பருவத்திலிருந்து வளர்ந்து வந்தாள். கோடை விடுமுறைக்கு மட்டும் பெற்றோர் இருக்கும் ஊருக்குச் சென்று வந்தாள்.

கலா பெங்களூருக்கு வந்த நினத்தன்று மாலையே பாண்டி விளையாடிக்கொண்டிருந்த அடுத்த வீட்டுச் சிறுமி மாலாவைக் கண்டாள். அன்றிலிருந்தே அவர்கள் நட்பு ஆரம்பமாயிற்று. இருவரும் ஒரே பள்ளியில், ஒரே வகுப்பில்தான் படித்தார்கள். ஒரே மாதிரி உடையணிந்து பள்ளிக்கூட பஸ்ஸில் சேர்ந்தே போனார்கள். ஒரு நாள் கலா கவுன் போட்டுக் கொண்டு பள்ளிக்கூடம் போனால், மாலாவும் கவுன் போட்டுக் கொண்டு பள்ளிக்கூடம் போவாள்; கலா பாவாடை கட்டிக் கொண்டால் மாலாவும் பாவாடை கட்டிக் கொள்ளுவாள். மாலா இரட்டைப் பின்னல் பின்னிக் கொண்டால், கலா தன் பாட்டியிடம் அடம் பிடித்து இரட்டைப் பின்னலே பின்னிக் கொள்வாள். பெற்றோரை விட்டுப் பிரிந்திருந்த கலாவுக்கு முதலில் வருத்தமாக இருந்தாலும், மாலாவின் நட்பு கிடைத்த பிறகு, பெங்களூரை விட்டுப் போகவே அவளுக்கு மனமில்லை.

வருஷங்கள் எட்டு ஓடி மறைந்தன. அப்பொழுது அவர்கள் எஸ். எஸ். எல். சி. வகுப்பில் படித்துக் கொண்டிருந்தார்கள். அவ்வருடப்பு இறுதிப் பரீட்சைக்கு இருவரும் சேர்ந்தே படித்தார்கள். பரீட்சை ரிஸல்ட் வரும் தினம். கலா அவள் பெற்றோருடன் சென்னையில் இருந்தாள். இருவரின் பரீட்சை முடிவையும் அறிந்து உடனே மாலாவுக்குக் கலா தந்தியடித்தாள். அவளுக்கு இருவரும் சேர்ந்து பாஸ் செய்ததில் மட்டற்ற மகிழ்ச்சி. விடுமுறைக்குப் பிறகு காலேஜில் சேருவதற்கு ஏற்பாடுகள் செய்து கொண்டு பெங்களூருக்குத் திரும்பினாள். திரும்பினவள் மாலாவைப் பற்றி அறிந்து மிக்க ஏமாற்றம் அடைந்தாள். மாலா அத்துடன் படிப்பை நிறுத்தப் போகிறாள் என்பதை யறிந்தாள். கலா நேரே மாலாவின் தந்தையிடம் சென்று வாதித்து மாலாவை மேலே படிக்க வைத்தே ஆக வேண்டும் என்று அமர்க்களம் செய்து வெற்றியடைந்தாள்.

மாலை ஆறு மணிக்குப் படிக்க ஆயத்தமாகப் புத்தகங்களுடன் மாலாவின் வருகைக்காகக் காத்துக் கொண்டு கலா அவளுடைய அறையில் உட்கார்ந்திருந்தாள். வெகு நேரமாகியும் மாலா வராமல் போகவே, மனத்துக்குள் திட்டிக் கொண்டே அவள் வீட்டை நோக்கி விரைந்தாள். வாசற்படியை ஒரே எட்டாகத் தாண்டிக் கொண்டே, "ஏய் மாலா! நீ என்ன, பரீட்சை எழுதப்போவதே இல்லையா? படிப்பதற்கு அங்கு வருவதாகச் சொல்லி விட்டு இங்கே என்ன செய்கிறாய்?" என்று அதட்டிக் கொண்டே வந்தவள் கூடத்தை அடைந்தவுடன் ஸ்தம்பித்து நின்று விட்டாள். அங்குள்ள ஒரு சோபாவில் அமர்ந்து கொண்டு சுந்தர்—ஆம், அதுதான் அங்கு அமர்ந்திருந்த வாலிபனின் பெயர்—டிபன் சாப்பிட்டுக் கொண்டு மாலதியுடன் அளவளாவிக் கொண்டிருந்தான். கலாவைக் கண்டவுடன்தான் மாலாவுக்குப் பரீட்சை நினைவு எழுந்தது. அவசரம் அவசரமாய்த் தன் தோழியிடம், "கலா, இவர் என் அத்தான்! பூனாவிலிருந்து ஏதோ வேலை விஷயமாக இவ்வூருக்கு வந்திருக்கிறார்" என்று அறிமுகம் செய்து வைத்தாள். பிறகு சுந்தரிடம் கலாவைச் சுட்டிக் காட்டி, "இவள் என் கல்லூரிச் சிநேகிதி! நாங்கள் இருவரும் ஒன்றாகவே மூன்றும் வகுப்பிலிருந்து படித்து வருகிறோம்" என்று கூறி இருவரையும் அறிமுகப்படுத்தி வைத்தாள். பிறகு அவள் கலாவுடன் புறப்பட்டாள்.

அடுத்துள்ள தன் வீட்டை அடையும் முன்னமேயே, "மாலா! நீ முன்பு பாஸ்கர் என்று உனக்கு ஒரு அண்ணா பம்பாயில் டாக்டராக இருப்பதாகவும், நான் கோடை விடுமுறைக்கு ஊருக்குச் சென்றிருந்த போதெல்லாம் அவர் இங்கு வந்திருந்தார் என்றும் சொன்னாயே? அவர்தான் வந்திருக்கிறார் என்றல்லவா முதலில் நினைத்தேன்! உனக்கு ஒரு அத்தான் இருக்கிறார் என்று நீ ஒரு நாளும் சொன்னதில்லையே!.. ஓகோ! வீட்டிலேயே மாப்பிள்ளை இருப்பதால்தான் காலேஜில் கூடப் படிக்க வேண்டாம் என்று உன் அப்பா தடுத்தாரா? இப்பொழுது அல்லவா புரிகிறது உன் விஷயம்!"



கண் டாக்டர் :—உங்க கண்ணிலே ஒன்றும் கோளாறு இல்லே, தலையைச் சரியாக வாரிக்குங்க, போங்க!

என்று கூறி மாலாவைப் பரிகாசம் செய்ய ஆரம்பித்தாள் கலா.

''கலா! உன் பரிகாசம் இருக்கட்டும். நான் சொல்லுவதைக் கொஞ்சம் கவனமாகக் கேள். இவர் என் அத்தையின் பிள்ளைதான் என்றாலும் இவரும் நானும் சிறு வயது முதல் உடன் பிறந்தவர்கள் மாதிரி பழகி வருகிறோம்!'' என்றாள் மாலா.

''ஆனால் நீ உன் அத்தானைக் கல்யாணம் செய்து கொள்ள மாட்டாயா?''

''கலா! பரீட்சைக்குப் படிக்க வேண்டிய சமயத்தில் இதெல்லாம் என்ன வீண்பேச்சு?'' என்று கேட்டு அந்தப் பேச்சுக்கு ஒரு முடிவு கட்டினாள் மாலா.

நாட்கள் ஓடின. முடிவுப் பரீட்சையும் நெருங்கியது. அன்று 'பிராக்டிகல்' கடைசிப் பரீட்சை. அதை முடித்துக் கொண்டு இரு தோழிகளும் உடல் சோர்வுடன், ஆனால் பரீட்சையில் நன்றாகச் செய்த உள்ளப் பூரிப்புடன் வீட்டை அடைந்தனர். ஆனால் அச் சந்தோஷம் வெகு நேரம் நீடிக்கவில்லை. எப்பொழுதும் டிபனுடன் வாசலில் காத்திருந்து ஆவலோடு அவர்களுடைய பரீட்சையைப் பற்றி விசாரிக்கும் பாட்டியைக் காணாதது கலாவுக்கு என்னவோ போல் இருந்தது. ஏதாவது அவசர வேலையாகப் பாட்டி உள்ளே இருப்பாள் என்று எண்ணிக்கொண்டு உள்ளே சென்ற கலா பதைபதைத்துப் போனாள்.

மாலாவின் அம்மா அருகில் இருக்க, பாட்டி கம்பளிப் போர்வையைப் போர்த்திக்கொண்டு படுத்திருந்தாள். மாலாவின் அம்மாவிடமிருந்து பாட்டிக்கு மலேரியா என்று அறிந்து கலா தேம்பித் தேம்பி அழுதாள். மாலா ஓடி வந்து தன் தோழிக்குச் சமாதானம் கூறினாள். தகப்பனாரிடம் சொல்லிக் கலாவின் பெற்றோருக்குத் தந்தி கொடுக்கச் சொன்னாள். அவள் பெற்றோர்களும் மறு நாளே பெங்களூர் புறப்பட்டு வந்தனர்.

கலாவின் பாட்டிக்கு எத்தனையோ டாக்டர்களை வரவழைத்துக் காண்பித்தும் மலேரியா நோய் தீவிரமாகி, அன்று இரவே பாட்டியும் போய்விட்டாள். பாட்டி இறந்து பதினைந்து நாட்களில் கலாவின் தகப்பனாரும் தாயாரும் அவளை அழைத்துக் கொண்டு திருச்சிராப் பள்ளிக்குப் போய் விட்டனர். திடீரென்று சினிமாக் காட்சி மாறுவது போல் கலாவின் வாழ்வே மாறி விட்டது. உற்சாகமான அவள் வாழ்க்கை, திடீரென்று பாட்டி காலமானதால் அடியோடு மாறி விட்டது.

திருச்சி வந்த ஒரு மாதத்திலேயே கலாவின் தகப்பனாருக்குப் பூனாவுக்கே செல்லும்படி மாற்றல் உத்தரவு கிடைத்தது. ஒரு வாரத்திலேயே திருச்சியை விட்டுக் கலாவின் தந்தை குடும்பத்துடன் பூனாவுக்குப் பயணமானார். கலாவும் இப்படி ஊர் மாறி மாறிச் செல்வதிலேயாவது தன் சோர்வடைந்த உள்ளத்துக்குச் சிறிது ஆறுதல் காணலாம் என்று எண்ணியவளாய் இம்மாற்றலைப் பெரிதும் சந்தோஷத்துடன் வரவேற்றாள்.

பூனாவுக்கு வந்து மூன்று மாதங்களுக்கு மேல் ஓடி மறைந்தன. ரொம்ப நாட்களாக எதிர்பார்த்த வேலை உயர்வு கலாவின் தகப்பனாருக்குக் கிடைத்தது. அதை முன்னிட்டு அவருக்குக் கீழே வேலையில் இருந்த எல்லா உத்தியோகஸ்தர்களுக்கும் தம் வீட்டில் ஒரு பெரிய தேநீர் விருந்துக்கு ஏற்பாடு செய்தார். ஐந்தரை மணி ஆகிவிட்டது. தேநீர் விருந்து ஆரம்பமாவதற்கு இன்னும் அரை மணி நேரமே இருந்தது. கலா அங்கும் இங்கும் ஓடி விருந்தினர்களை வரவேற்பதில் முனைந்திருந்தாள். ''நமஸ்தே! என்னை நினைவிருக்கிறதா, கலா!'' என்ற ஒரு குரலைக் கேட்டுத் திரும்பியவள் ஒரு கணம் ஸ்தம்பித்து விட்டாள்.

கலா திகைப்பு நீங்கியவளாக, ''ஆகா! உங்களை நினைவில்லாமல் என்ன, ஆனால் நீங்கள் அப்பாவின் ஆபீசில் வேலை பார்ப்பதாகத் தெரியாது. வாருங்கள், உட்காருங்கள்'' என்று கூறிச் சுந்தரை அழைத்துச் சென்று உட்கார வைத்தாள்.

எதிர்பாராத விதமாக, கலாவைத் தன்னுடைய மேலதிகாரியின் வீட்டில் அவருடைய மகளாகவே சந்தித்ததை எண்ணி, சுந்தர் உள்ளம் பூரிப்படைந்தான். மேஜையின் மேல் வைக்கப்பட்டிருந்த சிற்றுண்டிகளைத் தொடாமலேயே சுந்தருக்குப் பெரிய விருந்து சாப்பிட்டது போல் ஆகிவிட்டது.

தேநீர் விருந்து முடிந்து, இந்த முறையும் தன் விருப்பத்தைக் கலாவிடம் தெரிவிக்க முடியாததை நினைத்து வருந்திக்கொண்டே வந்த சுந்தருக்கு அவன் அறையில் ஒரு கடிதம் காத்திருந்தது. அது அவன் தாயாரிடமிருந்துதான் வந்திருந்தது. அவன் மாமாவிடமிருந்து வந்த கடிதத்தில் எப்பொழுது சுந்தர் – மாலாவின் கலியாணத்தை நடத்தலாம் என்றும் கேட்டிருப்பதால், உடனே அவனுக்கு எந்த மாதம் வசதிப்படும் என்று எழுதும்படி கேட்டிருந்தாள். சுந்தருக்கு ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது. மறுநாள்


இப்பொழுது
உங்கள்
வீடுகளுக்கேற்ற
சுலபமாக மாட்டக்கூடிய
PHILIPS
ஆல்-இன்-ஒன்
ப்ளோரஸெண்ட் யூனிட்
பிலிப்ஸ் ஆல் - இன் - ஒன் ப்ளோரஸெண்ட் பிட்டிங்ஸ்களை உங்கள் வீடுகளில் வெகு சுலபமாகப்பொருத்த முடியும். ஏனெனில் இதன் எல்லா பிட்டிங்ஸ்களும் ஒருங்கே அமைக்கப்பட்டிருப்பதால் வெவ்வேறு பாகங்களை தனித்தனியாகபொருத்துவது அவசியம் இல்லை. கண்ட்ரோல் கியர், ஸ்டார்ட்டர், லாம்ப் ஹோல்டர் முதலிய பாகங்கள் எல்லாம் இச்சிறந்த பிலிப்ஸ் லைட்டில் ஒருங்கே அமைக்கப்பட்டிருக்கின்றன.
எல்லாம் ஒன்றில்
எல்லா எலெக்ட்ரிக் கனெக்ஷன்களும் இணைக்கப்பட்டுத் தயாராயிருப்பதால் நீங்கள் இதன் வயரை உங்களது மெயின் ஸ்விட்ச்சில் பொருத்தினால் போதும். மேலும்பிரத்தியேகமான 'நாக் அவுட்' துவாரங்கள் இருப்பதால் இந்த லைட்டை 'சுவரிலோ அல்லது மேல் உத்திரத்திலோ மாட்டுவது சுலபம்.
கண்களுக்குக் கூசாத, குளிர்மையான வெளிச்சத்தை தருவதற்கேற்ற அமைப்புகள் இந்த பிலிப்ஸ் லைட் யூனிட்டில் பொருத்தப்பட்டிருக்கின்றன இந்த அழகான பிலிப்ஸ லைட்டை இன்றே பொருத்துங்கள்.
பிலிப்ஸ்
'டீஎல்' ப்ளோரஸெண்ட்
லைட்டு & பிட்டிங்ஸ்
— உங்கள் வேலை சிரமத்தை குறைக்கும்!
P 13





ஆபீஸுக்குச் சென்று திரும்பிய சுந்தர் தன்னால் அப்பொழுது கலியாணத்தைப் பற்றி யோசிக்கக்கூட நேரமில்லை என்று ஒரு தபால் கார்டில் அவசரம் அவசரமாய் இரண்டு வரிகள் கிறுக்கி அம்மாவுக்கு அனுப்பினான். மன நிம்மதியைத் தேடிக் கடைத்தெரு வழியாகச் சென்று கொண்டிருந்தான்.

அப்பொழுது கலாவின் தந்தை அந்த வழியாகக் காரில் சென்றார். சுந்தரைக் கண்டதும் காரை நிறுத்தி, "மிஸ்டர் சுந்தர்! என்ன வாங்கப் போகிறீர்கள்? சாமான்கள் வாங்கி முடிந்ததென்றால் காரிலேயே போகலாமே! வாருங்கள்" என்றார். சுந்தர் அசட்டுச் சிரிப்புடன், காரில் ஏறிக்கொண்டான். காரை ஓட்டத் தொடங்கினதுமே, கலாவின் தகப்பனார், "கலா, பெங்களூரில் உங்களை அவள் தோழி மாலாவின் வீட்டில் சந்தித்திருப்பதாக நேற்றிரவுதான் சொன்னாள். எனக்கு இவ்வளவு நாளும் இந்த விஷயம் தெரியவே தெரியாது" என்று கூறினார். அவர் 'கலா' என்ற பெயரைச் சொன்னதுமே சுந்தருடைய உள்ளம் ஆனந்தத்தால் துள்ளியது. கார் அவர் வீட்டையடைந்ததும் இருவரும் இறங்கி உள்ளே சென்றனர்.

கலாவின் தந்தை அவனைத் தம் மனைவிக்கு அறிமுகப்படுத்தினார். அவர் மனைவியும், "ஓகோ! அதுதான் இன்று மத்தியானம்கூடக் கலா, மாலாவுக்கு எழுதிய கடிதத்தில் நேற்று தேநீர் விருந்தில் உங்களைப் பார்த்ததாக எழுதியிருந்தாள்" என்றாள். அவர்கள் இருவரும் காப்பி சாப்பிட்டு விட்டு, தங்கள் ஆபீஸ் விஷயத்திலிருந்து உலக விஷயம் வரையில் எல்லாவற்றையும் பேசித் தீர்த்தனர். விடைபெறுமுன் கலாவின் தந்தை "உங்களுக்கு ஆட்சேபனை ஏதும் இல்லையென்றால் உங்கள் தகப்பனார் விலாசம் கொடுங்கள். நான் அவருக்கு ஒரு முக்கிய விஷயம் பற்றி எழுத விரும்புகிறேன்" என்றார்.

"கரும்பு தின்னக் கூலி வேண்டுமா என்ன? நான் ஏன் ஆட்சேபிக்கிறேன்?" என்று மனத்துக்குள் எண்ணியவனாக "நான் எப்படித் தகப்பனாரின் விலாசம் கொடுக்க முடியும்? அவர் இறந்து போய் ஐந்து வருஷங்களுக்கு மேல் ஆகிறதே! அம்மாதான் பாட்டியுடன் சென்னையில் குடியிருக்கிறார்கள்" என்று கூறியவன் சிரித்துக் கொண்டே தலையைத் தாழ்த்திக் கொண்டான். அவன் விருப்பத்தை அவர் தெரிந்து கொண்டார்.

தன் அறையை அடைந்த சுந்தரின் மனம் ஒரு நிலையில் இல்லை. கலங்கிய கண்களுடன் மாலாவும், கோபத்துடன் அவன் மாமாவும், வருத்தத்துடன் அவன் தாயும் அவன் கண்களில் தோன்றித் தோன்றி மறைந்தனர். பிறகு எப்படித் தன் முடிவைத் தாயாருக்குத் தெரிவிப்பது என்ற யோசனையில் ஆழ்ந்தான். சிறிது நேரத்தில் ஒரு நிச்சயமான முடிவுக்கு வந்தவனாக, தன் தாயாருக்கு ஒரு கடிதம் எழுதினான். தான் மாலாவை மணக்கமுடியாததற்கு வருந்துவதாகவும், மேல் உத்தியோகஸ்தரின் மகள் கலாவையே மணக்க விரும்புவதாகவும் தாயாருக்கு எழுதி விட்டான்.

அன்றும் வழக்கம் போல் "தபால்" என்ற குரலைக் கேட்டு, கலாவிடமிருந்து வரும் கடிதத்துக்காகக் காத்திருந்த மாலா ஓடிச் சென்று தபால்காரன் கொடுத்த இரண்டு கடிதங்களையும் வாங்கிக் கொண்டாள். கலாவின் கடிதத்தை எடுத்து முதலில் படித்தாள்: அதில் கலா தன் தகப்பனாரின் வேலை உயர்வையும் அதற்காக நடந்த தேநீர் விருந்தையும் பற்றி எழுதியிருந்தாள். மாலாவின் அத்தான் சுந்தரைச் சந்தித்ததைப் பற்றி எழுதியிருந்தாள். மிக்க மகிழ்ச்சியுடன் மற்றக் கடிதத்தைப் பிரிக்கலானாள். கடிதத்தைப் படித்து முடிவதற்கு முன்பே அவள் கண்களிலிருந்து கண்ணீர் ஆறாகப் பெருகிற்று. "கலா! நீ இப்படி எனக்குத் துரோகம் செய்வாய் என்று கனவிலும் நினைக்கவில்லையே" என்று புலம்பினாள்.

மாலாவிடமிருந்து கடிதம் வந்த பிறகே தன் திருமண விஷயம் பற்றி அவளுக்கு அறிவிக்க வேண்டும் என்று எண்ணி அவள் கடிதத்துக்காகக் காத்திருந்து ஏமாந்தாள் கலா.

அன்று தபால்காரன் வரும் நேரத்துக்கு அன்றையப் பத்திரிகையுடன் கலா வாசலில்




வந்து உட்கார்ந்தாள். தபால்காரன் கொடுத்துச் சென்ற கடிதத்தை ஆவலுடன் வாசிக்கத் தொடங்கினாள். 'கலாவுக்கு' என்று மொட்டையாக ஆரம்பித்த கடிதத்தைக் கண்டதுமே, 'தன் தோழிதானா இதை எழுதியது?' என்று சந்தேகம் அடைந்தாள்.

"கலாவுக்கு,

என் அத்தையிடமிருந்து வந்த கடிதத்திலிருந்து நீ சுந்தரை மணக்கப் போவதாக அறிந்து கொண்டேன். நீ இப்படி எனக்கு ஒரு துரோகம் இழைப்பாய் என்று நான் கனவிலும் கருதவில்லை. சுந்தர் என் அத்தான் என்று அறிந்தும், எங்கள் இருவரையும் பிரிக்க எப்படி உன் உள்ளம் சம்மதித்தது? இப்படி உனக்கு ஒரு கடிதம் எழுதவே என் கை நடுங்குகிறது.

—மாலா"

இத்தகைய ஒரு எதிர்பாராத கடிதத்தைப் படித்த கலாவின் தலை சுற்றியது. கண்கள் இருண்டன. கையில் கடிதத்துடன், இருண்ட



"இந்தப் பிச்சை, பிச்சை என்கிற பேச்சே எனக்குக் கேட்க முடியவில்லை. ஏதாவது தொழில் செய்யக் கூடாது? உன்னுடைய பெயர் என்ன?"

"பிச்சைங்க!"

கண்களிலிருந்து கண்ணீர் பெருக வாசலிலேயே சாய்வு நாற்காலியில் படுத்துவிட்டாள். அப்பொழுதுதான் நீராடி விட்டு வாசலுக்கு வந்த அவள் தந்தை "கலா, நீ சாப்பிட்டாகி விட்டதா? என்ன இங்கேயே படுத்து விட்டாய்? கடிதம் வந்திருக்கிறதா?" என்று பல கேள்விகளை அடுக்காகக் கேட்டுக் கொண்டே வந்தவர் மகளின் நிலையைப் பார்த்துப் பதைபதைத்துப் போனார். அவள் கையிலிருந்த கடிதத்தைப் படித்துப் பார்த்தார். அவருக்கு ஒன்றும் புரியவில்லை.

"அப்பா! நான் நிச்சயமாக இக்கல்யாணத்துக்கு உடன்பட மாட்டேன்."

"அப்பா, எனக்கு க்ஷயநோய் என்று டாக்டர்களிடமிருந்து இப்பொழுதுதான் தெரிய வந்தது என்று சுந்தரிடம் கூறி விடுங்கள். அப்பொழுதுதான் எனக்கு மன நிம்மதி ஏற்படும்" என்று கலா ஒரு அணுகுண்டையே தூக்கிப் போட்டாள்.

மகளின் பேச்சைக் கேட்ட அனுபவம் முதிர்ந்த அவள் தகப்பனார், "அம்மா, கலா! நீ வேண்டுமானால் சுந்தரத்தைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டாம். அதற்காக இப்படி விளையாட்டுத்தனமாக உன் வாழ்வையே பாழடித்துக் கொள்ள நான் எப்படி விடமுடியும்?" என்று வருத்தத்துடன் கேட்டார். வேறு வழி ஒன்றும் புலப்படாதகலா தந்தையை நோக்கி, "உங்களுக்கு வேறு எதுவும் தகுந்த காரணம் தெரிந்தால் கூறுங்கள். அப்படிச் சரியான வழி ஒன்றும் கிடைக்க வில்லையென்றால் என் எண்ணத்தை வெளியிட்டே தீரவேண்டும். அப்படிச் செய்ய மறுத்தால் என்னை இவ்வீட்டிலேயே நிச்சயமாகக் காண முடியாது" என்று கண்டிப்பாகக் கூறிவிட்டாள். கலாவின் கண்டிப்பான பதிலைக் கேட்ட அவர் அயர்ந்தே போய் விட்டார். இந்த முடிவின்படி மறு நாளே கலா, மாலாவுக்கு ஒரு கடிதம் எழுதி யனுப்பினாள்.

"பிரிய தோழி மாலாவுக்கு,

உன் கடிதம் கண்டு இரண்டு நாட்களாக நிலைகுலைந்து நின்றேன். நீ அன்று ஒருநாள் சுந்தர் உன் அத்தானாக இருந்தாலும் சகோதரர் போலவே பழகுவதாகக் கூறியதால் நான் சுந்தரை மணக்கச் சம்மதித்தேன். உன் கடிதம் கண்ட பிறகு, நான் அவரை மணக்க மறுத்து விட்டேன். கனவிலும் உனக்குத் துரோகம் நினைக்காத என்னை நீ எப்படி இவ்வாறு தவறாக நினைத்து விட்டாய்? இதுதான் விதியின் விளையாட்டுப் போலும். உனக்கும் உன் அத்தானுக்கும் நடக்கும் கல்யாணத்துக்கு வந்து களிப்பெய்தும் நாளை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

—கலா"

கலாவின் தகப்பனாரிடமிருந்து அவனுக்கு வந்திருக்கும் கடும் வியாதியைப் பற்றி அறிந்த சுந்தர் அன்றிரவு உறக்கமின்றித் தவித்தான். ஒரு வாரத்தில் மனத்தைத் தேற்றியவனாக மாலாவையே மணக்கச் சம்மதிப்பதாகத் தன் தாய்க்குக் கடிதமும் எழுதி விட்டான். இக் கல்யாணம் நடைபெறுவதில் யாவருக்குமே மட்டற்ற மகிழ்ச்சி.


மாலாவின் திருமணத்துக்காகப் பங்களூர் சென்றாள் கலா. மாலாவின் கல்யாணத்துக்காக அவள் உறவினர்கள் பலரும் வந்திருந்தார்கள். ஊரிலிருந்து வந்த மாலாவின் தமையன் பாஸ்கரன் கல்யாணக் காரியங்களில் முன்னணியில் நின்று எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டான். கல்யாணத்தன்று காலையில் இருந்து அவனுக்குச் சரியான வேலை. பாஸ்கரனின் சுறுசுறுப்பையும் சாமர்த்தியத்தையும் பற்றி அவன் அத்தை உள்படப் பலரும் புகழ்ந்தனர்.

சுந்தர் கலாவை மணக்க இருந்ததை அறிந்த ஒரு சில பெரியவர்கள் கலாவைப் பார்த்த பொழுது, "ஏன்? இந்தப் பெண்ணுக்குத்தானே ஏதோ வியாதி என்று இந்த மாப்பிள்ளை மணக்க மறுத்தானாம்? பாவம், பெண் ரொம்ப அழகாக இருக்கிறாளே!" என்று பேசிக் கொண்டனர். அப்பொழுதுதான் அவர்கள் பக்கம் வந்த டாக்டர் பாஸ்கரனுக்கு இவர்கள் பேச்சு நாராசம்போல அவன் காதில் பாய்ந்தது. உடனேயே தன் தங்கையைக் கண்டு இவ்விஷயம் பற்றி அறியத் துடித்தான்.

தன் அண்ணனிடமிருந்து கலாவுக்குக் கடும் வியாதி என்று கேட்ட மாலா பதைபதைத்துப் போய் அவளை அணுகிப் போய்க் கேட்க, கலா உண்மையைக் கூறிய பொழுதுதான் தன் சிநேகிதி தனக்காகச் செய்த தியாகத்தை மாலா உணர்ந்தாள். மாலா தன்னைக் கட்டிக் கொண்டு கதறுவதைக் கண்டு ஸ்தம்பித்துப் போனாள் கலா. மாலா தான் செய்த பெரிய பாவத்துக்குப் பிராயச்சித்தமாகவும் கலாவின் நல்வாழ்வுக்காகவும் கலாவை நினைந்துருகும் தன் அண்ணனை மணக்கும்படி கேட்டுக் கொண்டாள். பாஸ்கரின் செக்கச் சிவந்த மேனியுடன் கூடிய சிரித்த முகம் அவள் நினைவுத்திரையில் வர, தன் தோழியின் வேண்டுகோளுக்கு இணங்கியவளாய்த் தலையைத் தாழ்த்திக் கொண்டாள், கலா.

பற்களைப் பரிசுத்தமாக்கும்

மக்லீன்ஸ்!




இம் மூன்று கோப்பைகளை பற்கள் என பாவனை செய்வீர்களானல் இவைகளின் வெளிப்புறம் மற்றும் உட்புறத்தைத் தவிர, ஊத்தை சேர்ந்து அபாயகரமான கிருமிகள் வசிக்கும் இடுக்குகளை சுத்தம் செய்வது மிகக் கடினம். பற்களைப் பாதுகாக்க விரும்புவோர், 'லைப்பாயிட்ஸ்' ஸினுல் ஏற்படும் அபாயத்தை அறிய வேண்டியது அவசியம்.

மக்லீன்ஸ் எளிதில் துலக்க முடியாத பற்களின் இடுக்குகளில் முண்டிப் புகுந்து துலக்குகிறது. எனவே

பற்சிதைவைத் தவிர்க்க சிறந்த சாதனமாக இருப்பது மக்லீன்ஸ் ஒன்றே

பற்களின் மேல் படர்ந்திருக்கும் 'லைப்பாயிட்ஸ்' கலந்த பாசி பார்ப்பதற்கு அசிங்கமாயிருப்பதோடன்றி அபாயகரமானதுங்கூட என்று பல் டாக்டர்கள் நிரூபிக்கின்றனர். 'லைப்பாயிட்ஸை' எளிதில் சுத்தம் செய்ய முடியாது. இவை தவருமல் சுத்தம் செய்யப்பட வேண்டும். இல்லையேல் இவைகளின் உட்புறத்தில் தங்கும் திராவகச் சத்து பற்களை அரித்தே விடுகின்றது. இத்தகைய 'லைப்பாயிட்ஸை' அறவே அகற்ற ஒரே வழிதான் உண்டு. அதாவது இதை கரையச் செய்ய வேண்டும். 'லைப்பாயிட்ஸை' கரைக்கக் கூடிய விசேஷமான திரவம் மக்லீன்ஸில் இருப்பதால், வாயில் நுரை கூட்டாமல் மக்லீன்ஸ் 'லைப்பாயிட்ஸை' லகுவாக ஜாக்கிரதையுடன் துரிதமாக கரையச் செய்கின்றது. பற்களின் சிதைவைத் தவிர்க்க இது மிகவும் முக்கியம்.

மக்லீன்ஸ் பெராக்ஸைட் பற்பசையை தினந்தோறும் இருமுறை உபயோகியுங்கள். பற்கள் வெண்மையாகவும், ஆரோக்கியத்துடனும் விளங்கும்.



க்ளோரோபில் சேர்ந்த வகையும் கிடைக்கும்


MTY-41 TAM

மக்லீன்ஸ் ப்ரிமியர் சினி ஜிங் – சினிமா உலகத்தில் சம்பந்தப்பட்ட செய்திகளும் சங்கீதமும் சேர்ந்த இந்நிகழ்ச்சியைப் பிரதி திங்கட்கிழமைதோறும் இரவு 8-30 முதல் 9 மணி வரை ரேடியோ ஸிலோன் 41 மீட்டர்களில் கேளுங்கள்

பானுவின் காதலன்

2. அன்னையின் ஆசை!


சின்னத்துரை புவியில் ஜனனமாகப் போகிறான் என்று அறிந்த நாளில் இருந்தே அவனுடைய தாயார் கமலம்மாள் அவனுடைய வாழ்க்கையைப் பற்றிய திட்டத்தை உருவாக்கி விட்டாள் என்று சொன்னால் அது பொய்யாகாது. அவளுக்கு வெகு நாட்களாக உள்ளத்தின் உள்ளே ஒரு ஆசை உண்டு. அது என்ன தெரியுமா? 'ரயிலுக்கு டிக்கெட் வாங்காமல் க்ஷேத்திராடனம் செய்ய வேண்டும். புண்ணிய தீர்த்தங்கள் ஒன்று விடாமல் போய் முழுக்குப் போட வேண்டும். 'என் பிள்ளைக்கு ரயிலிலே வேலை. எனக்கு 'பாஸ்' உண்டு!' என்று பெருமையுடன் சொல்லிக் காலை நீட்டிக் கொண்டு வண்டியிலே பிரயாணம் செய்யும் ஆனந்தம் ......' ஆஹா! அதுவே அவளுடைய வாழ்க்கையில் எல்லா நலங்களையும் இழந்தபின் கடைசியாக வைத்திருந்த ஆசை.



சின்னத்துரை மழலைபேசி, அ. ஆ. படிக்கப் பள்ளிக்கூடத்தில் சேர்ந்த நாளிலிருந்து, 'ரயிலிலே வேலைக்குப் போவேன்' என்ற லக்ஷியத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக அம்மாள் பிஞ்சு மனத்திலே தோற்றுவித்தாள். கண்ணுக்குக் கண்ணான ஒரே பிள்ளையாயிற்றே? அம்மாவின் விருப்பத்தைக் கருக்கிவிடுவானா? அவனுக்குச் சிறு வயசிலேயே ரயில் என்றால் கொண்டாட்டம்தான். அவன் விளையாடியதெல்லாம் ரயில் விளையாட்டுத்தான். எப்போதும் ரயிலிலேயே பிரயாணம் செய்வதைப் போன்ற சுவர்க்கம் வேறு எங்கே உண்டென்று நினைத்திருக்கிறான்.

ஆனால், 'டிக்கெட், டிக்கெட்' என்று அவன் விளையாடிய காலம் நிசமாக வருவதற்குப் பள்ளிக்கூடப் பரீட்சை அல்லவா தேறித் தொலைக்க வேண்டியிருந்தது? பரீட்சை நிர்வாகிகளேனும், 'பூந்துறைக்கும் திருச்சிக் கோட்டைக்கும்

இடையே இருப்புப் பாதை எத்தனை மைல்? எத்தனை வண்டிகள் அந்த 'லைனில்' ஓடுகின்றன?' என்பதைப் போன்ற கேள்விகளாகக் கேட்டாலும் பரவாயில்லை. எங்கோ கேப் டவுனுக்கும் கெய்ரோவுக்கும் இடையின் ரயில் பாதை எத்தனை மைல் என்ற மாதிரியில் கேள்விகளைக் கேட்டால், அவன் போயா பார்த்திருக்கிறான்? எனவே, அவன் ஏழாம் வகுப்பை விட்டே மூன்று வருஷங்கள் அசையவில்லை. தன் லட்சிய சித்தியையே மனசில் கொண்டு கமலம்மாள் அவனை உள்ளூர்ப் பள்ளிக்கூடத்தை விட்டு,



ரயிலேறிப் போகும் படியான டவுன் பள்ளிக்கூடத்திலே சேர்த்தும் அந்த ஏழாம் வகுப்பு அவனுக்கு விடை கொடுத்து அனுப்ப மறுத்தது. ஆனால் முழுதும் பயனில்லை என்று சொல்லிவிட முடியாது. ஓடும் வண்டியில் தாவுதல், பலகையில் தொங்கிக் கொண்டு காவிரிப் பாலத்தில் பிரயாணம் செய்தல், 'பாஸ்' வாங்காமலேயே பரிசோதகரின் கண்களில் மண்ணைத் தூவி விட்டு மறைந்து கொள்ளுதல் ஆகிய ரயில் வண்டிச் சாகசங்

களிலே தேர்ச்சி பெற்ருன். இந்தத் தேர்ச்சியைக் கமலம்மாள் ஒப்புக் கொள்ளவேயில்லை. "போடா, மண்டு. மக்கு..............." என்று எத்தனையோ நாமங்களால் அர்ச்சனை செய்தாள். தன் நெடுநாளைய விருப்பம், நம்பிக்கை எல்லாம் இப்படி மழைக் காலத்து மண் சுவராகச் சரிந்து விட்ட அதிர்ச்சியை அவளால் தாளவே முடியவில்லை.

"இப்படி ஜடமாய் என் வயிற்றில் வந்து பிறந்தாயே? போய்க் காப்பி ஆற்று கடையிலே! கடன்கொட்டினேன் உனக்கு. கரித்துணியும் கரண்டியும் தான் உன் தலையில் எழுதியிருக்கிறது!" என்று முடிவாக வெறுப்பைக் காட்டி அவன் படிப்புக்கு அவள் முற்றுப்புள்ளி வைத்து விட்டாள்.

அதன்பேரில் சின்னத்துரை விடுதலை பெற்று இஷ்டப்படி ஊரைச் சுற்றி வந்தான். காப்பிக்கடை ஒன்றுக்கும் உடனே அவன் போகாமற் போனாலும், எட்டில், பத்தில் ஐயா சாமி அவனைக் கையாளாகக் கூட்டிப் போவார். இரண்டோ ஒன்றே, காலோ அரையோ, கிடைத்தது கிடைக்கும். வெற்றிலையும் புகையிலையும் போட்டுக் கொண்டு, சோறு கிடைத்த இடத்தில் சம்பிரமமாகச் சாப்பிட்டு விட்டுக் கவலை யில்லாமல் ஊர்வம்பைக் கேட்டுக் கொண்டு வளைய வந்தான்.

இந்த நாட்களிலேதான் ஒருநாள் அவனுடைய தாயார், காவேரியிலிருந்து வந்ததும் வராததுமாக வயிற்றெரிச்சலுடன் அந்தச் செய்தியை அவனைத் தேடி வந்து சொன்னாள்.

"ஏண்டா சின்னு? புதிசாக யாரோ ரயில் இன்ஸ்பெக்டர் நம் ஊருக்கு வந்திருக்கிறார் என்றாயே? யாருமில்லை, பானு சமைத்துப் போடப் போனாளே, அந்த மனிதர்கள்தானாம். நல்ல குணசாலியாம் அவர். படிப்பில்லாதவர்களைக்கூட ரயிலிலே இழுத்து விடுகிறாராமே? கோமளத்தின் தம்பி பிள்ளைக்கு அறுபது ரூபாய் சம்பளமாம், வேலை போட்டுக் கொடுத்திருக்கிறாராம்! பாஸாம் போக வர..."

அப்போதுதான் வெளியே கிளம்ப இருந்த சின்னத்துரை ஒரு விநாடி மலைத்தாற்போல் நின்றான்.



அந்தப் பயல் ஐந்தாம் வகுப்பிலே முட்டியடித்தவன், ஓடும் ரயிலைக் கண்டால் நடுங்குவான், அவனுக்கா ரயிலிலே அறுபது ரூபாய் சம்பளம்?...

"நிசந்தானா அம்மா இது?"

"கோமளம் வாய் கிழியப் பெருமை அடிக்கிறாளேடா?"

"கிடக்கிறான், நான் போய் அந்த இன்ஸ்பெக்டரைப்பார்க்கிறேனம்மா!" என்று கூறி விட்டுச் சின்னத்துரை வெளியே நடந்தான். நேராக ஐயா சாமியின் வீட்டுத் திண்ணைக்குத் தான் போய்ச் சேர்ந்தான்.

கொட்டுமேளமும் சந்தனமும் பூவும் முழங்கும் காலந்தான். அன்று ஐயா சாமிக்கு உடல் நலிவோ என்னவோ, திண்ணையிலே சோர்ந்தாற் போல் படுத்திருந்தார்.

'ஏன் மாமா, தூக்கமா?' என்று கேட்டுக் கொண்டே சின்னத்துரை குட்டித் திண்ணையில் அவர் பக்கத்தில் வந்து உட்கார்ந்தான்.

"இல்லைடா, சனி முட்டியிருக்கிறது. கிளிமங்கலத்திலே நாளைக்கு ஒரு கல்யாணம். இப்பொழுதுதான் கிட்டுவிடம் சொல்லி அனுப்பினேன். உன்னை வந்து கூப்பிட்டானா?"

"இல்லை மாமா..." என்று தலையாட்டின சின்னத்துரை, இன்ஸ்பெக்டர் எப்படி என்று விசாரித்தான். அவர் வீட்டுக்குப் போகலாமா, ஆபீசுக்குப் போகலாமா என்பது பிரச்னை.

ஐயாசாமி உற்சாகத்துடன் எழுந்து உட்கார்ந்தார்.

"பேஷாய்ப் போய்க் கேள். வீட்டுக்குப் போயேன்? அந்தம்மாள் நோயாளி என்று கேள்வி. நேற்றுக் காவேரிக் கரையிலே குடமும் கையுமாகப் பார்த்தேன் அந்தப் பெண்ணை. அசந்து போனேன் போ. அந்தப் பெண்ணை எனக்கு அடையாளமே தெரியவில்லை! இரண்டு வருஷங்களுக்கு முன்பு கந்தல் பாவாடையும் தானுமாகப் பாட்டியிடம் ஊர்ப்பட்ட திட்டுக்களைக் கேட்டுக் கொண்டு ஒருவேளை சோற்றுக்குத் தாளம் போட்ட பெண் என்று யாரேனும் சொல்வார்களா? புடவை என்ன, ரவிக்கை என்ன, நடை என்ன? நான் பிரமித்துப் போனேன்."



நீண்ட, அடர்ந்த
ஒளிக்கூந்தலுக்கு
இளமையின் ஒளியும் அற்புத ஜ்வலிப்பும்
பெற கூந்தலுக்கு கால்கேட் பெர்பியூம்டு
காஸ்டர் ஹேர் ஆயிலை தடவுங்கள். கூந்த
லின் இயற்கை அழகை அது எடுத்துக் காட்டி
எல்லோரையும் பிரமிக்கச் செய்யும்.
கால்கேட்
பெர்ஃபியூம்டு காஸ்டர்
ஹேர் ஆயில்



எவ்வித இருமலும்
எதிர்த்து நிற்க முடியாது
'ZEPHROL'
Trade Mark
Brand
EPHEDRINE COUGH SYRUP
ஜெப்ரால் இருமல் சிரப்
ஒரு எம் & பி பிராண்ட் மருந்து தயாரிப்பு
Manufactured by: MAY & BAKER LTD
Distributed by: MAY & BAKER (INDIA) PRIVATE LTD
BOMBAY • CALCUTTA • GAUHATI • MADRAS • NEW DELHI

T. 40

''யார்? பானுவா, மாமா?''

சின்னத்துரையின் விழிகளையும் அசட்டுச் சிரிப்பையும் கண்டு அவர் மனசுக்குள் சிரித்துக் கொண்டார்.

''சமையலுக்கு வந்த பெண் என்று ஒரு பயலும் சொல்ல முடியாது. நான் எண்ணிக் கொண்டேன்: செல்லப் பாட்டியா சும்மாவா? வீட்டிலே அங்கே எப்படி வேலை இருக்கும்? இரண்டு பெண்களும் கல்யாணமாகிப் போய்விட்டார்களாம். ஒரு பையன் என்னவோ படிக்கிறான் போலிருக்கிறது. இவள் வைத்ததுதான் ராஜ்யமாக இருக்குமோ என்னவோ? ஏண்டா! அப்படிப் பார்க்கிறாயே? பேத்தியை உனக்குக் கொடுப்பதாகச் செல்லப் பாட்டிக்கு எப்போதோ எண்ணம் இருந்தாலும், இப்பொழுது அவள் ஜோருக்குப் பாட்டியிருந்தால் உத்தியோகஸ்தன் வரன் தான் தேடுவாள்!...''

அவர் இப்படி அவனை மட்டம் தட்டியது, அவனுடைய ரோஷத்தைக் குத்தி எழுப்பியது. ''மாமா! நான் உத்தியோகஸ்தன் ஆகமாட்டேன் என்று நினைக்கிறீர்களா?'' என்று கேட்டுக் கொண்டு எழுந்தான் சின்னத்துரை.

பானுவைப் பற்றி அப்படியா சொன்னார்? அவளுக்கு அத்தனை ராங்கி வந்துவிடுமோ? நேற்று வரையில் பானுவுக்கு நாதி என்று யாருமே கிடையாது, அவனுக்குத் தெரியும். பாட்டி 'வீடு வீடாக வேலை செய்கிறேன் என்று வறண்டிச் சுரண்டிச் சுருட்டிக் கொண்டு போகிறவள்' என்பது ஊர்ப் பிரசித்தம். பேத்தியை அடித்துக் கொல்வாள். தெருக் கிணற்றங் கரையில் நின்று பானுவின் மூகம் குங்குமமாக விசிக்காத நாள் என்பதே இருக்காது.



சின்னத்துரை எத்தனையோ நாட்கள், பள்ளிக்கூடம் போகும் சமயங்களில் கண்டு மனம் பொறுக்காமல், ''ஏன் பானு, அழறே?'' என்று கேட்டிருக்கிறான். பாட்டி பணம் சேர்த்துச் சேர்த்து ஊதாரிப் பிள்ளைக்குக் கொடுப்பாள். அவன் தொலைத்து விட்டுத் தொலைத்து விட்டுத் திரும்பி வருவான்.

கடைசியில் பானுவை எங்கோ வேலைக்குக் கொண்டு விட்டபின், பாட்டி ஒரு நாள் கட்டையைப் போட்டு விட்டாள். தெருக்கோடியிலே கூரைக் குடிசை குட்டிச்சுவராக நிற்கிறது. ஊதாரிப் பிள்ளை போன இடமே தெரியவில்லை.

வேலையை மறந்து பானுவைப்பற்றியே சிந்தித்தவனாக அவன் மார்க்கபந்துவின் 'ரயில்வே குவார்ட்டர்'ஸுக்குப் போய்ச் சேர்ந்தான். வாசலில் காங்கி ஆள் ஒருவன் நாய்க்குச் சோறு போட்டுக் கொண்டிருந்தான்.

''ஐயா இருக்கிறாரா?'' என்று மெதுவாக விசாரித்தான் சின்னத்துரை.

''ஐயாவைப் பார்க்க வந்தீங்களா? மூன்று மணிக்கு மேல் வாங்க, போங்க'' என்றான் அவன்.

அதை மீறிக் கொண்டு அவன் எப்படி உள்ளே நுழைவது?

ஒருகணம் தயங்கிவிட்டு, 'சரிதான், இப்போது சாப்பாட்டு வேளையாக இருக்கும்' என்று அவன் திரும்பினான்.

மூன்று மணிக்கு மேல் அவன் வந்தபோது, வேறொரு ஆள் வாசல் தோட்டத்தைக் கொத்திக் கொண்டிருந்தான். அவன் சின்னுவை ஐயாசாமியுடன் பார்த்திருக்கிறான்.

''வேலை விஷயமா வந்தீங்களா? ஐயாசாமிஅனுப்பினாரா?'' என்றுஅவன் கேட்டது சின்னத்துரையை ஆச்சரியக் கடலில் ஆழ்த்தியது. 'எப்படித் தெரிந்தாற் போல் கேட்கிறானே? நிச்சயம் இனி வெற்றிதான்!'

''ஆமாம், உள்ளே போய் ஐயாவைப் பார்க்கலாமா?''

''ஓ, போங்க!'' வள்ளென்று தாவிய நாயின் சங்கிலியைப் பிடித்து இழுத்தபடி, ''சும்மா போங்க, கடிக்காது'' என்று அவன் சின்னத்துரையை உள்ளே அனுப்பி வைத்தான்.

வராந்தாவை அடுத்த கூடத்திலே வாசலுக்கு நேராக ஒரு கட்டில் இருந்தது. அந்தக் கட்டிலில் ஒரு அம்மாள், ஏனோதானோ என்றில்லாமல் கட்டிலுக்கே களையாக நிறைவு தரும்படி வாசலைப் பார்த்தபடி வீற்றிருந்தாள்.

அவள் உடலும் தலையும், ஈயச் செம்பின் நினைவைக் கொண்டு வந்தது சின்னத்துரைக்கு.

''யாரப்பா நீ?....''

அம்மாள் கேட்ட கேள்விதான் இது. கதவு இடுக்கில் அகப்பட்ட மூஞ்சூறுக்கும் அவன் குரலுக்கும் நல்ல ஒற்றுமை என்று சின்னத்துரை நினைத்தான்.

"இல்லே.......ஹி......ஹி, வேலே விஷயமா..."

வாக்கியத்தை முடிக்காமல் அவன் பல்லேக் காட்டிக் கையைப் பிசைந்தான். அம்மாளின் கண்கள் மலர்ந்தன.

"'ஓ'...ராமையா அனுப்பினுனு?... ஏண்டாப்பா! டிபன் கிபன் எல்லாம் செய்வாயோ?"

இது யார் புதுசா ராமையா குறுக்கே விழுபவன் என்று ஒரு கணம் சலித்துக் கொண்ட சின்னுவுக்கு இந்தக் கேள்வி புதுமையிலும் புதுமையாக இருந்தது. என்றாலும், அம்மாள் தயவுதானே ஐயாவிடம் வேலே கேட்க வந்தவனுக்குப் பெரிய சிபாரிசுக் கடிதம்?

"ஓ...பேஷாகச் செய்வேன் மாமி.!"

"ம், உனக்குக் கல்யாணம் ஆகியிருக்கிறதோ?"

"இல்லே."

"வீட்டிலே யார் இருக்கிறார்கள்?"

"...தாயார்தான். தகப்பனூர் வெகு சிறு வயசில் போய் விட்டார். ஸாரிடம் அதுதான்..."

"ஸாரிடம் ஒன்றும் கேட்க வேண்டாம். இப்போதே போய் வேலேயை ஒப்புக் கொள். ஏண்டி பானு, இங்கே வா!" என்று அழைத்தாள் அந்த வீட்டு அம்மாள்.

சின்னத்துரைக்குக் கனவா நினேவா என்று புரியவில்லே. அம்மாளே இப்போதே போய் வேலேயை ஒப்புக்கொள் என்று சொல்கிறுளே? இவள் அதிகாரம் தானு அனேத்தும்?

"இந்தாடி பானு! கூப்பிட்டால் உடனே வருவது கிடையவே கிடையாதோ? எதையேனும் வாய் நிறையப் போட்டு அரைத்துக் கொண்டிருப்பாள். ஏண்டி, என்னடி பண்ணுகிறுய்?"

"இதோ வருகிறேன், மாமி..."

ஆகா! இந்தத் தேனுெத்த குரலுக்கு உடையவள் பானுதானு? விரிந்த மூக்குடன் உட்பக்கம் தலேயைத் திருப்பிக் கொண்டிருந்த திருமதி மார்க்கபந்து கொடுமையின் உருவமாக, அப்போது சின்னுவின் கண்களுக்குத் தோன்றினுள்.

"இதோ வந்து விட்டேன் மாமி!"

இத்தனே நேரமும் தோற்றமளித்த உலகமே மாறி விட்டது. சினிமாத்திரை இல்லேயே என்ற வியப்புடன் கண்களேக் கொட்டிக் கொண்டான் சின்னத்துரை.

கருகமணி, முரட்டுக் கறுப்புப் புடவை, கறுப்புச் சாந்துப் பொட்டு, கருவிழிகள், கருங் கூந்தல் எல்லாவற்றுக்கும் இத்தனே எழில் எப்படி வந்தது என்ற விளங்காத அதிசயத்துக்குள் அவன் மூழ்கி விட்டான்.

ஒட்டமாக வந்தவள் தன் நேரான பார்வையால் சின்னத்துரையின் உள்ளத்திலே ஒரு புரட்சிக்கு வித்திட்டு விட்டோம் என்பதையோ, இல்லே, அதிர்ச்சி காத்திருக்கிறது என்ற உண்மையையோ சற்றும் அறியாதவளாகச் செவ்விதழ்களிலே ஒரு சிரிப்பை மலர விட்டுக் கொண்டு, "என்ன மாமி!" என்றுள் கதவுக்குப் பின்னுலேயே நின்று கொண்டு.

"எப்போதும் என்ன சிரிப்பு வேண்டிக் கிடக்கிறது? போதும், நீ சம்பளத்தைக் கணக்குத் தீர்த்து வாங்கிக் கொண்டு போ! உனக்கும் நமக்கும் சரிப்படாதம்மா!..."

சின்னத்துரைக்குத் தலேயிலே பொத்தென்று யாரோ குறி பார்த்து அடித்த கல் வந்து தாக்கினுற் போல் இருந்தது. தனக்குக் கிடைத்திருக்கும் வேலேயைப் பற்றிப் புரிந்து விட்டது மட்டுமல்ல, அந்த இடியை அந்த மலர் இதயம் எப்படித் தாங்கும்?

அவன் அதிர்ச்சியில் உடலேக் குலுக்கிக் கொண்டான். ஆனுல் பானு மாய்ந்து விடவில்லே. அதே சிரிப்பு இதழ்களில் நெளிய, "சரி மாமி!" என்றுள் பானு.

'ஆமாம், இந்த 'ஈயச் செம்பி'னிடமிருந்து பானு விடுதலே பெறுவதும் சந்தோஷப்படவேண்டியசெய்தியல்லவா?' அந்த நிமிஷமே அந்த வேலேயைத் தான் ஏற்றுக் கொள்வதில் அவனுக்கு இருந்த தயக்கமெல்லாம் சென்ற இடந் தெரியாமல் மறைந்து விட்டது. அடுத்த கணமே அவன் உள்ளே செல்லத் தயாராக நின்றுன்.

"அடுப்பிலே என்ன வைத்திருக்கிறுய்?" என்று திருமதி மார்க்கபந்து பானுவை விசாரித்தாள்.

"வற்றல் குழம்புக்குத்தான் எல்லாம் எடுத்து வைத்தேன். பஜ்ஜி பண்ணி வைத்திருக்கிறேன்..."

"சரி, இப்படியே போ. இன்னும் பத்து நாட்களில் உன் சம்பள விவகாரமெல்லாம் தீர்த்துக் கொடுத்து விடச் சொல்கிறேன்!"

சின்னத்துரைக்கு நெற்றிக் கண்ணிருந்தால் அம்மாள் சாம்பற் குவியலாகியிருப்பாள். நல்லகாலம்; பிழைத்தாள்.

இரண்டு வருஷ காலம் வீட்டோடு வேலே செய்தவளுக்கு ஒரு சலுகை கிடையாது. அரை விநுடியில் சீட்டுக் கிழிக்கப்படுகிறது. பானு பாவம், எங்கே போவாள்? இவளிடம் சிறை இருந்ததை அதிர்ஷ்டம் என்று அளந்தாரே ஐயாசாமி! ம், அவருக்கு என்ன தெரியும் உலகம்? (தொடரும்)

✱ இந்தக் கதையில் வரும் ஒரு காட்சிதான் இந்த வார அட்டைச் சித்திரமாகத் திகழ்கிறது.

ரயில் பாதைகளில் நமது முன்னேற்றத்திற்கான ஏற்பாடுகள்



தொழிற்சாலைகளும், இயந்திரங்களும் உற்பத்தியை பெருக்கினால் மட்டும் போதாது. பிரயாணிகள், சாமான்கள் தயாரிப்பதற்கு வேண்டிய மூலப்பொருள்கள் மற்றும் தயாரிக்கப்பட்ட சாமான்கள் இவைகளை ஏற்றிச் செல்ல போக்குவரத்து சாதனங்களல்லவோ அவசியம். ஆதலால் தான் தொழில் முன்னேற்ற திட்டம் எனும் நமது இரண்டாவது ஐந்து வருட திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருக்கும் தொகையில் ஒரு ரூபாய்க்கு 3 அணாவிற்குக் குறைவில்லாமல் இந்திய ரெயில்வேக்களின் அபிவிருத்திக்காக செலவிடப்படும். இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ 900 கோடி. இதன் உதவியால் ரயில் பாதைகளையும், அதன் சம்பந்தப்பட்ட சாதனங்களையும் சீர்திருத்துவது மட்டுமல்லாது 842 மைல் நீள புதிய ரயில் பாதை போடுவதற்கும், 2258 நீராவி இன்ஜின்கள், 11364 பிரயாணிகளுக்கான ரயில் பெட்டிகள் மற்றும் 107,247 சாமான்கள் ஏற்றும் வாகன்கள் வாங்குவதற்கும் அத்துடன் பிரயாணிகளின் சௌகரியங்களும், ரெயில் சிப்பந்திகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதும் கவனிக்கப்படும்.

பர்மா-ஷெல் ஸ்தாபனத்தார் இந்திய ரெயில் வேக்களுக்கு ஏராளமான எண்ணெய் வழங்கி வருகிறார்கள். இந்திய ரெயில்வேக்களும் ஏராளமான பர்மா-ஷெல் எண்ணெயை ஏற்றிச் செல்கின்றன. அதாவது ஒரு வருடத்தில் ஏறக்குறைய 55 கோடி காலன் அளவு எண்ணெயை இந்தியாவின் பல்வேறு பாகங்களிலுள்ள, பட்டணங்கள், சிறு நகரங்கள் மற்றும் கிராமங்களுக்கு இந்திய ரெயில்வேக்கள் ஏற்றிச் செல்கின்றன. ரெயில்வேக்களும், எண்ணெய்த் தொழிலும் இரவும் பகலும் இடைவிடாது ஒன்றுக்கொன்று சேவை செய்து பணியாற்றி வருகின்றன.

பர்மா-ஷெல்... பாரத நாட்டின் வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கிறது

வத்தலகுண்டு—பழனிமார்க்கம். பழனிக்குப் போகும் பஸ்ஸில் டிரைவருக்குப் பக்கத்தில் இடம் கிடைத்துவிட்டது. பஸ் டிரைவரும் உற்சாகமுள்ள பேர்வழியாகக் காணப்பட்டார். உம்மணாமூஞ்சி இல்லை. கேட்ட கேள்விக்கெல்லாம் சளைக்காமல் பதில் சொல்வார். பேசாத நேரங்களில் அவர் வாய் ஏதாவது பாட்டை முனகிக் கொண்டிருக்கும். இப்படி இருப்பதால் பஸ்ஸை ஓட்டுவதில் ஒரு அலட்சிய பாவமில்லை. அவர் சொன்னபடி எல்லாம் பஸ் கேட்டுக் கொண்டுவந்தது. வேகமாகப் போவது எப்பொழுது. மெதுவாகச் செலுத்துவது எப்பொழுது என்பது அவர் கையில் இருந்தது. பஸ் போய்க்கொண்டிருந்தது. சட்டென்று உட்புறம் திரும்பிய டிரைவர் ''என்னப்பா, சித்தையன் கோட்டை யாராவது இறங்குகிறார்களா?'' என்று கேட்டார்.

''என்ன! டிரைவரய்யா! சித்தையன் கோட்டையா?'' என்றேன்.

''ஆமாம் சார்! அந்த ஊருக்குள் புகுந்து விட்டோம்'' என்றார்.

நான் சுற்றுமுற்றும் பார்த்தேன். எங்கும் ஒரே நிலப்பரப்பு. அதன் பெயருக்கேற்ப கோட்டையோ, கொத்தளமோ அல்லது அவை இருந்த சின்னங்களோ கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் காணவே இல்லை.

''இந்த ஊருக்கு அந்தப் பெயர் வழங்குவதற்குக் காரணம் என்ன?'' என்று டிரைவரைக் கேட்டேன். அவர் சிறிது நேரம் மௌனமாக இருந்து விட்டு என்னைப் பார்த்துப் புன்னகை புரிந்தார்.

''இந்த ஊருக்கு அந்தப் பெயர் எப்படி வந்தது என்று கேட்கிறீர்கள். வாஸ்தவம். நீங்கள் கேட்டதில் ஆச்சரியமில்லை. ஆனால் விஷயம் தெரிந்தால் கேட்டிருக்க மாட்டீர்கள். சொல்கிறேன். கேளுங்கள்'' என்று ஆரம்பித்தார் அவர்.

கார் ஓடிக் கொண்டிருந்தது. அவர் வாய் கதையைக் கூறத் தொடங்கியது.



''மதுரையை நாயக்கர்கள் ஆண்டுவந்த காலம். அப்பொழுது இந்த ஊரில் சித்தையன் என்ற ஒரு வீரன் வசித்து வந்தான். அவன் வீரன் என்றால் சாதாரண வீரனல்ல. அசகாயசூரன். யானை ஏற்றம், குதிரை யேற்றம், வாட்போர், வில்வித்தை, சிலம்பம் இவைகளில் அவன் அடைந்திருந்த திறமை சொல்லி முடியாது. இவனுடைய பிரதாபம் மதுரையில் சேனி நாயக்கர் என்ற பெரிய பிரபுவின் காதுகளுக்கு எட்டியது. சேனி நாயக்கர் பரம ரஸிகர். எங்கு வீரம் இருக்கிறதோ அதைப் பாராட்டத் தயங்க மாட்டார். பாராட்டுவதுடன் மட்டுமல்ல, வீரத்தைப் பாராட்டிச் சன்மானமும் செய்வது வழக்கம். முக்கியமாக, சித்தையனுடைய வில் வித்தையைப் பற்றி அவர் கேள்விப் பட்டிருந்தார். அவனை ஊரில் எல்லோரும் கலியுக அர்ச்சனன் என்று புகழ்ந்து சொல்வது உண்மையா என்று பரீட்சிக்க ஆசைப்பட்டார். இதற்கென்றே ஒரு பெரிய போட்டி ஏற்படுத்தி நாட்டின் நாலா பக்கங்களிலிருந்தும் வீரர்களை வரவழைத்தார். சித்தையனுக்கும் அழைப்பு வந்தது. அவனும் அழைப்பை ஏற்றுக் கொண்டு தன் சகாக்களுடன் மதுரைக்குப் புறப்பட்டான்.

இந்த வைபவத்துக்கென்று பெரிய மைதானத்தில் கூடாரங்கள் அடித்துப் பந்தல்கள் போட்டு அங்கு தகுந்த ஏற்பாடுகள் செய்திருந்தார்கள். போட்டி நடக்கும் நாளும்

நெருங்கியது. தேர்க் கூட்டம், இருநாள் கூட்டம். சேணி நாயக்கர் தலைமையில் போட்டி தொடங்கியது. அநேக விதமான விளையாட்டுகள் எல்லாம் நடந்தன. கடைசி நாள் வில் வித்தையில் பயிற்சி பெற்றவர்கள் பங்கெடுத்துக் கொண்டார்கள். அன்று போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு, சேணி நாயக்கர் தங்கத்தால் ஆன வீரச் சங்கிலி பரிசு வழங்க ஏற்பாடு செய்திருந்தார். அதுவும் சேணி நாயக்கரின் மகள் அலர்மேல் நாச்சியாரே வீரச் சங்கிலியைக் கையில் அணிவிப்பாள் என்று தெரிவிக்கப் பட்டது.

அலர்மேல் நாச்சியாரைப் பற்றி, ஒரு வார்த்தை சொல்ல வேண்டும். அவள் ஒரு தெய்வப் பிறவி. அவள் அழகுக்கு ஈடு இணை என்பது கிடையாது. மதுரைக் கோவில்களில் இருக்கும் சிற்பங்கள் சிலவற்றை, இவளைப் பார்த்து விட்டுத்தான் சிற்பிகள் செதுக்கி இருக்க வேண்டும் என்று கூறுவார்கள். தந்தத்திலிருந்து கடைந்து எடுத்தது போன்ற மேனியும், மலர் போன்ற கண்களும் முத்தைப் பழிக்கும் பற்களும், சிவந்த உதட்டின் மோகனச் சிரிப்பும் ''அலர்மேல் நாச்சியாரைப் பெற முடியாமல் ஏன் இந்தப் பிறவி எடுத்தோம்?'' என்று ஆடவர்கள் தவிக்கச் செய்தன. பெண்களோ ''நம் வர்க்கத்துக்கே திலகமாக விளங்கும் அலர்மேல் நாச்சியார் காலத்தில் பிறந்தோமே'' என்று பெருமிதம் அடைவார்கள். அப்படிப்பட்ட அலர்மேல் நாச்சியார் இந்தப் போட்டிக்குத் தலைமை வகித்துப் பரிசு வழங்குவாள் என்றல் வில், அம்பு எப்படி இருக்கும் என்று தெரியாதவன் கூட வில்லையும் அம்பையும் தூக்கிக் கொண்டு ஓடி வந்தான். ஆனால் என்ன பிரயோசனம்! சித்தையன் கைத் திறத்துக்கு இவர்கள் எம்மாத்திரம்?

போட்டி தொடங்கியது. சித்தையன் எல்லோரும் எதிர்பார்த்தது போல் வெற்றி பெற்றான். அவன் அலர்மேல் நாச்சியாரைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்தானே தவிர நேரில் பார்த்ததில்லை. அவனுடைய உற்சாகம் கரை புரண்டோடியது. ''ஆகா! ஆகா!'' என்று கூடியிருந்தோர் வியக்கும்படி அம்புகளை எய்தான். அன்று அவன் கடைசியாகச் செய்து காண்பித்த வித்தை எல்லோரையும் பிரமிக்கச் செய்தது. சித்தையனின் கண்கள் இரண்டையும் கட்டிவிட்டு அவன் கையில் வில்லையும் அம்பையும் கொடுத்தார்கள். எதிரே ஒரு மங்கை நின்றாள். அவள் மூக்கில் போட்டுக் கொண்டிருக்கும் மூக்குத்தியின் மூன்று முத்துக்களை மட்டும் தனித் தனியாக அந்த மங்கை நல்லாளுக்கு ஒருவித ஆபத்துமில்லாமல் கொய்து எறிந்தான். மூச்சு விடாமல் கவனித்துக் கொண்டிருந்தனர் சபையோர்கள். வித்தை முடிந்து சித்தையன் கண்கட்டை அவிழ்த்துச் சபைக்கு வணக்கம் தெரிவித்ததும் வான் பிளக்கும்படி அவர்கள் கரகோஷம் எழுப்பினார்கள். சித்தையனுக்கு வீரச் சங்கிலி அணிவிக்க ஏற்பாடு ஆயிற்று.

சேணி நாயக்கரே வீரனைத் தட்டிக் கொடுத்தார்; தழுவிக் கொண்டார். அவன் கையைப் பிடித்துக் கொண்டு அலர்மேல் நாச்சியாரிடம் அழைத்துச் சென்றார். முதன் முதலாக நேருக்கு நேர் அவ்வளவு சமீபமாக அவளைக் கண்ட சித்தையன் தன் சித்தம் இழந்தான். தன் கைகளால் அவன் மணிக்கட்டில் தங்கச் சங்கிலியைப் பூட்டினாள் அலர்மேல் நாச்சியார். அப்பொழுது அவள் விரல்கள் அவன் கையில் பட்டன. அந்த ஸ்பரிசத்தினால் அவன் உடல் நடுங்கியது. கனுவுக்குக் கனு ரோமங்கள் குத்திட்டு நின்றன. உடல் முழுவதும் ஒரு இன்ப மயமான சக்தி ஊடுருவிப் பாய்ந்தது. அவளைப் பார்த்த கண்கள் அப்படியே நிலைக்குத்தாக நின்று விட்டன. அவள் சங்கிலியை அவன் கையில் பூட்டிவிட்டு நகர்ந்தாள். பின்புதான் சித்தையன் சுய நினைவு அடைந்தான்.

அவனை ஒரு வெண்புரவி மீது ஏற்றினார்கள். மைதானத்தைச் சுற்றி ஊர்வலமாக அழைத்துச் சென்றார்கள். ஜனங்கள் புஷ்பங்களை வாரி அவன்மீது ஆரவாரத்துடன் சொரிந்தார்கள். இவைகளெல்லாம் குதிரைமீது உட்கார்ந்திருந்த சித்தையனுக்கு, ஏதோ கனவில் நடப்பது போல் இருந்ததே தவிர அவன் உயிர், உணர்வு எல்லாம் அலர்மேல் நாச்சியாரிடம் போய் அடைக்கலமாகி விட்டன.

இது முடிந்ததும் இரவு சேணி நாயக்கர் ஒரு பெரிய விருந்து ஏற்பாடு செய்திருந்தார். அதற்குப் போட்டியில் பங்கெடுத்துக் கொண்ட எல்லோருமே அழைக்கப்பட்டிருந்தார்கள். அலர்மேல் நாச்சியாரும் தன் தகப்பனார் பக்கத்தில் இருந்து கொண்டு சேடிகளுடன் விருந்தினர்களை உபசாரம் செய்து கொண்டிருந்தாள். விருந்து சாப்பிட வந்தவர்கள் இலையில் உள்ளவைகளை ருசித்து ருசித்துப் புசித்தார்கள். ஆனால் அன்றைய வீரன் சித்தையன் தன் கண்களால் அலர்மேல் நாச்சியாரின் சௌந்தரியத்தைப் பருகி ஆனந்த மடைந்தான்.

விருந்து முடிந்தது. அவரவர்கள் விடுதிக்குச் சென்றார்கள். சித்தையன் மட்டும் பிரதம விருந்தாளி ஆகையால் சேணி நாயக்கர் இல்லத்திலேயே தங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சித்தையன் போய்ப் படுத்தான். தூக்கம் வந்தால்தானே? தன் படுக்கை அறையில் அவன் கண்டது அலர்மேல் நாச்சியாரின் பிம்பம். கேட்டது அவள் குரலின் இனிமை. படுக்கையில் புரண்டான், எழுந்தான். குளிர்ந்த தண்ணீர் அருந்தினான். ஆனால் அவன் உடலில் அது ஒருவிதமான அனலைத்தான் எழுப்பியது. மறுபடியும் அவன் படுத்தான். கண்ணை மூடினான்.

மெதுவாக யாரோ கதவைத் தட்டும் சத்



தம் கேட்டு எழுந்து கதவைத் திறந்தான். என்ன ஆச்சரியம்! பரிமள கந்தத்துடன் அலர்மேல் நாச்சியார் எழுந்தருளி இருந்தாள்; அவன் கையைப் பற்றினாள். ஓட ஆரம்பித்தாள். இருவரும் ஓடினார்கள். தோட்டத்தில் உள்ள ஒரு சிறு குளத்தின் பக்கமாக ஒரு கொடி வீடு இருந்தது. அந்தக் கொடிகளின் இடைவழியாகப் பூரண சந்திரனின் கிரணங்களிலிருந்து பொழிந்தது வெளிச்சம். இரவின் அமைதியைக் கலைத்துக் கொண்டு சித்தையன் கேட்டான் :


"கண்ணே! உன் தகப்பனார் மகா பிரபு. அவர் எங்கே! நான் எங்கே! உன்னை ஒரு அற்ப வீரனான நான் அடைய முடியுமா? இது நிஜமாக நடக்கக்கூடியதுதானா?"

"மனமிருந்தால் வழியுண்டு" என்று பதில் அளித்தாள் அந்தக் குலக் கொடி.

"கண்ணே! மனம் இருக்கிறது. வழிதான் நீ சொல்ல வேண்டும்" என்றான்.

"உங்கள் ஊர் பக்கத்தில் மாரியம்மன் கோயில் ஒன்று உண்டு. அங்கு வருஷா வருஷம் திருவிழா ஒன்று நடக்கும். அப்பொழுது நான் அங்கு வருவேன். சாமர்த்தியமாக என்னைத் தூக்கிக் கொண்டு போய்விடுங்கள்" என்றாள் அலர்மேல் நாச்சியார்.

மாரியம்மன் விழா மிகக் குதூகலமாக ஆரம்பமாகி நடந்தது. ஆனால் அலர்மேல்



திரு எம். ஆர். ஜம்புநாதன் அவர்களின் அறுபது ஆண்டு நிறைவு நாளை முன்னிட்டுப் பம்பாய் தமிழர் மன்றத்தார் அவருக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்கள். திவான் பகதூர் கே. எம். ஜவேரி அவர்கள் தலைமை வகித்தார். தலைமையுரையில் "பம்பாய்க்கு முதன் முதல் வந்த தமிழர்களுள் திரு ஜம்புநாதன் மிகவும் சிறந்தவர். அப்போதிருந்தே பொது சேவையில் ஈடுபட்டுத் தம்மாலான தொண்டைச் செய்துள்ளார். மேலும் நுட்பமான வேத சாஸ்திரங்களைத் தமிழில் மொழிபெயர்ப்பது மிகவும் கடினமான வேலை. அதைத் திறம்படச் செய்திருப்பது ஒன்றே அவர் மேன்மைக்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும்" என்றார்.

திருவாளர்கள் மணிக்கொடி கு. சீனிவாசன், எஸ். நடராஜன், எஸ். நாகசுந்தரம் ஆகியோர் திரு ஜம்புநாதன் அவர்களைப் பாராட்டிப் பேசினர். திரு ஜம்புநாதன் தம்பதிகள் எல்லாம் வல்ல இறைவன் அருளால் நீடூழி வாழ வேண்டும் என்று பிரார்த்திக்கிறோம்.

நாச்சியார் வரவில்லை. தெப்ப உற்சவமும் வந்தது. ஏமாந்த சித்தையனின் மனம் கலவரமடைந்தது. தன் இதயராணிக்கு ஏதோ கஷ்டம் வந்திருக்க வேண்டும். ஆபத்தில் சிக்கி இருக்கிறாள் என்று மனம் கூறியது. குதிரைமேல் ஏறிக் கொண்டான். மதுரையை நோக்கி விரைந்தான். சேணிநாயக்கர் அரண்மனை போன்ற வீட்டை அடைந்தான். ஒருவருக்கும் தெரியாமல் தன் தேவியைத் தூக்கிக் கொண்டு போய்விட வேண்டும் என்று எண்ணினான்.

அவனுக்கு அவள் படுத்துக் கொண்டிருக்கும் அறை எது என்று தெரியும். இருட்டும் வரை காத்திருந்தான். ஒரு ஓலைச் சுருளில் "உன்னைத் தூக்கிப்போய் விடுகிறேன். என்னுடன் வருவதாக இருந்தால் சாளரத்தின் வழியாகக் குத்து விளக்கை வெளிச்சம் தெரியும்படி மூன்று தடவைகள் காண்பிக்க வேண்டும்" என்று எழுதி அம்பு முனையில் குத்திச் சாளரத்தின்மூலம் சரத்தை விட்டான்.

சிறிது நேரம் எங்கும் நிசப்தம். சாளரத்தில் வைத்த கண்களை வாங்கவில்லை. சிறிது நேரம் சென்றது. இவன் விரும்பியது போலவே சாளரத்தின் வழியாகக் குத்து விளக்கு வெளிச்சம் மூன்று முறை காட்டப்பட்டது. உற்சாகம் அடைந்த சித்தையன், குதிரையை அவள் அறையின் கீழ் உள்ள புதரில் கட்டினான். உடலில் ஒரு விவரிக்க முடியாத பலத்துடன் மேலே ஏறினான். அலர்மேல் நாச்சியார் அறைக்குள் 'தொப்' என்று குதித்தான்.

எங்கும் ஒரே இருட்டு. "தங்காய்! தங்காய்!" என்று கூறிக்கொண்டே உள்ளே நடந்தான். அவன் இரு கரங்களையும் யாரோ பிடித்தார்கள்! ஆனால் அது ஒரு பெண்ணின் நளினப் பிடியாக இல்லை. ஒரு இரும்புப் பிடி. ஒரு இடி போன்ற சிரிப்பு! சேணி நாயக்கரிடம் கைதியானான் சித்தையன்.

"சித்தையா! உன் சூழ்ச்சி தெரியும். வீரனாக உன்னை மதித்துச் செய்த பெருமைக்கு எனக்கு நல்ல பிரதி உபகாரம் செய்கிறாய்! உண்ட வீட்டுக்கு இரண்டகம் நினைக்கும் துரோகி! உன்னை என்ன செய்கிறேன் பார்!" என்று கர்ஜித்தார்.

தீர நெஞ்சம் கொண்ட வீரனான சித்தையன் கூட எதிர்பாராத விதமான அந்தக் கர்ஜனையைக் கேட்டதும் கொஞ்சம் கலங்கித்தான் போனான். மலரை யொத்த மென்மையான தளிர்க் கரங்களை எதிர்பார்த்துக் கொண்டிருந்த சித்தையனை, இரும்புக் கரங்களல்லவா தழுவின? ஆனால் இந்தத் திடீர்த் தாக்குதலினால் அவன் அப்படியே அயர்ந்து போய் நின்று விடவில்லை. ஒரு கண நேரத்துக்குள் சமாளித்துக் கொண்டான்.

வீரனல்லவா சித்தையன். "ஐயா! மன்னியுங்கள்! இரண்டு ஆத்மாக்களின் இதயங்களும் மனமும் ஒத்துப் போனால் குறுக்கே வந்து குட்டிச்சுவராக்குவது நியாயமா?"


"அது, சரி! சித்தையா! நீ ஒரு வீரன் என்பதைத் தவிர, என் குலமென்ன, என் பதவி என்ன! நீ என் அருமைக் குமாரியைத் திருமணம் செய்து கொள்ள உன் வில்வித்தை மட்டும் போதுமா? யோசித்துப் பார். நாடோடியான நீ எந்தத் தைரியத்துடன்



ஆ!
மார்ட்டன்



ப்ளூ
செனித்
ப்ளேடுகள்


ஷோக்கான காட்சியளிக்க ஸ்போர்ட் ஷர்ட்டுகள்
பின்னியின் காட்ஸ்வால் துணியில் தையுங்கள்
இலேசானதும், மிருதுவானதும், அணிவதற்குச் சுகமானதுமான பின்னியின் காட்ஸ்வாலைச் செய்த ஷர்ட்டுகள் அணிந்து ஷோக்கான தோற்றமளியுங்கள். காட்ஸ்வால் என்பது பருத்தி மற்றும் ரோமமும் கலந்து செய்த துணியாகும். அது சீதோஷ்ண மாறுதல்கள் சருமத்தை பாதிக்காமல் காக்கும். அதை வீட்டிலேயே சுத்தம் செய்யலாம்—அது சுருங்காது என்ற உத்தரவாதமுள்ளது.
கவர்ச்சிகரமான கட்டங்கள் மற்றும் வர்ணபேதங்கள் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட டிஸைன்கள் காட்ஸ்வாலில் உள்ளன. அவைகளை உங்களுக்குப் பிடித்தமான கடையில் இன்றே பார்வையிடுங்கள்!
குளிர்கால உடைகள், பின்னியின் அங்கோரா துணியில் தையுங்கள்
வேண்டிய அளவு அதிக பருமன் உள்ள இந்த பருத்தி ரோமக் கலப்புத்துணி குளிர்காலத்திற்கு மிகவும் சிறந்தது. மனங்கவரும் வர்ண பேதங்கள் பல உள்ளன.
ப்ளெயின் நிறங்கள் 29/30"—கெஜம் ரூ. 3/10
பைஜாமா கோடுகள் 29/30"—கெஜம் ரூ. 3/10
ப்ளெயின் நிறங்கள் 35/36"—கெஜம் ரூ. 4/5
ப்ளெய்டுகள் 29/30"—கெஜம் .. ரூ. 4/4
செக் 29/30"—கெஜம் .. ரூ. 4/1
விற்பனை ஏகப்பிரதிநிதிகள்
தி பெங்களூர் உல்லன், காட்டன் அண்ட் ஸில்க் மில்ஸ் கம்பெனி லிமிடெட்
ஏஜெண்டுகள், செகரடரீஸ் அண்ட் ட்ரெஷரர்ஸ்: பின்னி அண்ட் கம்பெனி (மதராஸ்) லிமிடெட்

இப்படிச் செய்யத் துணிந்தாய்!'' என்று கோபத்துடன் கேட்டார் சேனி நாயக்கர்.

''இதற்குத் துணிவு என்ன, நாயக்கரே! நான் அப்படி வாழ்வில் முன்னேற நீங்கள் ஒரு வீரனுக்கு உபகாரம் செய்ய முடியாமலா போய்விடும்? என்னைத் தூக்கி விட்டு உங்கள் மகளையும் எனக்குக் கொடுத்து எங்கள் வாழ்வை விளங்க வைக்கும் பிரபுவாக விளங்கக்கூடாதா?'' என்றான் சித்தையன்.

''சரியாகச் சொன்னாய், தம்பி! உனக்கு வெட்கமில்லை? நான் உன்னைத் தூக்கி விடும் நிலைமையை வீரனை நீ விரும்புகிறாயா? என்ன பேடித்தனம்! சொல்கிறேன், கேள்! நீ உன் ஊருக்குப் போ! உனக்கு அவகாசம் கொடுக்கிறேன். உன் சொந்த முயற்சியால் உன்னை நீயே உயர்த்திக் கொண்டு ஒரு நல்ல நிலைமைக்கு வந்தபின் நேரில் வந்து என் மகளைக் கேள். பிறகு பார்க்கலாம், ஓடு!'' என்றார் நாயக்கர்.

வந்த வழியே திரும்பினான் சித்தையன். ஊர் திரும்பினான். சிந்தித்தான். எப்படியும் அழகி அலர்மேல் நாச்சியாரை மணந்தே தீருவது என்ற முடிவுக்கு வந்தான்: நாய்க்கரிடம் தலை குனிய நேரிட்ட அவமானம் அப்பொழுது தான் தன்னை விட்டு நீங்கிப் போகும் என்று அவன் உள்ளத்தில் எழுந்த உறுதிக்கு உரமிடுவது போல் அமைந்தது அலர்மேல் நாச்சியாரிடம் அவன் கொண்டிருந்த பிரேமை. ஆனால் இது பற்றி யாரிடமும் சொல்லவில்லை. மனத்தில் ஒரு உறுதி ஏற்பட்டது. அவன் என்ன செய்தான் என்று மட்டும் யாருக்கும் தெரியாது. திடீரென்று ஒரு நாள் சேனி நாயக்கர் முன்வந்து நின்றான் சித்தையன்.

''என்ன வீர சிகாமணியே! எங்கு வந்தாய்?'' என்றார்.

''பிரபு! நீங்கள் கட்டளை இட்டதுபோல் நான் என் நிலையை உயர்த்தப் பாடுபட்டு வெற்றி அடைந்து விட்டேன். வந்து பாருங்கள்'' என்றான்.

நாயக்கர் ஆச்சரியத்துடன் கிளம்பினார். சித்தையன் இருக்குமிடம் வந்தார். என்ன ஏமாற்றம்? எங்கும் ஒரே நிலப்பரப்பு; ஜீவகளையே இல்லை.

''என்ன சித்தையா, விளையாடுகிறாயா!'' என்று கனல் தெறிக்கக் கேட்டார் சேனி நாயக்கர்.

''இல்லை, பிரபு!'' என்று அவரை அழைத்துக்கொண்டு அங்கு தனித்துநின்ற சிறு கோயிலுக்குள் சென்றான். அங்கிருந்து ஒரு படிக்கட்டு வழியாகக் கீழே இறங்கிச் சென்றார்கள். அடாடா! அங்கு ஒரு சிறு நகரமே நிர்மாணித்திருந்தான் சித்தையன். கோட்டை என்ன, கொத்தளமென்ன, ஒவ்வொன்றாகக் காட்டினான் சித்தையன் சேனி நாயுக்கருக்கு'' என்று கூறி நிறுத்தினார் டிரைவர்.

* * *

''அது சரி! அப்படி ஒரு பாதாளக் கோட்டை இருந்திருந்தால் அவைகளின் சின்னங்கள் கூடவா கிடையாது. இந்த ஊரில்?'' என்று கேட்டேன்.



திரு எஸ். குஞ்சிதபாதம் பிள்ளை அவர்கள் முப்பது ஆண்டுகள் குத்தாலம் கழக உயர்நிலைப் பள்ளியில் அரிய ஆசிரியப் பணியாற்றி விட்டுச் சமீபத்தில் ஓய்வு பெற்றார். அவரிடம் பயின்ற மாணவர்கள் சென்ற 6-11-56 அன்று அவரது அரிய சேவையைப் பாராட்டி ஒரு விழா நடத்தினார்கள். அவ் விழாவில் அவருக்குச் சீர்காழி சி. முத்தையா பிள்ளை எம். எல். ஏ. அவர்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவித்த காட்சியை மேலே காணலாம்.

''என்ன சார்! கதையை முழுக்கக் கேட்காமல் 'சின்னம் சின்னம்' என்று பிராணனை விடுகிறீர்களே! கோட்டை இருந்தால்தானே சின்னங்கள் இருக்கும்? நான் இதுவரை சொன்னது சித்தையன் என்பவன் விருந்து சாப்பிட்டு விட்டு நாயக்கர் வீட்டில் படுத்துத் தூங்கியதும் கண்ட கனவுகள். கோட்டை அவன் கனவில் கட்டிய மனக்கோட்டை தான்! நீங்கள் இடித்த கோட்டையைப் பற்றியே கேட்கிறீர்கள். அது எங்கு இருக்கிறதோ எனக்குத் தெரியாது'' என்று கூறி விட்டு, பஸ்ஸை முனிசிபல் பஸ் ஸ்டாண்டில் 'திடும்' என்று 'பிரேக்' போட்டு நிறுத்தி என்னைக் குலுங்க வைத்தார்.

என் கூட வந்தவர்களும், ''என்ன டிரைவர் இவர்? 'தொண தொண' என்று பேசிக்கொண்டே வந்து திடீர் என்று பிரேக் போடுகிறீரே!'' என்றார்கள்.

நான் பஸ்ஸிலிருந்து இறங்கு முன், ''டிரைவர் ஐயா! கதாசிரியர்கள் எல்லாம் உம்மிடம் கற்பனைக்குப் பிச்சை வாங்க வேண்டும்!'' என்று கூறினேன்.

அவரும், '' ஏன் சார்! வத்தலகுண்டிலிருந்து பழனி வரையில் பொழுது போக வேண்டாமா?'' என்று கூறிக் கொண்டே ஒரு கப் காப்பியை நாடி ஓட்டலை நோக்கி வேகமாக நடந்தார்.



யாருக்கு வாழ்வு?

டாக்டர் தமயந்தி சாப்பிட்டு விட்டு மாடிக்குப் போனவள் படுத்துக் கொள்ளப் பிடிக்காமல் மாடி வராந்தாவில் நாற்காலியை இழுத்துப் போட்டு உட்கார்ந்து வெளியே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள்.

இரவு ஒன்பது மணி. தெருவில் கலகலவென்று ஜன நடமாட்டம் இருந்து கொண்டிருந்தது. அதுவும் அன்று கார்த்திகை ஆகையால ஒவ்வொருவீட்டிலும் விளக்குகள் அலங்காரமாக வைத்துத் தெருவே ஜகஜ்ஜோதியாய் விளங்கிற்று. பெண்களும் குழந்தைகளும் புத்தம் புதிய ஆடைகள் அணிந்து தாம்பூலம் வாங்கிக் கொண்டு வருவோரும் போவோருமாகத் தெரு நிறைந்து இருந்தது.

கன்னத்தில் கை வைத்துக் கொண்டு எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்த தமயந்தி தன்னையறியாமல் பெருமூச்சு விட்டவாறு தன் வீட்டையும் ஒரு முறை பார்த்தாள். இரண்டொரு அகல் விளக்குகள் 'மினுக், மினுக்' என்று எரிந்து கொண்டிருந்தன. அந்த இரண்டொரு விளக்குகள் கூடத் தமயந்தியின் விருப்பத்துக்கு மாறாகச் சமையற்காரி விசாலமாக ஏற்றி வைத்தவை.


தமயந்திக்கு உலகமே தன்னைத் தவிர ஒரே குதூகலமாக இருப்பதாகப் பிரமை. என்ன படித்து, பட்டம் பெற்று நகரத்திலே கைராசியான டாக்டர்எனப்பெயர் வாங்கியிருந்த போதிலும் அப்போதைய அவளுடைய மன

ராமப்பிரியா

நிலை 'தான் வெறும் சாதாரணப் பெண் தான்' என்று பறைசாற்றியது.

தன்னுடைய கடந்த கால வாழ்க்கையை, அதில் பளிச்சென்று ஒரு மின்னல் தோன்றி மறைந்ததை நினைத்து அவள் சோர்ந்து போய் உட்கார்ந்திருந்தாள்.

துறுதுறு வென்று இருக்கும் கருவிழிகளையும் செந்நிற மேனியையும் நல்ல வாளிப்பான உடற்கட்டையும் கொண்ட தமயந்திக்கு முப்பத்தெட்டு வயதாகிறது என்ற உண்மையை ஒருவரும் ஒப்புக்கொள்ள மாட்



டார்கள். இளமை அவளை விட்டுக் கொஞ்சம் கூட அகலாமல் அவளை அப்படியே இறுக அணைத்துக் கொண்டிருந்தது.

இரண்டு நாட்களாக அவள் மனம் ஒரு நிலையில் இல்லாமல் அவளுடைய மனவெழுச்சிகளையெல்லாம் கிளறிவிட்டுச் சஞ்சல மடைந்தது. அதற்குக் காரணம் கடந்த கால நினைவுகள் தான்.

தமயந்தி வழக்கம்போல் ஆஸ்பத்திரியிலிருந்து வந்து ஸ்நானம் செய்து உடைகளை மாற்றிக்கொண்டு சாப்பிட உட்கார்ந்தாள். சமையற்காரி விசாலம் பரிமாறினாள்.

தமயந்தியின் வாழ்க்கையே ஒரு கதையாகப் போய்விட்டது. தமயந்திக்குப் பதினாறு வயது. கல்யாணமாகி இரண்டு வருஷங்கள் இருக்கும். அவள் கணவன் மூர்த்தி நல்ல அழகன். குடும்பத்துக்கு மூத்த பையன். அவனுக்கு அடுத்தாற்போல மூன்று பையன்கள் இருந்தார்கள். மூர்த்திக்குத் தாய்தந்தை இருவரும் கிடையாது. அந்த மூன்று குழந்தைகளையும் தமயந்தி தன்கூடப் பிறந்தவர்களைப் போலவே நேசித்தாள்.

ஒருநாள் தமயந்தியின் அத்தான் ஊரிலிருந்து வந்திருந்தான். மூர்த்தி வீட்டில் இல்லை. தமயந்தி தன் வீட்டுக்கு வந்திருக்கும் அதிதி என்பதற்கேற்ப அத்தானை உபசரித்தாள்; சாப்பாடு போட்டாள். அவனுடன் சிரித்துப் பேசினாள். அவன் போகும் போது மூர்த்தியின் தம்பியிடம், "தம்பி! நான் போய் வருகிறேன். உங்கள் அண்ணாவைப் பார்க்க முடியவில்லை. அண்ணாவிடம் நான் ரொம்பக் கேட்டதாகச் சொல்லு!" என்று கூறிச் சென்றான். மூர்த்தியின் கடைசித் தம்பி, "ஏன் மாமா! நீங்கள் மன்னிக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டான்.

"நான் உன் மன்னிக்குச் சொந்த அத்தானாக்கும்! அவள் என்னைத்தான் கலியாணம் செய்து கொள்ள வேண்டியவள். ஏதோ ஜாதகம் சரியில்லாததால் நின்று போய் விட்டது. உன் அண்ணா தட்டிக்கொண்டு போய் விட்டார்!" என்று சொல்லிவிட்டுப் போய் விட்டான் அவன்.

மூர்த்தி வந்ததும் வராததுமாக அவனுடைய கடைசித் தம்பி, "அண்ணா, நம்ப மன்னியைக் கல்யாணம் பண்ணிக்க வேண்டியவர் இங்கே வந்திருந்தாரே! அவர் எவ்வளவு வேடிக்கை வேடிக்கையாகப் பேசினார் தெரியுமா? மன்னிகூட இன்றைக்கு விழுந்து விழுந்து சிரித்தாள்!" என்றான் சிறிதும் கபடமில்லாமல்.

மூர்த்திக்கு நன்றாகச் சந்தேகம் வந்து விட்டது. தமயந்தியைச் சொல்லாலேயே கொன்றான். அவள் கண்ணீரும் கம்பலையுமாக, "நிசமாக ஒரு வித்தியாசத்துடன் நான் அவரிடம் பழகவே இல்லை. ஒரு பெண்ணென்று பிறந்தால் நாலுபேருக்கு ஜாதகம் கொடுத்துப் பார்க்க மாட்டார்களா? என்னை நம்புங்கள்!" என்று கதறி அழுதாள்.

"அப்படி நீ உத்தமியாயிருந்தால் நான் வரும் வரையில் அவனை இருக்கச் சொல்கிறது தானே! வெறும் பாசாங்குக்காரி!" என்று அவளை அடித்துத் துன்புறுத்திப் பிறந்த வீட்டுக்கு அனுப்பி விட்டான்.

"அப்படிப்பட்ட கயவனோடு வாழ வேண்டாம்" என்று அவள் பெற்றோர்களும் அவளை டாக்டருக்குப் படிக்க வைத்தார்கள்.

பிறகு எல்லாம் வெகு வேகமாக நடந்தது. தன் பெண் வாழாவெட்டியாக இருக்கிறாள் என்பதே நோயாக அரித்து ஒருவர்பின் ஒருவராக, தமயந்தியின் பெற்றோர்கள் இறந்து விட்டார்கள். அவர்களிடமிருந்த விசாலம் தமயந்தியிடம் நிரந்தரமாக வந்து விட்டாள்.

தமயந்தியின் உழைப்பும் சாமர்த்தியமும் புகழைத் தேடிக் கொடுத்தன. புகழ் பொருளைச் சேர்க்க வாய்ப்பை அளித்தது

இவைகளினால் மட்டும் ஒரு பெண்ணின் மனம் திருப்தியாகி விடுமா! தமயந்தியும் ஒரு பெண்தானே! மூர்த்தி அவளிடம் கடுமையாய் நடந்து கொண்டு வாழ்க்கையையே பாழாக்கினதை நினைத்து நினைத்து நெஞ்சம் புழுங்கினாள். யாரை அடியோடு நினைக்கக் கூடாது என்று பாடுபட்டுத் தனியாகத் தன் கையால் சம்பாதித்து, சாப்பிட வைராக்கியம் வைத்தாளோ, அந்த மனிதன் மூர்த்தியின் உருவம் அடிக்கடி அவள் நினைவில் வந்து அவளைச் சித்திரவதைக்குள்ளாக்கியது. என்றோ

சில வருஷங்கள் அவனிடம் அனுபவித்த இன்பங்கள் அவள் மனத்தில் கரீரென்று வலிக்கும். எந்த விதத்தில் தன்னிடம் சந்தேகப்பட்டான் என்பதை நினைக்க நினைக்க அவள் அங்கம் அப்படியே எரியும். மூர்த்தியின் நினைவால் அவள் அணு அணுவாகச் சித்திர வதைக்கு உட்பட்டாள்.

'மூர்த்தியும் ஒருநாள் நம்மிடம் வருவாரோ! சே! என்ன எண்ணம்! வந்தால்தான் இனி அவருடன் சேர்ந்து இருக்க முடியுமா?' வைத்தியக்கார யோசனைகளுக்கு முற்றுப் புள்ளி வைத்துவிட்டுப் படுக்கச் சென்றாள். வெளியே இடியும் மின்னலும் பிரமாதமான மழைக்கு அடி போட்டுக் கொண்டிருந்தன.

தினமும் இரவு படுக்கையில் படுத்தால் நிம்மதியான தூக்கம் கிடையாது. அந்த வீட்டில் கடந்த இருபது வருடங்களாகத் தமயந்தியும் விசாலமும் இரு வாழாவெட்டிகளாகக் காலம் கழித்து வந்திருக்கிறார்கள்.

'மூர்த்தி ஒரு நாள் தன்னைத் தேடி வந்தால் ஏற்றுக் கொள்வதா வேண்டாமா? சே! இதென்ன புது விநோசாக மனம் எண்ணுகிறது? அக்காரியம் இந்த ஜன்மத்தில் நடக்காது. மூர்த்திக்கு இப்போது பெரிய வேலையாயிருப்பதாகவும், அவருக்குக் கலியாணமாகி நாலைந்து குழந்தைகள் இருப்பதாகவும்கூட யாரோ சொன்னார்களே!

அவளுடைய பெண்மை கணவனுக்காக ஒவ்வொரு நிமிஷமும் ஏங்கியது. ஆனால் அவளுடைய படிப்பும், இயற்கையிலேயே உண்டான அகம்பாவமும் அந்த ஏக்கத்தை இலேசாக மறைத்தன. பத்துப் பதினைந்து நாட்களாக இதே மாதிரி தீராத வேதனையும் சஞ்சலமும் அனுபவித்துக் கொண்டிருந்தாள் தமயந்தி.

ஒரு நாள் காலை தமயந்திக்கு எழுந்திருக்கும்போதே இரவு முழுதும் தூக்கம் வராமல் சிரமப்பட்ட அயாசம் அவள் முகத்தில் தெரிந்தது. காலையில் வழக்கம் போல் தமயந்தி ஆஸ்பத்திரி சென்று இயந்திரம் போல் வேலைகளில் ஈடுபட்டாள்.

வீட்டுக்குப் புறப்படும் சமயம், தன் அறையில் உட்கார்ந்து கொண்டு அன்றைய தினத்தில் வந்த நோயாளிகளைப் பற்றிய குறிப்புகளை எடுத்துக் கொண்டிருந்தாள். அறைக் கதவை யாரோ இலேசாகத் தட்டுவது கேட்டது. உள்ளே வரலாமா என்று கேட்கும் அர்த்தம் என்பதைப் புரிந்து கொண்டு, "வாருங்கள்!" என்றாள்.

இருபத்தைந்து வயது வாலிபன் புன்முறுவலுடன் கை கூப்பியவாறு நின்று கொண்டிருந்தான். அவனைப் பார்த்ததும் தமயந்தி ஒரு கணம் திடுக்கிட்டு விட்டாள். இதயம் அப்படியே நின்றுவிடும்போல் ஆகிவிட்டது.

தமயந்திக்கு அவனைப் பார்த்ததும் அப்படியே உடலெங்கும் வியர்த்துப் போய் விட்டது. தேகம் முழுதும் மின்சாரம் பாய்வது போன்ற உணர்ச்சி! அதே உடலமைப்பு. அதே உயரம்! சிரிக்கும்போது கன்னம் அழகாகக் குழியுமே அந்தக் குழியும். இதோ? யார் அது! மூர்த்தியா எதிரில் நிற்பது! இருக்கவே இருக்காது! இருபது வருஷங்களுக்கு முன் மூர்த்தி இருந்த மாதிரி இருக்கிறான். இப்போது மூர்த்திக்கு நாற்பத்தைந்து வயது இருக்க வேண்டுமே!

மெதுவாகத் தன்னைச் சமாளித்துக்கொண்டு தன்னுடைய படபடப்பை எல்லாம் அடக்கிக் கொண்டு, "நமஸ்காரம்! உட்காருங்கள்! யார் நீங்கள்? என்ன வேண்டும்?" என்றாள்.

அவன் அடக்கத்தோடு ஒருக்களித்தவாறு நாற்காலியில் நன்றாக உட்காராமல் உட்கார்ந்தான். அவனையே விழுங்குவதுபோல் பார்த்துக் கொண்டிருந்தாள் தமயந்தி.

"உங்கள் வார்டில் என் மனைவியை 'அட்மிட்' செய்திருக்கிறேன். இது தலைப் பிரசவம். நீங்கள்தான் பிரத்தியேகமாகக் கவனித்துக் கொள்ள வேண்டும். அவள் பெயர் கோகிலா. படுக்கை எண் பதினேழு!"

"உங்கள் பெயர்!" என்று கேட்டாள் தமயந்தி ஆவலை அடக்க மாட்டாமல்.

"கிருஷ்ணமூர்த்தி!" என்றான் பளிச்சென்று. தமயந்திக்கு ஞாபகம் வந்துவிட்டது. மூர்த்தியின் கடைசித் தம்பி! யார் அவள் மீது சந்தேகம் ஏற்படும்படி செய்து வாழ்க்கையையே குட்டிச்சுவராக்கி விட்டானோ, அவன்தான் அவள் எதிரில் அவளுடைய தயவுக்குக் காத்துக் கொண்டிருக்கிறான்.

"இதுதான் உங்கள் சொந்த ஊரா?"

"அண்ணா வடக்கே வேலையாயிருந்து இந்த ஊருக்கு மாற்றலாகி இப்போது வந்திருக்கிறார். நான் ஆந்திராவில் உத்தியோகத்தில் இருக்கிறேன். வைத்திய வசதிக்காக அண்ணாவிடம் வந்திருக்கிறோம்!" என்றான்.

"உங்கள் அண்ணா பெயர் என்ன? என்ன வேலை அவருக்கு!" என்றாள். அவனுக்கு



ஒரே ஆச்சரியமாகப் போய்விட்டது. தான் வந்த காரியத்தைக் கவனிக்காமல் எத்தனை கேள்விகள் கேட்டு, குலம் கோத்திரமெல்லாம் விசாரிக்கிறாளே என்று நினைத்தான்.

"அண்ணா பெயர் சத்தியமூர்த்தி! இந்த ஊரில் டிபுடி கலெக்டராக இருக்கிறார். அண்ணாவுக்கு நான்கு குழந்தைகள். நாங்கள் தெற்குத் தெருவில் பத்தாம் நம்பர் வீட்டில் இருக்கிறோம்!" என்று மள மளவென்று அவள் கேட்காத கேள்விகளுக்கும் பதில் சொன்னான். தமயந்திக்குச் சிரிப்பு வந்தது.


தாமரையின் அழகை நீங்களும் பெறலாம் . .
நேர்த்தியாயும், மிருதுவாயும், பட்டின் மென்மையுடன் கூடிய
எழிலைப் பெற இந்திய மங்கையர்கள் ஆஷா
முகப் பவுடரை உபயோகிக்கிறார்கள்.
உங்கள் விலைக்குகந்த
உங்களுக்குரிய பவுடர்
Asha
ஆஷா முகப் பவுடர்
Asha
FACE POWDER
விநியோகஸ்தர்கள்:
ஜ்யாப்ரே மானேர்ஸ் அண்ட் கோ ப்ரைவேட் லிட்.,
பம்பாய்—கல்கத்தா—டில்லி—மதராஸ்.



சென்னையில் சென்ற ஒன்பது ஆண்டுகளாகச் சங்கீதக் கலைக்கு அரும் பணி புரிந்து வரும் பாரதி சங்கீத வித்தியாலயத்தின் ஒன்பதாவது ஆண்டு விழா சமீபத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவுக்குச் சென்னை ரேடியோ நிலையத்தின் டைரக்டர் டாக்டர் வி. கே. நாராயண மேனன் தலைமை வகித்தார். வித்தியாலய மாணவ மாணவிகள் ''ஸ்ரீ ஆண்டாள்'' என்னும் நாடகத்தைச் சிறப்பாக நடித்தனர்.

'கிட்டா அன்றைய மாதிரியாகவே கல கலவென்று பேசிக் கொண்டும் படுசுட்டியாகவுந்தான் இருக்கிறான்' என்று மனத்தில் நினைத்துக் கொண்டாள்.

''சரி! நான் கவனித்துக் கொள்கிறேன்!'' என்று அவனை அனுப்பிவிட்டுக் கோகிலா படுத்திருந்த வார்டுக்குப் போய் அவளைப் பார்த்துவிட்டு, அவளிடமும் மூர்த்தியின் குடும்பத்தைப் பற்றிச் சாதுர்யமாக எல்லாவற்றையும் கேட்டுத் தெரிந்து கொண்டாள்.

அவள் கணவன் மூர்த்தி கை நிறையச் சம்பாதிக்கிறான். இரண்டு பெண்களும், இரண்டு பிள்ளைகளும் அவன் குழந்தைகள். அவன் மனைவி ரொம்ப நல்லவள். இதுதான் கோகிலா சொன்னதின் சாராம்சம்.

தமயந்தி வீட்டுக்குத் திரும்பினாள். மனசு ஒரே பாரமாக இருந்தது. தலை கனத்தது.

நாட்கள் மெதுவாக ஊர்ந்தன. கோகிலாவுக்குப் பிள்ளைக் குழந்தை பிறந்தது. அவளையும் குழந்தையையும் வீட்டுக்கு அனுப்பும் நாளும் வந்தது.

கோகிலாவும் கிட்டாவும் தமயந்தியைப் புண்யாவசனத்துக்கு வரும்படி வெகுவாக வேண்டினார்கள்.

தமயந்தி தான் வேறொருநாள் வருவதாகத் தட்டிக் கழித்து விட்டாள்.

மேலும் ஒரு வாரம் சென்றது. ஒரு நாள் இரவு அவளுக்குத் தூக்கமே வரவில்லை. கணவனை ஒரு முறையாவது பார்க்கவேண்டும் என்று ஒருவித ஏக்கம் அவளை அரித்தது. மறுநாள் காலையில் எப்படியும் அவன் வீட்டுக்குப் போக வேண்டும் என்று அவள் நினைத்துக் கொண்டாள்.

காலையில் எழுந்ததும் ஒன்பது மணி சுமாருக்கு ஆஸ்பத்திரிக்கு லீவு போட்டுவிட்டு மூர்த்தியின் வீட்டுக்குப் புறப்பட்டாள். போகும்போதுதான் மனத்தில் எத்தனை ஊசலாட்டம் ஊஞ்சல்! கணவனை இத்தனை வருஷங்களுக்குப் பிறகு நேருக்கு நேர் கண்டு விட்டால் என்ன செய்வது? ''ஹல்லோ!'' என்று தான் படித்துப் பட்டம் பெற்றவள் என்பதைக் காட்டி அகம்பாவத்தோடு சவால் விடுவதா? அல்லது பழங்காலக் 'கட்டுப் பெட்டி' மாதிரி அவன் காலில் விழுந்து, ''நான் உங்கள் முதல் மனைவி செல்லம்மா. உண்மையில் நான் ஒரு தப்பும் செய்யவில்லை. என்னை வேலைக்காரியாக வேணும் ஏற்றுக் கொள்ளுங்கள்!'' என்று கதறிக் கண்ணீர் விடுவதா? என்று குழம்பித் தவித்துக் கொண்டே நடந்தாள்.

மறுகணமே அந்தப் பாழும் மனத்தில் அருவருக்கத்தக்க விதமான ஒரு திருப்பம்!

'ஏன்! அவரிடம் போய் நான் கெஞ்சவானேன்? காலில் விழுவானேன்? என் உரிமையை நான் நிலைநாட்டி அன்று களங்கமில்லாத என்னைப் பழிச் சொல் சொல்லி என் வாழ்க்கையையே வீணாக்கினதற்குப் பழிக்குப் பழி வாங்குகிறேன். அந்த வீட்டில் தைரியமாகப் போய் உட்கார்ந்து கொள்கிறேன். என்னுடைய ஸ்தானத்தில் இன்னொருத்தி எப்படி வாழ முடியும் என்பதைப் பார்த்து விடுகிறேன்' என்று மனத்தில் குமுறிய வண்ணம் மூர்த்தியின் வீட்டுக் கதவைத் தமயந்தி தட்டினாள்.

கதவைத் திறந்தவளுக்கு ஏறக்குறைய, தமயந்தியின் வயது தான் இருக்கும். ஆனால் வயதானவள் மாதிரி தளர்ந்து போயிருந்தது உடல். நெற்றி நிறையக் குங்குமமும் வாய் நிறைய வெற்றிலையுமாக மகாலக்ஷ்மி மாதிரி இருந்தாள். அவள்தான் மூர்த்தியின் மனைவி, தன் ஸ்தானத்துக்குப் போட்டியாக வந்திருப்பவள் என்பதை ஒருவாறு ஊகித்துக் கொண்டாள் தமயந்தி.

மூர்த்தியின் இரண்டாவது மனைவி சாந்தா தமயந்தியை ஆவலோடு வரவேற்றாள். கோகிலாவுக்குப் பிரசவம் பார்த்த டாக்டர் என்ற மரியாதையோடு அவளுக்கு ஓடி ஓடி உபசரித்தாள். கிட்டாவும் கோகிலாவும் மிகவும் அன்போடு வரவேற்றார்கள். சாந்தாவின் பெண் மூர்த்தியின் சாயலை அப்படியே உரித்து வைத்துத் தங்கச் சிலையாக ஒருபுறம் வணக்கமாக நின்று கொண்டிருந்தாள். தனக்குப் பிறந்திருக்க வேண்டிய குழந்தை என்ற பொறாமை எண்ணம் தமயந்தியின் மனதில் ஒரு ஓரத்தில் எழுந்தது.

சாந்தா மட்டற்ற அன்போடு தமயந்திக்குக் காப்பி, பலகாரம் வழங்கினாள். அவள் இனிக்க இனிக்கப் பேசினாள்.

புயலாகச் சீறி விழுந்து தன் உரிமைக்குப் போராட வேண்டும், அந்தக் குடும்பத்தை

மனங் கொண்ட மட்டும் சபிக்க வேண்டுமென்று ஆவேசத்தோடு வந்த தமயந்தி சாந்தாவின் இனிய சாந்த குணத்தையும் அன்போடு உபசரிக்கும் தன்மையையும் கண்டு பெட்டிப் பாம்பாக அடங்கிப் போய் உட்கார்ந்து விட்டாள்.

தன்னைப் பற்றி அவளுக்குத்தெரியுமா என்று சாந்தாவைக் கேட்க வேண்டுமென்று ஒரு அசட்டு ஆசை! ஆனால் அவளிடம் அதை எப்படிக் கேட்பது?

"அவள் உங்கள் பெண்ணா?" என்று கேட்டாள் தமயந்தி, ஒரு புறமாக நின்று கொண்டிருந்த பெண்ணை நோக்கி.

"ஆமாம், என் முதல் பெண்...செல்லம்மா! டாக்டரம்மா கூப்பிடுகிறார்கள். இங்கே வா" என்றாள் சாந்தா.

தமயந்திக்கு அந்தப் பெண்ணின் பெயரைக் கேட்டதும் தூக்கி வாரிப் போட்டது. செல்லம்மா வெட்கத்தோடு கைகூப்பி வணக்கம் தெரிவித்து விட்டுத் தமயந்தியிடம் வந்து உட்கார்ந்தாள்.

அந்த அழகின் வடிவை, மூர்த்தியின் செல்வத்தைத் தன்னை அறியாமல் தடவிக் கொடுத்தாள், தமயந்தி.

"உங்களுக்கு இவள் ரொம்பச் செல்லப் பெண்ணாக்கும்? அது தான் செல்லம்மா என்று கூப்பிடுகிறீர்களோ!" என்று சொல்லிச் சாந்தாவின் மனத்தை ஊடுருவினாள்.

"இல்லை. என் கணவரின் முதல் மனைவியின் பெயர் செல்லம்மா! அந்தப் பெயரை என் முதல் குழந்தைக்கு வைத்தேன்!" என்றாள் சாந்தா கள்ளங்கபடமின்றி.

இது இரண்டாவது அதிர்ச்சி தமயந்திக்கு. வியர்த்துப் போய் விட்டது.

"அவள் இறந்து போய் விட்டாளாக்கும்!" என்றாள்.

"இல்லையம்மா! ஏதோ தகராறு. வீண் சந்தேகப்பட்டு இவர் கோபித்துக் கொண்டு அவளைப் பிறந்தகத்துக்கு அனுப்பி விட்டாராம். கொஞ்ச நாட்கள் கழித்து அவள் நிரபராதி என்று இவருக்குத்தெரியவந்ததாம். அப்போது அவள் இருக்குமிடம் தெரியவில்லை. எங்கே போனாளோ, என்ன ஆனாளோ தெரியவில்லை" என்றாள் சாந்தா வருத்தம்தோய்ந்த குரலில்.

"என்னமோ அம்மா! அவள் எங்கே இருக்கிறாளோ, என்ன கஷ்டப்படுகிறாளோ என்று நினைத்து விட்டால் எனக்கு நிம்மதியே இருக்காது. ஒரு பெண் கண்ணீர் விட இன்னொரு பெண் வாழ முடியுமா? நிறைந்த என் வாழ்க்கையில் இது ஒன்றுதான் எனக்குக் குறைச்சல்!" என்று சொல்லிக் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.



ஓய்வுபெற்ற வருமான வரி இலாகா ஆபீஸர் ஸ்ரீ என். ராமஸ்வாமி அய்யர் அவர்களின் சஷ்டியப்த பூர்த்தி விழா கடந்த 26-10-56 அன்று திருச்சியில் சிறப்பாக நடைபெற்றது. பிரபல எழுத்தாளர்கள், அமைச்சர்கள் ஆகியோரிடமிருந்து வாழ்த்துக்கள் வந்திருந்தன.

தன்னுடைய கடைசிக் கேள்வியைக் கேட்க நினைத்து "அந்த அம்மாள் இப்போது வந்து விட்டால் நீங்கள் என்ன செய்வீர்கள்?" என்று சிரித்துக் கொண்டே கேட்டாள் தமயந்தி.

"என்ன செய்வேன்? 'இந்தப் பொறுப்பை, பெரியவளான நீயே ஏற்றுக்கொள். சின்னவளான நான் உன் சொற்படி கேட்கிறேன். இருவரும் ஒற்றுமையாக அவர் வாழ்வை இன்பமாக்குவோம். அவர் அன்று கோபத்தோடு உன்னை வெளியேறச் சொன்னாலும் நீ ஏன் போனாய்?' என்று கேட்பேன். 'உன் மேல் தப்பு இல்லையென்றால் நீ ஏன் போக வேண்டும்? சுதந்திரத்தோடு அவரிடம் போராடி உன் உரிமையை ஏன் நிலை நாட்டவில்லை?' என்று சண்டை பிடிப்பேன். இருவரும் சகோதரிகளாகப் பழகுவோம். ஆனால் அந்த அதிர்ஷ்டம் எனக்கு இந்த ஜன்மத்தில் கிடைக்கிறதோ, இல்லையோ?" என்றாள் சாந்தா பளிச்சென்று.

"அம்மா! நீங்கள் ரொம்ப நல்ல மனசுள்ளவர். உங்கள் நல்ல மனசுக்கு ஒரு குறைவும் வராது!" என்று பெரிய பாட்டிமாதிரி மனநிறைவோடு சொல்லி விடைபெற்றாள் தமயந்தி. எல்லாக் குழந்தைகளையும் மாறி மாறி முத்தமிட்டாள்.

"நீங்கள் அபூர்வமாக வந்திருக்கும் சமயம் என் கணவர் இல்லையே என்று இருக்கிறது. அவர் 'காம்ப்' போயிருக்கிறார். ஒருவாரத்தில் வந்து விடுவார். வந்தவுடன் நானும் அவரும் உங்கள் வீட்டுக்கு வருகிறோம்!" என்று சாந்தா சொன்னாள்.

"யாருக்கு வாழ்வு?" என்ற கேள்விக்கு விடை கிடைத்து விட்டது, தமயந்திக்கு. நிச்சயம் அந்த உத்தமி சாந்தாவுக்குத்தான் வாழ்வு என்று தீர்மானித்தாள். அடக்கமும் பணிவும் நிறைந்த அந்தப் பெண்ணுக்குத் தான் விரோதியாகக் கூடாது என்று தீர்மானித்தாள். சாந்தா—மூர்த்தியின் வாழ்வு இன்பகரமாக இருக்கப் பகவானைப் பிரார்த்தனை செய்தாள்.

ஒரு வாரத்துக்கெல்லாம் டாக்டர் தமயந்தி அஸ்ஸாம் மாகாணத்தில் ராணுவ டாக்டராகப் போகத் தானே சம்மதம் தெரிவித்து விட்டதில் தமயந்தியின்கூட வேலை பார்த்தவர்களுக்கெல்லாம் ஒரே ஆச்சரியம். தன்னந்தனியளாக, டாக்டர் தமயந்தி தன் பிரயாணத்தைத் துவக்கினாள். அவள் மனம் இப்போது நிச்சலனமாயிருந்தது. கடைசிவரையில் மூர்த்தியைப் பார்க்காமலே பிரயாணத்தைத் துவக்கினாள். அவள் மனம் மட்டும் சாந்தா-மூர்த்தியின் க்ஷேமத்தைச் சதா வேண்டியது.



அரசியின் முடிசூட்டல் ஒரே தடவைதான்!



ஆனல்...

ஓ. அழகியே, நீ ஒவ்வொரு நாளும் உனது நீண்ட, பளபளப்பான கூந்தலைக் கொண்டு விதவிதமாக முடியலங்கரித்துக்கொள்ளும் ரகசியமென்ன! அபூர்வ மூலிகைகளையும் சிறந்த மூலப் பொருள்களையும் கொண்டு இனிய நறுமணமும் சேர்த்துத் தயாரிக்கப்படும் ஆயுர்வேத கூந்தல் டானிக்காகிய ஸ்ரீவிஸ் அம்லா கூந்தல் தைலம் அழகிய மாதரால் பெரிதும் விரும்பப் படுவதாகும்.

ஸ்ரீவிஸ் - அம்லா

கூந்தல் தைலம்



- கேசவளர்ச்சிக்கு உதவும்
- கேசம் உதிர்வதை தடுக்கும்
- பொடுகை அகற்றும்
- கேசத்தை மிருதுவாக்கி பளபளப்பூட்டும்
- குளுமையும் புத்துணர்ச்சியும் தரும்
- இனிய நறுமணமுள்ளது

தயாரிப்பாளர்:

ஸ்ரீவிஸ் பர்ப்யூமரி ஒர்க்ஸ், சென்னை - 1.

FZY-38-TAM



Zam-Buk

ஜாம்-பெக் புண்கள், பிளவைச் சிரங்குகள்; விஷக்காயங்கள் இவைகளுக்கு உடனேயே குணம் அளிக்கிறது.

விசேஷ பலனளிக்கும் ஜாம்-பெக் உலகின் மகோன்னதமான சருமக் களிம்பு. ஜாம்-பெக்கின் இதமளிக்கும், கிருமிநாசினி குணங்கள். புண்களிலிருந்து விஷத்தை நீக்குவதுடன், ரணங்களை ஆற்றி, ரத்தம் வராமல் தடுக்கிறது.

ஜாம்-பெக் இதர சரும நோய்களையும் காயங்களையும் ஆற்றுவதில் அற்புத சக்தி வாய்ந்தது.



கொழுப்புச் சத்து சேர்க்கப்படாதது

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

சோல் ஏஜண்டுகள்:

தாதா அண்டு கம்பெனி

86, நைனியப்ப நாயக் தெரு. சென்னை-3

பூதேவியின் மடியில் பொற்குவியல்



தென்னிந்தியாவில் எல்லையற்ற சுரங்கச் செல்வம் இருப்பதாகக் கூற முடியாதெனினும், இங்குள்ள சுரங்கச் செல்வத்தை எவரும் அற்பமாகக் கருதிவிட முடியாது. எனவே, முக்கியமாகச் சென்னை, ஆந்திரா, ஹைதராபாத், மைசூர், திருவாங்கூர், கொச்சி ராஜ்யங்களில் உள்ள சுரங்கச் செல்வத்தைப் பற்றியே இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

மேலே குறிப்பிட்ட பிரதேசங்களில் பெரும்பகுதி மிகவும் புராதனமான கெட்டிப்பாறைகள் நிறைந்ததாக இருக்கிறது. கடற்கரை நெடுகக் குறுகலான ஓரப் பிரதேசம் மாத்திரமே மண் பாறைப் பிராந்தியமாகும்.

தென்னிந்திய பூமியின் இத்தன்மையிலிருந்து இங்கு கிடைக்கக் கூடிய சுரங்கச் செல்வத்தை ஒருவாறு நிர்ணயித்து விடலாம். இங்கு நிலக்கரி மருந்துக்குக் கூடக் கிடைப்பதில்லை அல்லவா? இதற்குக் காரணம் இங்குள்ள பூமியின் தன்மைதான் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

சமீப வருஷங்களாகத் தான், கடற்கரை ஓரப் பிரதேசத்தில் பழுப்பு நிலக்கரி இருப்பதைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். அப்பிரதேசத்தில் இன்னும் பல முக்கிய சுரங்கச் செல்வங்கள் கண்டு பிடிக்கப் பட்டிருக்கின்றன. எனினும், இதுவரையில் சிலவற்றைத்தான் தேசத்துக்கு லாபகரமானவையாக இருக்கும் அளவுக்கு அபிவிருத்தி செய்திருக்கிறார்கள்.

பழுப்பு நிலக்கரி வண்டல்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு விட்டால், இங்கு இன்னும் அதிகமான சுரங்கத் தொழிற்சாலைகளும், இரசாயனத் தொழிற்சாலைகளும் ஸ்தாபிப்பதற்கு மிகவும் உதவியாக இருக்கும்.

தென்னிந்தியாவில் முக்கிய தொழிற்சாலைகள் ஏற்படுவதற்குப் பெரும் இடையூறாக இருப்பது நிலக்கரி கிடைக்காத கஷ்டம்தான். இந்தப் பிரதேசத்துக்குத் தேவையான நிலக்கரி வடகிழக்கு இந்தியாவிலிருந்தோ அல்லது ஓரளவு ஹைதராபாத் நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்தோ வந்து சேரவேண்டியிருக்கிறது.

கல்நார், படிக்கார மண், க்ரோமைட், உலோக மண், நிலக்கரி, தாமிரம், வைரம் முதலிய சில ரத்னக் கற்கள், தங்கம், ஜிப்ஸம், பழுப்புக்கரி, சுக்காங்கல், காந்தக்கல், மாக்கல், மாங்கனீஸ் முதலிய சுரங்கச் செல்வமும் மற்றும் டிடேனியம் போன்ற அபூர்வ சுரங்கப் பொருள்களும் தென்னிந்திய பூமியிலிருந்து கிடைக்கின்றன என்பதை அறிவோர் ஆச்சரியப் படாமல் இருக்க முடியாது.

நிலக்கரியும் பழுப்புக்கரியும்

தென்னிந்தியாவில், மத்தியப் பிரதேசத்துக்கு இப்பால் உள்ள கோதாவரிப் பள்ளத்தாக்கில் மாத்திரமே நிலக்கரி வயல்கள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. இந்த



டாக்டர் எம்.எஸ். கிருஷ்ணன்

வயல்களில், சிங்கரேணி, கொத்தகூடம் வயல்களில் மாத்திரமே இப்போது நிலக்கரி எடுக்கும் வேலைகள் நடந்து வருகின்றன. மற்ற இடங்களிலும், குறிப்பாக மேற்கு கோதாவரி பிரதேசத்திலும் நிலக்கரி கிடைக்கலாம் என்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்பு விருத்தாசலத்துக்கு அருகில் தண்ணீருக்காகப் பூமியைத் தோண்டியபோது, பழுப்பு நிலக்கரி இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. அதன் பின்தான் சமீப வருஷங்களாகத் தென் ஆற்காட்டில் பழுப்பு நிலக்கரி எங்கும் பிரபலமாகி யிருக்கிறது.



அப் பிரதேசத்தில் இந்திய சர்க்கார் பூகத்துவ இலாகாவும், பிறகு சென்னை சர்க்காரும் ஆராய்ச்சி நடத்தியதின் பலனாக, பூமிக்குள் சற்றேறக் குறைய நூறு சதுர மைல் விஸ்தீர்ணத்துக்குப் பழுப்பு நிலக்கரி இருப்பது உறுதியாகி யிருக்கிறது. அங்கு கிழேசுமார் இருநூறு கோடி டன் நிலக்கரி இருப்பதாகவும் மதிப்பிட்டிருக்கிறார்கள்!

வருஷத்துக்கு முப்பது லட்சம் டன் பழுப்பு நிலக்கரி எடுப்பதற்கான சுரங்கவேலைத் திட்டத்துக்குச் சர்க்கார் அனுமதி கொடுத்து விட்டார்கள்.

மேற்படி பழுப்பு நிலக்கரி, மின்சார உற்பத்திக்கு மிகவும் உபயோகமாக இருக்கும். மற்றும் அது நிலக்கரிப் பலகைகள், செயற்கை பெட்ரோல், எரு இவற்றை உற்பத்தி செய்வதற்கும் இன்றியமையாததாக இருக்கும். எனவே, இன்னும் ஐந்து வருஷங்களில் அவற்றின் உற்பத்திக்கான தொழிற்சாலைகள் தென்னிந்தியாவில் ஸ்தாபிக்கப் படலாம் என்ற நம்பிக்கைக்கு இடம் இருக்கிறது.

கூடலூருக்கு வடக்கே சில மைல்கள் தூரத்தில் நிலக்கரி வண்டல் இருப்பதாகத் தெரிகிறது. ஆனால், அதன் பரப்பு எவ்வளவு என்பது இன்னும் தெரியவில்லை.

திருவாங்கூரில் வர்க்கலா என்ற இடத்துக்கு அருகிலும் மேற்படி நிலக்கரி வண்டல்கள் இருப்பதாகத் தெரிகிறது. அங்கிருந்து சுமார் இருபத்தைந்து கோடி டன் நிலக்கரி கிடைக்கலாம் என்று மதிப்பிட்டிருக்கிறார்கள். எனினும் அந்த நிலக்கரியின் தரம் மிகவும் மட்டமாகத்தான் இருக்கும் என்று தெரிகிறது.

தென்னிந்தியாவில் உள்ள பழுப்பு நிலக்கரி வண்டல்களை நன்கு உபயோகப்படுத்திக் கொள்ளும் பட்சத்தில், இங்குள்ள மூலப் பொருள்களைக் கொண்டே பல தொழிற்சாலைகளை ஆரம்பித்து அபிவிருத்தி செய்யலாம் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

மண் கொடுக்கும் கரும் பொன்

தென்னிந்தியாவில் மைசூர், சேலம், குண்டூர், கர்நூல் இவ்விடங்களில்தான் இரும்புக் கனி, அதாவது மண் கலந்த இரும்பு உலோகச் சத்து ஏராளமாக இருக்கிறது.

மைசூர் மலைப் பிரதேசத்தில் உள்ள இரும்புக் கனியைப் பல வருஷங்களாகப் பத்ராவதியில் உள்ள இரும்பு, எஃகுத் தொழிற்சாலையில் உருக்கிச் சீர்ப்படுத்தி வருகிறார்கள்.

பெல்லாரியைச் சேர்ந்த ஸாண்டூரிலும், கர்நூலைச் சேர்ந்த வால்தூர்த்தியிலும் உள்ள இரும்புக் கனி சிறந்த ரகமுள்ளதெனினும், இன்னும் பயன்படுத்திக் கொள்ளப்படவில்லை.

தென் மைசூர், சேலம், குண்டூர் முதலிய இடங்களில் காந்த உலோக சத்து கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. அது அசுத்தமான கலப்படமாக இருக்கிறது. எனினும் சுலபமாக அதைத் தூளாக்கிக் காந்தத்தின் மூலம் சுத்தம் செய்து உபயோகித்துக் கொள்ளலாம்.

தென்மைசூரில் காணப்படும் எரிப் பாறைகளில் உள்ள உலோக சத்துக்களில் வர்ண உலோகமும் (Chromium) வெள்ளி போன்ற ஒரு வித அபூர்வ உலோகமும் (Vanadium) ஓரளவு கலந்திருக்கின்றன. இங்கு இரும்புத் தொழிற்சாலைகள் வளர்ச்சியடையும்போது அவ்விரு உலோகங்களும் மிகுந்த பலனுள்ளவையாக இருக்கும்.

மைசூர், சென்னை, ஆந்திர ராஜ்யங்களில் கரும் பொன்னாக விளங்கும் இரும்புக் கனி இருநூறு கோடி டன்களுக்கு மேல் இருக்கலாமென்று நம்பப்படுகிறது.

நிலக்கரி கிடைக்காததாலேயே அவற்றை லாபகரமான முறையில் அபிவிருத்தி செய்ய முடியாமல் இருக்கிறது. இங்கு பழுப்புக்கரி அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுமாயின், சேலத்தில் இரும்புக் கனி உருக்கு வேலைகளைக் கைக்கொள்வது சாத்தியமாகி விடும்.

சேர்க்கைப் பொருளின் சிறப்பு

இரும்பு, எஃகுத் தொழிற்சாலைகளின் அபிவிருத்திக்கு மாங்கனீஸ் (Manganese) உலோகம் மிகவும் அத்தியாவசியமாகும். அது உருக்கு இரும்பு, எஃகு இவைகளின் சிறப்புக்கு இன்றியமையாத சேர்க்கைப் பொருளாகத் திகழ்கிறது.

விசாகப்பட்டணம், கஞ்சம், பழைய சாண்டூர் சமஸ்தானம் முதலிய இடங்களில் மாங்கனீஸ் கனியின் அபிவிருத்தி வேலைகள் நடைபெற்று வருகின்றன. மேற்படி கனி உயர்ந்த ரகத்தைச் சேர்ந்ததல்ல. இருந்தாலும் சென்ற ஐம்பது ஆண்டுகளாக அவ்விடங்களில் மாங்கனீஸ் கனி சுத்தம் செய்யப்பட்டு, பிறகு வெளியிடங்களுக்கும் விற்கப்பட்டு வருகிறது.

இங்கு உற்பத்தியாகும் மாங்கனீஸை இது வரையில் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வந்தார்கள். இப்போது பாரத நாட்டில் பெரும் அளவில் அபிவிருத்தித் திட்டங்கள் கைக் கொள்ளப்பட்டிருப்பதால்,


'அனஸின்'
மிகச்சிறந்தது, அதில் நான்கு
மருந்துகள் சேர்ந்துள்ளன
1. க்வினைன் சல்பேட் 2. காப்பின்
3. பினஸிடின் 4. ஆஸிடில்ஸாலிஸிலிக் ஆஸிட்
வலிகளுக்கு நிவாரணமளிப்பதில் புகழ் பெற்ற 'அனஸின்' விஞ்ஞான முறையில் சேர்க்கப்பட்ட நான்கு மருந்துகளின் கலப்பாகும். இவைகள் நரம்புகளின் கேந்திர ஸ்தானங்களில் கூட்டாக வேலை செய்து, தலைவலி, ஜலதோஷம் ஜுரம், பல்வலி, மற்றும் தசைவலிகளுக்குத் துரிதமாயும் அபாயமின்றியும் நிச்சயமாயும் நிவாரணம் அளிக்கிறது. வலிகளுக்குத் துரிதநிவாரணமளிப்பதில் அனஸினுக்கு இணையொன்றில்லை... அனஸினைப் போல் தீங்கு விளைவிக்காத வில்லை வேறொன்றில்லை. ஆகவே ஞாபகமிருக்கட்டும் 'அனஸின்' ஒரு டாக்டரின் குறிப்புக்கு ஒப்பாகும். அது ஹிருதயத்திற்குத் தீங்கு விளைவிக்கவோ அல்லது வயிற்றுக் கோளாறுகள் உண்டு பண்ணவோ செய்யாது. 'அனஸின்' லக்ஷக்கணக்கான மக்களுக்கு நிவாரணம் அளிக்கிறது. 'அனஸின்' விலை ஒவ்வொருவர் சக்திக்கும் ஏற்றது. ஒரு பாக்கெட்டின் விலை அணா 2 மட்டுமே
நான்கு
மருந்துகளின்
சேர்க்கையான
'அனஸின்'
வேண்டுமென்றே
கேளுங்கள்
WILL NOT UPSET THE STOMACH
DOES NOT HARM THE HEART
ANACIN
TABLETS


நவீன
மாய வித்தை!
லக்மி
டால்கம்
பவுடர்
டாடா தயாரிப்பு
லக்மி

எதிர்காலத்தில் இந்திய மாங்கனீஸ் கனி அதிகமாக உள்நாட்டுக்கே தேவையாக இருக்கும் என்பது நிச்சயம்.

டிடேனியம் (Titanium)

எஃகுத் தொழிலுக்கு மிகவும் அவசியமான க்ரோமைட் கிருஷ்ணா, சேலம் ஜில்லாக்களில் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. எவர்ஸில்வர் போன்ற விசேஷ எஃகு சாதனங்களின் உற்பத்திக்கு க்ரோமைட் மிகவும் உபயோகமாக இருக்கிறது.

மேற்படி சாதனங்கள் அரிக்கப்படாமலும், துருப் பிடிக்காமலும் இருப்பதற்கு க்ரோமைட்தான் அத்தியாவசியமான தேவையாக இருக்கிறது. மற்றும் க்ரோமியம் கலந்துள்ள எஃகு பல காரியங்களுக்கு உபயோகமானதாக இருக்கிறது.

டிடேனியம் என்ற அபூர்வ உலோகம், சென்னை, ஆந்திரா, திருவாங்கூர் ராஜ்யங்களைச் சேர்ந்த கடற்கரை மணலிலிருந்து கிடைக்கிறது. சென்ற சில வருஷங்களில் திருவாங்கூரிலிருந்து சுமார் இரண்டு லட்சம் டன் டிடேனியம் உலோகச் சத்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது.

மற்றும் டிடேனியம் ஒரு வகை வர்ணச் சேர்க்கைக்கு மிகவும் உபயோகமாக இருப்பதுடன், எஃகுடன் கலப்பதற்கும் இன்றியமையாத சாதனமாக இருக்கிறது.



சென்ற சில வருஷங்களாக மேநாடுகளில் டிடேனியம் உலோக உற்பத்திக்கான வேலைகள் வெகு மும்முரமாக நடைபெற்று வருகின்றன. டிடேனிய உற்பத்தி மிகவும் கஷ்டமான காரியம். ஆனால் கடல் தண்ணீரிலும் இரசாயன வகைகளிலும் சம்பந்தப்படும் சாதனங்கள் அரிக்கப்பட்டு விடாமல் காப்பாற்றுவதற்கு டிடேனியம் சிறந்த சஞ்சீவியாக இருக்கிறது.

திருவாங்கூரில் டிடேனிய உலோகத்தின் மூல சத்து அபரிமிதமாக இருப்பதால், இத்தேசத்தில் டிடேனியம் உற்பத்தி செய்வதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. திருவாங்கூரில் இருபத்தைந்து கோடி டன் வரையில் மேற்படி மூல சத்து இருப்பதாகத் தெரிகிறது. ஏற்கெனவேயே, திருவாங்கூரில் டிடேனியம் வர்ணப் பசை உற்பத்தி செய்யும் சிறிய தொழிற்சாலை ஒன்று இருக்கிறது. அதன் உற்பத்தியும் எதிர்காலத்தில் அதிகமாவதற்கு இடமிருக்கிறது.

தங்கமோ தங்கம்!

தென்னிந்தியாவில் உள்ள குன்றுகளிலிருந்து ஓடி வரும் ஒவ்வொரு ஓடையும் தண்ணீருடன் தங்கத்தையும் கொண்டு வருகிறது! அதை உற்றுக் கவனிப்போர், அதில் வரும் வண்டல் மண்ணில் தங்க ரேகைகள் படிந்திருப்பதைக் காணலாம்.

மேற்படி ஓடைகளில் உள்ள மடுக்களிலும் திருப்பங்களிலும் படிந்துள்ள வண்டல் மண்ணைச் சலித்து முன்பெல்லாம் தங்கம் எடுத்து வந்தார்கள். ஆனால் முன் போல் இப்போதெல்லாம் மேற்படி வண்டல்களிலிருந்து தங்கம் சலித்து எடுக்கப்படுவதில்லை. இப்போது அதைக் காட்டிலும் அதிக லாபகரமான தொழில்கள் ஏராளமாக இருப்பதாலேயே தங்கம் சலித்து எடுக்கும் வழக்கம் மறையத் தொடங்கி விட்டது.

மிகவும் பிரசித்தி பெற்ற கோலார் தங்க வயல்களைப் பற்றிக் கேள்விப்படாதவர்கள் இருக்க முடியாது. பெங்களூர் ஜில்லாவில் உள்ள கோலார் நகருக்கு அருகில் அந்தத் தங்கச் சுரங்கங்கள் இருக்கின்றன. சில நூறு கெஜம் அகலமும் ஐந்து மைல்களுக்கு மேல் நீளமும் உள்ள அப்பிரதேசத்தில் தங்கம் இருக்கும் பள்ளங்கள் ஏராளமாக இருக்கின்றன.

முன்பு அங்கு ஐந்து சுரங்கங்கள் இருந்தன. இப்போது மூன்று தங்கச் சுரங்கங்கள்தான் வேலை செய்து வருகின்றன.

அந்தச் சுரங்கங்களில் வருஷந்தோறும் சுமார் இரண்டு லட்சம் அவுன்ஸ் தங்கம் உற்பத்தி செய்யப்படுகிறது.

இப்போது அந்தச் சுரங்கங்களின் ஆழம் பத்தாயிரம் அடிக்கு மேலே போயிருக்கிறது. இன்னும் அதிக ஆழத்திலும் தங்கம் இருக்கக் கூடும் என்று கருதுகிறார்கள்.

கோலாரில் உள்ள தங்க உலோக சத்துக்கள் தெற்கே சித்தூர் ஜில்லாவுக்கு உள்ளும் செல்லுகின்றன. அங்கு இரண்டொரு இடங்களில் பூமி தோண்டி எடுக்கப்பட்டதெனினும், ஒழுங்காகத் தொடர்ந்து வேலை நடைபெறவில்லை.

நீலகிரி ஜில்லாவில் உள்ள வயநாட்டுப்பிரதேசத்திலும் தங்கம் கண்டுபிடிப்பதற்காகப் பல கம்பெனிகள் ஏற்பட்டன வென்றாலும், அவற்றைக் கடைசியில் மூடி விடும்படியே நேர்ந்தது.

அந்தப் பிரதேசத்தில் உள்ள பல இடங்களில் தங்கம் இருக்கிறதெனினும் அதைக் கண்டு பிடித்து லாபகரமாக நடத்துவதற்கான முயற்சிகளைக் கைக்கொள்ள வேண்டும்.

ஹைதராபாத்தைச் சேர்ந்த ரெய்ச்சூர் ஜில்லாவில் சில வருஷங்கள் வரையில் தங்கச் சுரங்கங்கள் வேலை செய்து வந்தன. ஆனால், அவற்றைப் பிறகு மூடி விட்டார்கள். சில வருஷங்களுக்கு முன் அவை மறுபடியும் திறக்கப்பட்டு வேலைகள் நடந்து வருகின்றன.

அங்குள்ள தங்கச் சத்து சிறந்த ரகமுள்ளது என்பதுடன், அப்பிரதேசத்தில் அது பரவலாகவும் இருப்பதாகத் தெரிகிறது. ரெய்ச்சூர் ஜில்லா தங்கச் சுரங்கங்களில் வருஷத்துக்கு அரை லட்சம் அவுன்ஸ் தங்கமே உற்பத்தியாகிறது.

ஆனால், அந்தச் சுரங்கங்களில் ஒழுங்கான அபிவிருத்தி முறைகளைக் கைக்கொண்டு திறமையாக நிர்வாகம் நடைபெறுமாயின், எதிர்காலத்தில் அங்கு அதிகமான தங்கம் உற்பத்தி செய்யலாம் என்பதில் சிறிதும் ஐயமில்லை. (அடுத்த இதழில் முடியும்)



''சினிமாப் படங்கள் சக்கைப் போடு போட்டுக்கொண்டிருக்கும்போது, நாம் பழைய மூட்டைகளை அவிழ்த்தால் சரக்கு எடுபடாது' என்ற பயம் நாடகக் குழுவினருக்கு இருக்கிறது. ஒரு படாதிபதியின் துணிச்சல் ஒரு நாடகத் தயாரிப்பாளருக்கு இருக்கவே முடியாது. ஒரு படம் நாறு இயேட்டர்களில் ஓடினால் போட்ட பணம் எப்படியும் வந்து விடும். அத்துடன் நஷ்டம் படாதிபதியின் கையைக் கடிக்காமல் பார்த்துக்கொள்ள ஒரு வசதி யிருக்கிறது. விநியோகஸ்தர் என்று ஒருவர் குறுக்கிட்டு, அவர் அடைந்த நஷ்டத்தை ஏற்றுக் கொள்ளுகிறார். நாடகக் குழுவினருக்கு அவ்வித வசதி எதுவும் கிடையாது அல்லவா !''

நாடக மேடை

— காந்தன் —



''என்ன மிஸ்டர் காந்தன்! இப்போதெல்லாம் நாடகங்களுக்குப் பலமான ஆதரவு அளிக்கிறீர்கள்போலிருக்கிறதே!'' என்று கேட்டார் என் நண்பர்.

''எந்தத் துறையில் புதுமையைக் கண்டாலும், அதைப் பலமாக ஆதரிக்க வேண்டியது நம் கடமையல்லவா ?'' என்றேன்.

''சினிமாத் துறையில் புதுமையைக் காண முடியவில்லையா...?'' என்றார் நண்பர்.

''அது எங்கே முடிகிறது ? படாதிபதிகள் பலர் மிகப் பழைய கதைகளைத் துணிந்து வெள்ளித்திரைக்குக் கொண்டு வந்து விடுகின்றனர். உதாரணமாக, ''பாசவலை'' என்னும் படத்தை எடுத்துக் கொள்ளலாம். எத்தனையோ ஆண்டுகளாக நாடக மேடையில் தொன்றுதொட்டு நடிக்கப்பட்டு அலுத்துப் போன ''அலிபாதுஷா'' நாடகத்தைத் தழுவி எடுக்கப்பட்டதுதான் ''பாசவலை'' என்னும் படம். சினிமாவுக்கு ஏற்றபடிய கதையே கிடைக்கவில்லையா ? காலஞ்சென்ற கதைகளைத் தழுவித்தான் காலம் தள்ள வேண்டுமா ? படத்தில் சில மாறுதல்களைப் புகுத்தி யிருக்கிறார்கள். பழைய கட்டடத்துக்கு வெள்ளையடித்தது போல், மேற்படி கதைக்கு அவை இன்னும் விளக்கம் கொடுக்கின்றன. அவ்வளவுதான். அந்தப் படத்துக்கு விமரிசனம் தேவையா ?''

''அது சரி. நாடகங்களைப் பற்றி உங்கள் கருத்து? அவைகளில் பழையன கிடையாதா?''

''தொழில் நடிகர்கள் சேர்ந்து நடத்தும் நாடகக் குழுவுக்குப் பிரமாதமான அதிர்ஷ்டம் அடிக்கிறதே. நீங்கள் சொல்லுவது...''

''...சரியில்லை என்கிறீர்களா ? நான் தொழில் நடிகர்களின் முயற்சியைப் பற்றியே கூறவில்லையே ! அமெச்சூர் நாடகக் குழுவுக்குத்தான் நான் என் பலமான ஆதரவைத் தருவது வழக்கம். அமெச்சூர் நடிகர்களுக்குக் கலையார்வம்தான் மூலதனம். அந்த ஆர்வத்தைத் தூண்டுவதுதான் நம் கடமை. இப்பொழுது நாடகமேடை மிகவும் அபிவிருத்தியடைந்திருக்கிறது. காட்சி ஜோடனை, சங்கீதம், விளக்கு அமைப்பு, நடிப்பு எல்லாவற்றுக்கும் நாடகக் குழுவினர் முதல் இடம்

கொடுக்கிறார்கள். 'டேப் ரிக்கார்டிங்' மூலம் பாடல்களை இனிமையாக அமைக்கிறார்கள்; வெள்ளித் திரையில் பார்ப்பதைவிட அழகு அழகான புது நடிகைகள் நாடக மேடையில் தோன்றுகின்றனர். நாடக நடிகர்களை ஊக்கி உற்சாகப்படுத்தினால் வெள்ளித் திரையில் புது முகங்களை நிறைய எதிர்பார்க்கலாம்.''

''நீங்கள் சொல்லுவது உண்மைதான். சமீபத்தில் என்ன நாடகம் பார்த்தீர்கள்?''

''**ம**கத்தான தீர்மானம்'' என்னும் நாடகம் 11–11–56 ஞாயிறன்று ஸ்ரீ கிருஷ்ண கான சபாவின் ஆதரவில், தியாகராயநகர் ஹிந்தி பிரசார சபை திறந்தவெளி அரங்கில் நடைபெற்றது. பைன் ஆர்ட்ஸ் செண்டர் நாடகக் குழுவினர் நடித்தனர்.

பணக்கார வாலிபன் சுந்தர், அவனையே நினைந்து உருகும் தமக்கை மகள் கமலாவைப் புறக்கணித்து, மாலதியைக் காதலிக்கிறான். மாலதியின் சித்தப்பா சாம்பசிவம், மாலதியின் தந்தை வைத்துச் சென்ற உயிலின்படி



அவளுக்கு ஒரு உழைப்பாளியான கணவனைத் தேடுகிறார். மாலதியின் பால்ய நண்பன் மோகன் ஓர் எழுத்தாளன், உழைப்பின் உயர்வை உணர்ந்தவன். அவனை மாலதிக்கு மணமுடித்து வைக்க அவள் சித்தப்பா விரும்புகிறார். மாலதிக்கும் சுந்தருக்கும் நெருங்கிய நண்பனான வரதராஜன் ஒரு பெரிய சதித் திட்டத்துடன் வஞ்சகமாக மாலதியின் சித்தப்பாவிடமிருந்து உயிலைக் கவர்ந்து கொண்டு, மாலதியை மணக்க முயல்கிறான்: சுந்தரை ஊரைவிட்டே துரத்துகிறான்; தன் காதலி 'டிப் டாப்'பைக் கொலை செய்து விட்ட குற்றத்துக்குச் சிறைக்குப் போகிறான். இந்நிலையில் மாலதியின் ''மகத்தான தீர்மானம்'' உண்மைக் காதலனான மோகனை மணந்து கொள்வது என்பதுதான்.


இந்நாடகத்துக்கு, கதை, வசனம், பாட்டு யாவும் தயாரித்த ஸ்ரீ ஏ.பி.சாரதி வரதராஜனாக நடித்து நாடகத்துக்கும் தமக்கும் நல்ல பெயர் தேடிக் கொண்டார். இவ்வளவும் போதாக்குறைக்கு இந்நாடகத்துக்கு டைரக்ஷனும் அவரே செய்திருக்கிறார்.

சுந்தராக நடித்த முரளி ஒரு சிறந்த நடிகர். மாலதியின் சித்தப்பாவாக நடித்த பி. சாம்பசிவம் செட்டியார், சித்தப்பாவாகவும் சாயபுவாகவும் தோன்றி நன்றாய் நடித்தார். மாலதியாக நடித்த செல்லம், கண்ணீர் விட்டு, காதலித்து, உருக்கமாக நடித்தார். சுந்தரின் தமக்கை சாரதாவாக நடித்த ஜி. ராமராவ் கச்சிதமாக நடித்தார். 'மிஸ் டிப்-டாப்' பாகத்தை ஏற்ற ஏ. எல். சகுந்தலாவின் நடிப்பும், நொடிப்பும், கண் வீச்சும் ரொம்ப ஜோர். இந் நாடகத்தில் மட்டும் ஜான், ஜோசப் இருவரும் இல்லையென்றால் நாடகமே இல்லை. கே. ராஜகோபாலனும், சி. எஸ். தேசிகனும், ஜானும் ஜோசப்புமாகத் தோன்றி வெளுத்து வாங்கி விட்டனர். எம். ஆர். விஜயலக்ஷ்மி கமலாவாக நன்கு நடித்தார். ஆனால் அவருக்கு அதிக சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை.

சித்திரக்காரர் சாமா மேற்படி நாடக நடிகர்களின் முக பாவங்களைத் தத்ரூபமாகத் தீட்டியிருக்கிறார்.

''மகத்தான தீர்மானம்'' நாடகத்தில் நடித்த நடிகர்களைக் கொண்டு பல மகத்தான நாடகங்களை நடத்தலாம்.





மாடல் '75'

● எங்கும் கிடைக்கும்

Prestige

ஒவ்வொரு குடும்பத்திற்கும் உகந்தது

பிரஸ்டீஜ்

பிரஷர் குக்கர்கள்

இந்தியன் பாங்க் லிட்

(ஸ்தாபிதம்: 1907)

தலைமை ஆபீஸ்: வடக்கு பீச் ரோட், சென்னை. 1

உள்ளூர் ஆபீஸ்கள்:

எஸ்பிளனேட், சௌகார்பேட்டை, எழும்பூர், சேத்துப்பட்டு, திருவல்லிக்கேணி, மவுண்டு ரோட், ராயப்பேட்டை, ஆள்வார்பேட்டை, தேனாம்பேட்டை, மைலாப்பூர், காந்திநகர், தியாகராயநகர், கோடம்பாக்கம், நுங்கம்பாக்கம், புரசைவாக்கம், பெரியமெட் & ராயபுரம்.

தென்னிந்தியா முழுவதிலும், பம்பாய், கல்கத்தா, புது டெல்லி, கொழும்பு, சிங்கப்பூர், F.M.S. முதலிய இடங்களில் கிளை ஆபீஸ்களிருக்கின்றன.

மூலதனம்

அதிகாரம் பெற்ற மூலதனம்	...	ரூ.	1,00,00,000
வசூலிக்கப்பட்ட மூலதனம்	...	ரூ.	72,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	...	ரூ.	62,02,615
ரிசர்வு மற்றும் இதர நிதிகள்	...	ரூ.	79,75,000
டிபாசிட்டுகள் (30-6-56)	...	ரூ.	32.08 கோடி

வெளிநாட்டு பரிவர்த்தனையுள்பட சகலவிதமான பாங்கு அலுவல்களும் கவனிக்கப்படும்.



D. P. பார்த்தசாரதி,
B.A. (Hons.), B.L.
ஆக்டிங் செக்ரடரி.

கடல் கண்ட கனவு

பதினைந்தாம் அத்தியாயம்


மாளிகையிலே புயல்!

தஞ்சைமாநகரை நோக்கிச் சித்திராங்க பூபதியும் உதயசந்திரனும் புறப்பட்ட சமயத்தில், சித்தன்ன வாசல் மலையிலே மகிழ்ச்சியும் வெற்றியுணர்ச்சியும் சமணத் துறவிகளின் உள்ளத்தை ஆனந்தப்படுத்தின. ஆனால் அதேநேரத்தில் கொடும்பாளூரிலே குங்கும மாளிகையில் ஒரே அமர்க்களமாக இருந்தது!


வீரவிக்கிரமன் என்ற விடுதித் தலைவனுடைய சூழ்ச்சிகளுக்கெல்லாம் வாய்ப்பான இடமாக விளங்கி வந்த குங்கும மாளிகையில் இடி இடித்தது. மின்னல்கள் பளிச்சுப்பளிச்சென்று கண்ணைப் பறித்தன. மனித மனங்கள் ஒன்றோடொன்று மோதி வெடித்தன!

நிரபராதியான ஒரு மனிதனைத் தன்னந்தனியாக ஓர் அறையிலே அடைத்துப் போட்டு, நீண்ட சாட்டையினால் 'பளார்' 'பளார்' என்று அடித்த ஓசையைக் கேட்டுவிட்டுச் சித்திராங்க பூபதி துடிதுடித்தான் அல்லவா? அந்த நேரத்தில்தானே அங்கே இரகசியமாக யாழ் நங்கை வந்து சித்திராங்கனிடம் அவளுடைய ஏற்பாடுகளையெல்லாம் சொன்னாள். அதன் பயனாகத்தானே பூபதி அன்று இரவே அந்த மாளிகையிலிருந்து வெளியேறினான்? இப்பொழுது அந்தச் சவுக்கின் வீச்சு எதிர்பாராத பல தொல்லைகளை விளைத்து விட்டது!

வீர விக்கிரமனுடைய சவுக்கின் கடுமையான வீச்சுகளுக்கு உள்ளானவன் வேறு யாருமில்லை. கொடும்பாளூர் வேளிர் குடும்பத்தின் நேர் சந்ததியான ஆதிரையன்தான்! அந்த ஆதிரையனை இரகசியமாகப் பிடித்து வளைத்துக் குங்கும மாளிகைக்குக் கொண்டு வந்து அவனிடமிருந்து பல செய்திகளை அறிந்து கொள்ள முயன்றான் வீர விக்கிரமன்! முக்கியமாகச் சந்திரசூடன் என்ற வேளிர் குடும்பத்து மந்திரி குமாரனைப் பற்றித் தெரிந்து கொள்ள முயன்றான். ராஜசிம்ம பல்லவன் காலத்தில் பேரியாழைத் தேடிக் கொண்டு வலம்புரித் தீவுக்குச் சென்ற அந்தச் சந்திரசூடன் ஆதிரையனின் சிற்றப்பன்! அவன் வலம்புரித் தீவுக்குச் சென்றவன், அந்தத் தீவிலேயே மறைந்து போனதாகத்தான் பலரும் எண்ணி வந்தார்கள். ஆனால் வீர விக்கிரமனுக்கு மட்டும் அரைகுறையாகப் பல செய்திகள் எட்டின. சந்திரசூடன் வலம்புரித் தீவிலிருந்து தமிழ் நாட்டுக்குப் பேரியாழோடு திரும்பி



வந்தான் என்றும், அந்தப் பேரியாழைத் தான் குங்கும மாளிகையிலே சேர்ப்பித்தான் என்றும், இன்று குங்கும மாளிகையிலே இருந்து வருகிற பேரியாழ் வலம்புரித் தீவுக்கு உரிய அதே வாத்தியந்தான் என்றும், வீர விக்கிரமன் கேள்விப்பட்டிருந்தான். ஆனால் முழு விருத்தாந்தமும் சரியாகத் தெரியவில்லை! சந்திரசூடன் இப்பொழுது எங்கே இருக்கிறான் என்று யாராலும் கண்டு பிடித்துக் கூற முடியவில்லை! இந்தக் குழப்பத்திலேதான் குங்கும மாளிகையில் யாழ் நங்கையின் தாயாரோடு நெருங்கிப் பழக ஆரம்பித்தான் வீர விக்கிரமன்! அவளிடமிருந்து எல்லாச் செய்திகளையும் அறிந்து கொள்ளலாம் என்றுதான் அவன் நினைத்தான்! ஆனால் குங்கும மாளிகையிலே யாழ் நங்கையின் தாயாரை வற்புறுத்திக் கேட்க இயலவில்லை! அப்படியே கேட்டாலும் அவள் தனக்கு அதிகமாக ஒன்றும் தெரியாது என்றும், கொடும்பாளூர் அரச குடும்பத்தைச் சேர்ந்த ஆதிரையனிடம் கேட்டால் எல்லா வரலாறும் விரிவாகத் தெரியவரும் என்றும் சொன்னாள். அதற்குமேல் அவளை வற்புறுத்த விரும்பவில்லை, வீர விக்கிரமன்! அவளைப் பகைத்துக் கொண்டு விட்டால் பிறகு குங்கும மாளிகையின் ஒத்துழைப்பு தனக்குக் கிடைக்காதே என்று தயங்கினான் அவன்! தவிர, ஆதிரையன் மூலமாகத்தான் அந்தப் பேரியாழ் தனக்குக்கிடைத்தது என்றும், சந்திரசூடனைத் தான் பார்த்ததே இல்லை என்றும், ஒருநாள் அந்த அம்மாள் வீர விக்கிரமனிடம் சொன்னாள்! அந்த அம்மாளுடைய பேச்சில் எது உண்மை, எது பொய் என்று வீர விக்கிரமனால்கூடக் கண்டுபிடிக்க முடியவில்லை! அத்தனை மேதாவி அந்த அம்மணி! இந்நிலையில் வீர விக்கிரமன் ஏதேதோ யோசனைகள் செய்து பார்த்தான்! ஆதிரையன் அடிக்கடி கடல் கடந்து யாத்திரை செய்வதற்குங்கூட ஏதாவது ஒரு காரணம் இருக்கவேண்டும் என்று வீர விக்கிரமனுக்குத் தோன்றியது. எனவே ஆதிரையனை எப்படி வசப்படுத்தலாம் என்று பல முறைகளைக் கையாண்டு பார்த்தான்! ஆனால் ஒன்றும் பயன் அளிக்கவில்லை. இதன் பிறகுதான் இந்த இளைஞனைச் சூழ்ச்சியின் மூலம் வளைப்பதற்காக முனைந்தான்! யாழ் நங்கையின் அன்னைக்கு ஏதேதோ அரச வெகுமதிகள் எல்லாம் கொடுத்து அவளுடைய ஒத்துழைப்போடு ஆதிரையனைக் குங்கும மாளிகைக்கே வரும்படி செய்தான்! பேரியாழ் வாசிப்பில் மிகவும் பிரியம் கொண்டிருந்த ஆதிரையனை இசையின் வலையை வீசி இழுத்துப் பிடித்தான்! குங்கும மாளிகையில் அவனைத் திடீரென்று தாக்கிப் பிடித்துத் தனியாக ஓர் அறையிலே கொண்டு போய் வைத்துச் சந்திரசூடனைப் பற்றிய செய்திகளைச் சொல்லும்படி பயமுறுத்திக் கேட்டான்! ஆதிரையன் அசையவில்லை! சாட்டையினால் பளார் பளார் என்று அடி விழுந்ததே தவிர, ஆதிரையனிடமிருந்து எவ்விதமான இரகசியமும் வெளிவரவில்லை. அவனை ஒரு தனியான இருட்டு அறையிலே அடைத்துப்போட்டுவிட்டு, இன்னும் என்னென்ன சித்திரவதைகள் செய்யலாம் என்று யோசித்தான் வீர விக்கிரமன். தினந்தோறும் அவனைச் சாட்டையினால் வதைத்தும் இரகசியம் எதுவும் தெரிந்து கொள்ள முடியவில்லை. சித்திராங்க பூபதிக்கு இதெல்லாம் தெரியாது! அவன் கேட்ட சாட்டையின் ஓசை அதற்கு முன்பும் பல தடவைகள் ஆதிரையனுடைய முதுகிலே விழுந் திருக்கிறது என்பதைப் பூபதி அறிந்திருந்தால், அந்த இரவு அப்படி அவன் ஓடியிருக்கவே மாட்டான்! இரண்டில் ஒன்று பார்த்து விடுவது என்று வீர விக்கிரமனை அன்றிரவே எதிர்த்து நின்றிருப்பான்! ஆனால் எதிர்த்து வெல்ல முடியுமா! அத்தனை பெரிய சூழ்ச்சிக் கூட்டத்தைத் தன்னந்தனியாக அந்தக் குங்கும மாளிகையிலே பூபதி எதிர்த்துச் சண்டை செய்வது என்பது முடிகிற காரியமா! அதனால்தான் யாழ் நங்கை இந்த விவரங்களையெல்லாம் முழுதும் சொல்லாமல் இரகசியமாகத் தன்னைச் சிவிகையிலே அனுப்பி விட்டாள் என்று வெகு நாட்களுக்குப் பிறகுதான் பூபதிக்குத் தெரிய வந்தது! அதுவரை ஆதிரை



யனைப் பற்றிய செய்தி யெல்லாம் பூபதிக்கு ஒன்றுமே தெரியாமல்தான் இருந்தது! உதயசந்திரனுடைய ஏற்பாடு அப்படி!

ஆமாம்; இத்தனையும் உதயசந்திரனுடைய ஏற்பாடுதான்! வீரவிக்கிரமன் பூரண உரிமையோடு நிம்மதியாக வளைய வந்து கொண்டிருந்த அந்தக் குங்கும மாளிகைக்குள்ளே அவனுக்கும் தெரியாமல் இப்படி ஓர் இரகசிய ஏற்பாடு எப்படி நடந்தது? வீரவிக்கிரமனால் அதைக் கண்டு பிடிக்க முடியவில்லை! கோபத்தினால் அவனுடைய உடல் முழுதும் பற்றி எரிந்தது! அந்தக் கோப நெருப்புக்குப் புயல் வீசியது போல இருந்தது பூபதியின் மறைவும் அதை யடுத்து நடந்த சம்பவங்களும்!

படிம விலாசம் என்ற அறையிலே பூபதியைக் காணோம் என்று பணியாளர்கள் தெரிவித்தார்கள். இதே சமயம் மாளிகையின் உள் அறையிலிருந்து யாழ் நங்கையைக் காணோம் என்று அலறினாள் தாயார்! வீர விக்கிரமனுக்கு எப்படி யிருக்கும்!

பூபதியின் மறைவு ஒரு பெரிய இடி விழுந்தது போல் இருந்தது, விக்கிரமனுக்கு! அந்தப் பேரிடியைத்தொடர்ந்து வானமே இடிந்து விழுந்தது போல, யாழ் நங்கையைக் காணோம் என்ற செய்தி வந்ததும் வீர விக்கிரமனுக்கு நிலத்திலே பாதங்கள் பதியவில்லை. இந்த அகில உலகமுமே அவனுடைய கண்ணுக்கு முன்னால் 'கிர்' என்று சுழன்றது! நட்சத்திரங்களும் கிரகங்களும் தனக்கு முன்னால் சுழல்வதுபோலவும், அப்படிச் சுழல்கின்ற ஒவ்வொரு நட்சத்திரத்துக்குள்ளும், ஒவ்வொரு கிரகத்துக்குள்ளும் உதய சந்திரனுடைய முகம் கண்களைச் சிமிட்டிக் கொண்டே தன்னைப் பார்த்துப் பரிகசிப்பது போலவும் ஒரு பிரமை உண்டாயிற்று, வீர விக்கிரமனுக்கு! இடுப்பிலே செருகி யிருந்த வாளை ஒரு கையிலே உருவிக் கொண்டான். இன்னொரு கையிலே சாட்டையைப் பிடித்தான்! குங்கும மாளிகையின் சுவர்களில் எல்லாம் சாட்டை பளார் பளார் என்று புரண்டது! அந்த



அலங்கார மாளிகையிலே நின்ற பதுமைகள், படிமப் பேடகங்கள், நாயக விளக்குகள் எல்லாவற்றையும் வாளால் வீசி வீசிக் கீழே சாய்த்தான்! பணியாளர்கள் எல்லாம் அலறிப் புடைத்துக் கொண்டு ஓடினார்கள்! தாதிகளும் அந்தப்புரத்துச் சேடிப் பெண்களும் பயந்து நடு நடுங்கிக் கொண்டு நாலு பக்கமும் சாடினார்கள். வீரவிக்கிரமன் ஒரு பைத்தியக்கார வெறியனைப் போல ஆவேசத்தோடு கூப்பாடு போட்டான்!

குங்கும மாளிகை போர்க்களத்தைப் போலச் சின்னாபின்னமாகச் சிதறுண்டது! விக்கிரமனுடைய வாளுக்கும் சாட்டைக்கும் தப்பிக் கொண்டு ஆடவர்களும் பெண்டிர்களும் அங்கங்கே யிருந்த அறைகளுக்குள்ளே ஓடிச்சென்று கதவுகளை அடைத்துக் கொண்டார்கள்!



''பூபதியைக் காணவில்லை. அவனோடு யாழ் நங்கையும் மறைந்தாள்!'' என்ற செய்தி அத்தனை விபரீதப் புயலைச் சுழற்றி வீசியது. ஆனாலும் அத்தனை புயலுக்கும் மத்தியில் யாழ் நங்கையின் அன்னை 'விறு விறு' என்று நடந்து குங்கும மாளிகையின் இசை மன்றத்துக்குச் சென்றாள். என்ன ஆச்சரியம்! அங்கிருந்த பேரியாழையும் காணோம்!

எத்தனை பெரிய புயலும் அடங்க வேண்டும், எத்தனை பெரிய நெருப்பும் அணைய வேண்டும் என்று உலக நியதி இருக்கிறதல்லவா? அதன்படி வீர விக்கிரமனுடைய மனப் புயலும் கோப நெருப்பும் அடங்குவதற்கு ஒரு நாள் முழுதும் ஆயிற்று! அது வரை வீர விக்கிரமன் படிமவிலாசத்துக்குள்ளேயே மதம் பிடித்த யானையைப் போல் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தான்! அந்த அறையிலிருந்த அலங்காரப் பொருள்களும், திண்டுகளும் அவனுடைய சீற்றத்துக்கு இரையாயின!

சினம் தணிந்தது! கோபம் என்ற நெருப்பு அணைந்தது. அதன் பிறகு அறிவு கண் விழித்துப் பார்த்தது. உடனே பளிச்சென்று ஒரு யோசனை உதித்தது அந்த வீரவிக்கிரமனுக்கு: ஆதியிலிருந்தே யாழ் நங்கை பூபதியோடு தனியாகச் சந்தித்துப் பல சூழ்ச்சிகள் செய்திருக்க வேண்டும்! இல்லையென்றால் திடீரென்று இத்தனை கட்டுக்காவலையும் மீறி இவர்கள் இருவரும் எப்படி மறைந்திருக்கக் கூடும்? இவ்வாறு எண்ணினான் வீர விக்கிரமன். இதற்கு ஏற்றாற் போல் யாழ் நங்கையின் அன்னை பேரியாழ் மறைந்து விட்டது என்ற செய்தியையும் அவனுக்குத் தெரிவித்தாள்!

வீர விக்கிரமனுக்கு மெய்யான நிலைமை என்ன என்று ஒரு வகையாகத் துலங்க ஆரம்பித்தது. தாயைக் கூடப் பெரிதாக எண்ணாமல், அத்தனை பெரிய மாளிகையையும், அத்தனை வசதிகளையும் மறந்து விட்டு அந்தப் பேரியாழோடு அவ்வளவு தைரியத்தோடு ஒரு இளம் நங்கை மறைந்து செல்ல வேண்டும் என்றால், நிச்சயம் உதயசந்திரன் இந்த ஏற்பாட்டுக்கு வழி செய்திருக்க வேண்டும். இல்லையென்றால் இத்தனை சாமர்த்தியமாக இந்தக் காரியம் நடந்திருக்காது! அப்படியானால் தனக்குத் தெரியாமல் உதயசந்திரன் இந்தக் குங்கும மாளிகைக்கு எப்பொழுது வந்தான்? அன்றொருநாள் யாழ் வாசிப்பைக் கேட்பதற்காக உதயசந்திரன் குங்கும மாளிகைக்கு வந்திருந்தான் என்பது வீர விக்கிரமனுக்குத் தெரியும்! அவனுக்கு மட்டும் என்ன! ஊரில் எல்லாருக்குமே தெரியும் அது! பகிரங்கமாகத்தான் வந்தான் உதயசந்திரன்! ஆனால் அன்று யாழ் நங்கையைத் தனியாகச் சந்திக்கவில்லை அவன்! அப்படியானால் இத்தனை சூழ்ச்சிகளும் எப்படி நடந்தன? இந்த இளம் பெண் எப்படி இந்தச் சூழ்ச்சிகளுக் கெல்லாம் உடன்பட்டாள்!

இந்தக் கேள்விகள் எல்லாம் 'குபுகுபு' என்று வீர விக்கிரமனுடைய யோசனையிலே எழுந்து அறிவைக் குழப்பின. யாழ் நங்கையின் அன்னையிடம் ஆயிரம் கேள்விகள், பதினாயிரம் விதமாகக் கேட்டான்! அவளுக்கும் இந்தச் சூழ்ச்சியிலே பங்கு இருக்குமா என்று சந்தேகித்து அவளையும் எப்படி எல்லாமோ அலசிப் பார்த்தான்! ஒன்றிலும் ஒரு விஷயமும் புலப்படவில்லை.

வீர விக்கிரமனுக்கு என்ன செய்வது என்று ஓடவில்லை! பூபதி மறைந்தான்: யாழ் நங்கை மறைந்தாள்; பேரியாழும் போய் விட்டது! இந்த நிலைமையில் இனிமேல் தன்னுடைய திட்டங்கள் எல்லாம் என்ன ஆவது? வலம்புரித் தீவுக்கு அனுப்பிய தூதுவர்கள் திரும்பி வரும்


நீம்
டூத் பேஸ்ட்
வேம்பின் சேதனக் குணங்கள் கொண்டது இந்த ஒரே பற்பசை தான் - பற்களுக்கும் ஈறுகளுக்கும் மிகச் சிறந்தது!
கல்கத்தா கெமிக்கல்
CF-47MU-56
தென் இந்திய ஆபீஸ் :
5/149, பிராட்வே, சென்னை -1


Parry's
பாரி கம்பெனியார்
மோதிரம் போன்ற மிட்டாய்களை
இப்பொழுது வழங்குகிறார்கள்
PARRY'S SWEETS
பெப்பர்மின்ட் ரிங்ஸ்
Parry's

போது அவர்களிடம் மேற்கொண்டு என்ன பேசுவது?

இப்படி எண்ணியதும் வீர விக்கிரம னின் கோபம் எல்லாம் உதயசந்திர னிடம் திரும்பியது! இந்தப் பொல் லாத உதயசந்திரனை உயிரோடு விட்டு வைப்பதே பிசகு! அவன் ஒருவன் இருந்து கொண்டு எத்தனை பெரிய தந்திரங்களைச் செய்கிறான்! எந்த முயற் சியையும் நடக்கவிடாமல் செய்கிறானே! —என்று மனம் பொருமினான் வீர விக்கிரமன்!

வலம்புரித் தீவுக்கு ஓடி விடலாம் என்று நினைத்துப் பூபதியும், யாழ் நங்கையும் பேரியாழோடு மறைந்து விட்டார்கள் என்று தீர்மானித்தான் விக்கிரமன். இவர்களுக்குத் துணையாக உதயசந்திரன் உதவி செய்திருக்கிறான் என்பதையும் யூகித்தான் அவன். இனி மேல் இந்தக் கொடும்பாளூரில் இருந்து கொண்டு ஒரு விநாடியைக் கூட வீணாக் கக் கூடாது என்ற முடிவுக்கு வந்தான். மேற்கொண்டு செய்ய வேண்டிய நட வடிக்கைகள் முக்கியமானவை! அவற்றை ஆணித்தரமாகச் செய்து விட வேண்டும்! அப்படிச் செய்ய வேண்டுமானால், உடனே பாண்டி யர்களிடம் செல்ல வேண்டியது தான் வழி! அவர்களோடு கலந்து ஆலோசித்துத் தாமதம் இல்லாமல் இந்த உதயசந்திரனை ஒழித்துவிட வேண்டும் என்று தீர்மானித்துக் குங்கும மாளிகையிலிருந்து புறப் பட்டான் வீரவிக்கிரமன்!

பதினாறும் அத்தியாயம்

நல்வரவு

உதய சந்திரனோடு குதி ரையிலே சென்று கொண் டிருந்த பூபதிக்கு மனத்தில் ஏதேதோ சிந்தனைகள் திமுர் திமுர் என்று எழுந் தன!

சித்தன்னவாசல் குகையில் பேசிக் கொண் டிருந்த போது, உதயசந் திரன் சொன்ன ஒரு வாக்கியம் பூபதிக்கு இப் பொழுதும் அடிக்கடி நினைவு வந்தது.

''இளவரசே! உங்கள் இலட்சியம் என்ன என் பதை நான் நன்றாக அறிவேன். அதே சமயம், அந்த இலட்சியத்தில் இப் பொழுது புதிதாக என்ன மாறுதல் ஏற்பட் டிருக்கிறது என்பதும் எனக்கு நன்றாகத் தெரியும்!''

'இப்படிச் சொன்னார் அல்லவா, உதய சந்திரன்? புதிதாக ஏற்பட்டிருக்கும் மாறுதல் என்று எதைக் குறிப்பிட்டார்? யாழ் நங்கையைக் கண்டு அவளிடம் மனத்தைப் பறி கொடுத்ததைக் குறிப் பிடுகிறாரோ? யாழ் நங்கையிடம் உறுதி மொழி கூறிவிட்டு வந்ததைத்தான் இப்படிக் குத்திக் காட்டுகிறாரோ?'

இவ்வாறு நினைத்தான் பூபதி! உடனே யாழ் நங்கையைப் பற்றிய சிந்தனை மேலெழுந்தது.

'குங்கும மாளிகையிலிருந்து நம்மை இந்தச் சித்தன்ன வாசல் மலைக்கு அனுப்பியவள் யாழ் நங்கைதான்! அப்படி யிருக்கும்போது சமணத்துறவி வேறு விதமாகச் சொன்னாரே? என்னை இங்கே அனுப்பிய புண்ணிய புருஷர் உதயசந்திரனேதான் என்றல்லவா அவர் குறிப்பிட்டார்! அப்படியானால் குங்கும மாளிகையிலிருந்து நான் சிவிகை யிலே தப்பி வந்ததற்கு உதவி செய்தவர், அப்படி வருவதற்கு அடிப்படைக் காரணமாக இருந்தவர் இந்த உதயசந்திரன் தானோ? அது உண்மையாக இருக்குமானால் யாழ் நங்கை யைக் கண்டு பேசியிருக்கி றாரா, இந்த உதய சந்திரன்? குங்கும மாளி கையிலிருந்து



நான் புறப்படுவதற்கு முன்பு அங்கே வந்தாரா உதயசந்திரன்? வந்து யாழ் நங்கையிடம் இந்த ஏற்பாடுகளை யெல்லாம் விரிவாகச் சொல்லி என்னையும் சிவிகையிலே அனுப்பி விடும்படி கூறி யிருப்பாரோ? யாழ் நங்கை ஏன் அந்த விஷயங்களை யெல்லாம் என்னிடம் சொல்லவில்லை? அந்தச் செவிட்டு வேலைக் காரன் கூட வேறு ஒரு செய்தியும் சொல்லவில்லையே! உதயசந்திரன் குங்கும மாளிகைக்கு வந்து போனதாகவே அந்தச் செவிடன் காட்டிக் கொள்ளவில்லையே! இதெல்லாம் என்ன இரகசியம் என்றே தெரியவில்லையே!'

பூபதி இவ்வாறெல்லாம் எண்ணி மனம் குழம்பினான். என்றாலும் அவனுக்கு இத்தனை குழப்பங்களுக்கு மத்தியிலும் உதய சந்திரனிடம் சந்தேகமோ, மன மாற்றமோ எள்ளளவும் ஏற்பட வில்லை.



''உதயசந்திரன் ஒருவேளை ஏதாவது மாறு வேடத்தில் குங்கும மாளிகைக் குள்ளே வந்து போயிருப்பார்! அதனால் அந்தச் செவிட்டு வேலைக்காரனுக்குக் கூட அந்த விஷயம் தெரிந்திராது! இந்த அரசியல் மேதை எந்த நேரத்தில் என்ன செய்வார் என்று எப்படிச் சொல்ல முடியும்! ஆனால் ஒன்று. இவரால் நமக்கு எந்தவிதமான விபரீதமும் நேராது. அது நிச்சயம்!''

இவ்வாறு மனத்துக்குள்ளே சொல்லிக் கொண்டான் பூபதி.

''என்ன இளவரசே! தஞ்சை நகரத்தைப் பார்த்ததும் ஒரே மௌனத்தில் ஆழ்ந்து விட்டீர்கள்! நகரத்தின் அமைப்பு உங்களுக்குத் திகைப்பைத் தருகிறதா? அல்லது என்னுடைய போக்கு உங்களுக்குப் பிடிக்கவில்லையா? எது உண்மை? சொல்லுங்கள்!'' என்று கேட்டுக்கொண்டே புன்முறுவல் புரிந்தார் உதயசந்திரன்! அந்தப் புன் முறுவலில் ஏதோ ஒரு மோகனம் இருந்தது! விவரிக்க முடியாத ஒரு காந்த சக்தி அந்தப் புன்முறுவலிலிருந்து வந்து பூபதியை இழுத்தது!

''இவர் வெறும் அமைச்சர் இல்லை. ஏதோ ஒரு தெய்விகமான சக்தி இவரிடம் இருக்கிறது! துறவிகளோடும் மகான்களோடும் நெருங்கிப் பழகி ஏதோ ஒரு பேராற்றலை வாங்கி வைத்துக் கொண்டிருக்கிறார் இந்த ஞானி! இவரைப் போய்ச் சந்தேகப்படுவதே மிகவும் பாபம்!''

இப்படி நினைத்துக்கொண்டே சித்திராங்க பூபதி சொன்னான்:

''அரசமுனிவரே! தங்களிடம் என்ன சக்தி இருக்கிறது என்று எனக்குச் சொல்லத் தெரியவில்லை. தங்களைப் பார்க்கும்போதெல்லாம் ஏதோ ஒரு மின்னல் என்னுடைய உடம்பிலே பாய்கிறது! தங்களுடைய ஞான ஒளியை மற்றவர்கள் கண்டிருக்கிறார்களோ இல்லையோ எனக்குத் தெரியாது! ஆனால் என் வரையில் ஒன்று நிச்சயமாகத் தெரிகிறது. துறவிகளின் உடையிலே அரசப் பிரதானிகள் எல்லாம் வளைய வருகிற இந்த நாளில், நீங்கள் அரச உடையிலே வளைய வருகிற ஒரு துறவி. ஒரு பெரிய ஞானி!''

கிருஷ்ணனிடம் சகாதேவன் பேசியது போல, உதயசந்திரனிடம் சித்திராங்க பூபதி பேச ஆரம்பித்தான்.

அந்தப் பேச்சுக்கு எவ்விதமான மறு மொழியும் கூறாமல் உதயசந்திரன் வேகமாகக் குதிரையைச் செலுத்தினார். ஒரே பாய்ச்சலில் அவர் ஏறியிருந்த குதிரை முத்தரையர்களின் மாளிகைக்கே வந்து விட்டது! பூபதி திகைப்பிலிருந்து மீண்டு அடுத்த கணம் தன்னுடைய குதிரையையும் வேகமாக ஒரு கண்டுச் கண்டினான்! அந்தக் குதிரையும் வாயு வேகமாகப் பாய்ந்து சென்று உதய சந்திரனின் குதிரையோடு சேர்ந்து கொண்டது.

தஞ்சைமா நகரில் முத்தரையர்களின் அரண்மனை வாயிலிலே மற்ற அரசப் பிரதானிகளோடு வலம்புரித் தீவின் மந்திரநாயகமும் விருந்தினர்களை எதிர் கொண்டு அழைப்பதற்காகக் காத் திருந்தார்!

(தொடரும்)

Printed and Published by T. Sadasivam at the Kalki Press, Kilpauk, Madras-10
for the Proprietors Messrs Bharathan Publications Private Limited
Managing Editor: T. Sadasivam



இப்பொழுது...

ரெக்ஸோனுவில்

முன்னைவிட மிக அதிக நறுமணம்!

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon